கல்கி

KALKI 9-5-82 ரூ.1 20



புதிய

கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய பற்களின் மென்மையான எனாமல் எளிதில் துவாரங்களுக்கும் சிதைவுக்கும் உள்ளாகிறது. பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராக பாதுகாப்பு தேவை.

புதிய ஃப்ளோரிகார்ட் டூத் பேஸ்ட் பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள் குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது. துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனாமலுடன் இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்.எஃப்.பி ஃப்ளோரைட் இதில் உள்ளது.

கோல்கேட் ஃப்ளோரிகார்ட் புல்லரிக்கும் புதுச்சுவை கொண்டது. உங்கள் குடும்பத்திற்கு இன்றே வாங்குவீர்.

MFP FLUORIDE

உலகெங்கும் உள்ள ஆராய்ச்சிசாலைகளில் சோதிக்கப்பட்டுள்ள எம்.எஃப்.பி ஃப்ளோரைட் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப் பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது. கோல்கேட்டின் நீண்ட ஆராய்ச்சி மட்டுமே இந்த தனிப்பட்ட எம்.எஃப்.பி ஃப்ளோரைடை உங்களுக்கு வழங்க முடியும்.



ஃப்ளோரிகார்டில் உள்ள எம்
எ.ஃப்.பி ஃப்ளோரைட் எனாமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.


தமிழ்நாடு, கேரள மாநிலங்களிலும், கர்நாடகத்தில் குறிப்பிட்ட சில மார்க்கெட்டுகளிலும் இப்போது கிடைக்கும்.

CFT.G.3 TM

ஐ.க்யூ.

உங்கள் 'ஐ க்யூ'வைச் சோதிக்க ஒரு சிறு தேர்வு. ஒவ்வொரு வரிசையிலும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு கட்டங்களுக்குள் அமைந்துள்ள ஓர் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு ஐந்தாவது கட்டத்தைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

விடை 5-ம் பக்கம்



இலங்கை நடத்திய அகில உலக இந்து மாநாடு

நா.மகாலிங்கம்



இராஜதுரை

இரண்டாயிரம் மைல் அகலமும் இரண்டாயிரம் மைல் நீளமும் பல கோடி இந்து மக்களையும் கொண்ட இந்தப் பாரத நாடு செய்யத் தவறிவிட்ட ஒரு மாபெரும் காரியத்தைக் கையகலமே உள்ள சின்னஞ் சிறு இலங்கைத் தீவு செய்து மகத்தான புகழை ஈட்டிக் கொண்டதுடன் சரித்திரத் திலும் அழியா இடம் தேடியுள்ளது.

பௌத்தர்கள்நிறைந்த அந்த நாடு சிங்களவர்களின்ஆட்சியில்உள்ளஅந்த நாடு-பௌத்த மதத்தை அரசின் மதமாக ஏற்றுக்கொண்ட நாடு – மாற்று மதம் ஒன்றுக்கு மகத்தான விழாவை மகோன்னதமான முறையில் விழா எடுத்துத் தன் பரந்த மனத்தையும் பெருந்தன்மையையும் வெளிப்படுத்திப் பெரும் சிறப்புப் பெற்று விட்டது.

ஏப்ரல் 21ம் தேதியிலிருந்து 26ம் தேதி வரை ஐந்து நாட்கள் இலங்கைத் தீவும், சிங்கள அரசாங்கமும், இலங்கை நாட்டில் உள்ள ஆங்கிலப் பத்திரிகைகளும், தமிழ்ப் பத்திரிகைகளும், சிங்களப் பத்திரிகைகளும் திருவிழாக் கோலம் பூண்டிருந்தன.



ஜெயவர்த்தன



பிரேமதாசா

உலகெங்கிலும் இருந்து வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேராளர்களையும் கல்யாண வீட்டுக்கு வரவேற்பது போல் வரவேற்றார்கள்; உபசரித்தார்கள்; சம்பந்திகளைப் போல் நடத்தினார்கள். ஏன், தலைமீது தூக்கி வைத்துக் கொண்டு மகிழ்ச்சிக் கூத்தாடினார்கள் என்றே சொல்லலாம்.

உலக இந்து சமய மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளாக வந்திருந்தஐந்நூறுக்கும்மேற்பட்ட பேராளர்களையும் இலங்கை அரசாங்கமே தன் விருந்தினர்களாக நினைத்து அவர்களை வரவேற்கவும் தங்கவும் சுற்றிப் பார்க்கவும் விசேஷ ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

ஒவ்வொரு முக்கியமான பிரதிநிதிக்கும் ஒரு கார் வீதம் ஒதுக்கி யிருந்தது. கார் என்றால் எப்பேர்ப்பட்ட கார்! பென்ஸ், டயோட்டோ போன்ற வெளி நாட்டுக் கார்கள் அதுவும் குளிர்சாதன வசதி செய்யப் பெற்ற ஏர் கண்டிஷன் கார்கள். ஒவ்வொரு காருடனும் பிரதிநிதிகளுக்கு வழிகாட்டவும், உதவவும் ஒரு அரசாங்க அதிகாரி,



மகாநாடு ஐந்து நாட்களும் காரும் அதிகாரியும். அந்த அந்தப் பிரதிநிதிகளுடன் கூடவே இருந்தார்கள்.

போகச் சொன்ன இடத்திற்குக் காரை ஓட்டினார்கள். நிறுத்தச் சொன்ன இடத்தில் நிறுத்தினார்கள்.

இலங்கையில் எந்தக் கோடிக்குப் போகச் சொன்னாலும் போகச் சித்தமாக இருந்தார்கள்.

பிரதிநிதிகள் தங்குவதற்குக் கொழும்பு நகரத்திலேயே மிகச் சிறந்த ஓட்டல்களில் வசதி செய்திருந்தார்கள்.

விமான நிலையத்திலேயே பிரதிநிதிகளை அவர் அவர்க்குரிய அரசாங்க அதிகாரி வரவேற்று அழைத்துக் கொண்டு போனார்..

மகாநாடு நடந்த இடமோ 10 ஏக்கர் நிலப்பரப்பு உள்ள விஸ்தாரமான பிரதேசம். அதற்குள் 1500 பேர் மிகத் தாராளமாக உட்கார்ந்து நிகழ்ச்சிகளைப் பார்க்கக் கூடிய மிகப் பெரிய குளிர்சாதன வசதியுடன் கூடிய மண்டபம்.

''பண்டாரநாயகா நினைவு மன்றம்'' என்று அழைக்கப்பட்ட அதை ஒரு சுற்றுச் சுற்றி வந்தாலே கால் வலி எடுத்து விடும். அதில் அமைக்கப்பட்டிருந்த இருக்கைகளில் மூன்று மொழிகளைக் கேட்கும் சாதன வசதி செய்யப்பட்டிருந்தன. பிரதிநிதிகள் தம், தம் ஆசனத்தில் இருந்தவாறே அந்த மைக் மூலம் மேடையில் இருப்பவர்களுடன் விவாதம் செய்ய முடியும். அதே போல மேடையில் பேசுபவர் எந்த மொழியில் பேசினாலும் தம் முன்னுள்ள ஒரு பொத்தானை அழுத்தினால் தம் தம் தாய்மொழியில் பேச்சைக் கேட்க முடியும். தமிழ், இங்லிஷ், சிங்களம் ஆகிய முக்கிய மொழிகளில் இவ்வாறு மொழி பெயர்ப்பு வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தப் பண்டாரநாயகா நினைவு மன்றம் முழுக்க முழுக்க சீனநாடு கட்டிக் கொடுத்தது. ஆண்டுதோறும் அதைப் பராமரிப்பதும் சீன நாடுதான். மிகச் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். இந்த மண்டபத்தின் பிரதான மன்றத்தைத் தவிர ஆறு தனித் தனி அரங்குகள் வேறு இருக்கின்றன. பிரதான மண்டபத்திலும் மற்ற ஐந்து அரங்குகளில் மூன்று அரங்குகளிலும் ஒருசேர ஐந்து நாட்களும் மகாநாட்டு நிகழ்ச்சிகள் நடந்தன.

இதைத் தவிர பம்பலப்பட்டி கதிரேசன் மண்டபம், பம்பலப்பட்டி இந்துக் கல்லூரி, வெள்ளவத்தை இராமகிருஷ்ண . மிஷன் மண்டபம், கொழும்பு விவேகானந்த சபை மண்டபம், ஜிந்துப்பட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மண்டபம் ஆகிய இடங்களில் காலையும் மாலையும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எல்லா இடங்களிலும் மக்கள் வெள்ளம் போல் திரண்டு இருந்து அமைதியாக நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர். பல்வேறு அறிஞர்கள் கருத்துரைகள் வழங்கினார்கள். இலங்கை அரசின் ஆதரவுடன் முதன் முதலாக நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் பெற்ற உலக இந்து மகாநாட்டின் நினைவாக விசேஷத் தபால் தலை ஒன்றையும் வெளியிட்டுச் சிறப்பித்திருந்தார்கள். திரு சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் இறை வணக்கத்துடன் மாநாடு ஆரம்பமாகியது. பரதநாட்டிய கலாநிதி டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்களும் தமிழக ஆஸ்தான நர்த்தகி சுவர்ணமுகியும் தமிழகத்தின் புரா







சத்தான உணவும், சத்தான குணமும்!

அட்டைப்படத்தில் கார் பானெட் மேல் அமர்ந்திருக்கும் லக்ஷ்மி எத்தனை அழகாக 'போஸ்' கொடுக்கிறாரோ அத்தனை லாகவமாகக் கார் ஓட்டவும் செய்வார். ராணி மேரிக் கல்லூரியில் பி.எஸ்.ஸி. (நியூட்ரிஷன்) படித்தவர். அதாவது சத்துணவு பற்றிய படிப்பு. (முதல்வரின் சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்த நியூட்ரிஷன் பட்டதாரிகள் வேலையில் அமர்த்தப்படுவார்கள் என்று யாரும் கனவு காண வேண்டாம்!) நியூட்ரிஷன் படித்தவர்கள், குழந்தைகள், நோயாளிகள், வயதானவர், வாலிபர் என்று ஒவ்வொருவருக்கும் ஏற்ற சத்துணவைத் தயாரித்து ஆரோக்கியம் பேணும் ஆற்றல் படைத்தவர்கள்.

லக்ஷ்மி, தந்தை வழியில் பிரபல சமூக நல ஊழியர் டாக்டர் முத்து லக்ஷ்மி ரெட்டியின் பேத்தி என்பதைப் பார்க்கையில் இவரும் சீர்திருத்த மனப்பான்மை கொண்டிருப்பதில் வியப்பில்லை. தமது தோழி ஒருத்தியை மணக்கப் பத்தாயிரம் ரூபாய் வரதட்சிணை கேட்ட மாப்பிள்ளையிடம் வாதாடி வெற்றி பெற்றுத் திருமணத்தை நடத்தி வைத்திருக்கிறார்.

லக்ஷ்மி கலப்புத் திருமணத்திலும் நம்பிக்கை உடையவர். இவர் குடும்பத்தில் பலரும் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களே.

பேட்டி: "திக்ஷ

வண்ணப் படம்: உத்ரா

தன பரதக் கலையின் சிறப்பை ஆடிக் காட்டினர்.

வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் அருள்மிகு மாணிக்க விநாயகர் கோவிலில் சிறு யாகத்துடன் விழாக்கள் ஆரம்பமாயின. இலங்கை அரசு அறநிலையப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராசதுரை இந்துப் பண்பாட்டின்படி வேட்டியும் அங்கவஸ்திரமும் தரித்து முன் வரிசையில் தம் துணைவியாருடன் அமர்ந்திருந்தார்.

இந்து மத சாஸ்திரங்களில் விற்பன்னர்களான அறிஞர்கள் வரிசையாக அமர்ந்திருந்தார்கள். பின்னர் அலங்கரிக்கப்பட்ட யானை மீது திருமறைச் சுவடிகள் ஏற்றப்பட்டு பண்டாரநாயகா நினைவு மண்டபத்தை நோக்கி எல்லோரும் ஊர்வலமாகக் கிளம்பினார்கள். தமிழ்ப் பண்பாட்டுடன் பாவாடையும் தாக்கெட்டும் அணிந்த இளம் சிறுமிகள் கையில் சுடர் விளக்குகளை ஏந்தி முன்னால் சென்றார்கள். அவர்களுக்குப் பின்னால் தமிழகத்தின் புராதன கோயில் வாத்தியங்களான மேளம், துந்துபி, மத்தளம், சங்கு முதலான திருச்சின்னங்களை முழங்கிக் கொண்டு சென்றார்கள். பண்டார நாயகா நினைவு மண்டபத்தை அடைந்ததும் அகில உலக இந்து சமய மகாநாட்டின் பிரதிநிதிகளை இந்து சமய சம்பிரதாய முறையில் வரவேற்று ஏற்றுக் கொண்டார்கள்.

விழா ஐந்து நாட்களும் அந்தப் பண்டார நாயகா நினைவு மன்ற வளாகத்தில் தமிழ் மணமும், தெய்வ மணமும், இந்து சமய மணமும் இணைந்து கமழ்ந்தன.

நேப்பாளம் போன்ற தூர தேசங்களிலும் இருந்து பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இந்தியாவைத் தவிர உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து இருபத்து ஐந்து நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். உலக நாட்டுப் பிரதிநிதிகள் பெரும்பாலோர் உத்திராட்ச மாலைகளை அணிந்து கொண்டிருந்த காட்சி இந்து மதச் சூழலை உருவாக்கிக்கொண்டிருந்தது.

தமிழ்நாட்டிலிருந்து சிறப்பாக ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடம், தருமபுர ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனம்; திருப்பனந்தாள் மடம் ஆகிய மடங்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருந்தன. திருமுருக கிருபானந்தவாரியார் புலவர் கீரன் போன்ற சமயப் பிரசாரகர்களும் கலந்து கொண்டார்கள்.

தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த அறிஞர்களின் பெயர்களைச் சொன்னால் அதுவே ஒரு பெரும் பட்டியலாகி விடும்.

இலங்கையின் ஜனாதிபதி மாண்புமிகு ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவர்கள் மகாநாட்

டைத் தொடங்கி வைத்தார். இலங்கைப் பிரதமர் மாண்புமிகு ஆர். பிரேமதாசா நிறைவு நாள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அவர்கள் பௌத்தர்களாக இருந்தும் மகாநாட்டைத் தங்கள் சொந்த மகாநாடு போல் நடத்திக் கொடுத்தார்கள்.

முக்கியமாக இந்தியாவில் உள்ள நம்முடைய போலி அரசியல்வாதிகளைப் போல் இல்லாமல் இந்து மத மகாநாடு என்றதும், மிரண்டு ஓடி ஒளியாமல் தைரியமாக முன் வந்து அரசாங்க உதவிகள் அத்தனையும் செய்து கொடுத்ததுடன் மகாநாட்டுக்கு நேரிடையாக வந்து பௌத்தமும் இந்து மதத்தின் குழந்தைதான் என்ற ரீதியில், தாயான இந்து மதத்துக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்தார்கள்.

மகாநாட்டின் நிறைவு நாள் அன்று இரண்டு முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அகில உலக இந்து ஆராய்ச்சி நிலையம் ஒன்றை இலங்கையில் அமைப்பது என்பது ஒரு தீர்மானம். இந்து சமய தத்துவங்களைப் போற்றிப் பாதுகாப்பதுடன் எல்லா இந்துக்களையும், ஏன், எல்லா மனிதர்களையும் பேதமில்லாமல் மதித்து நடக்கும்படி இந்துக்களை நெறிப்படுத்துவது என்பதும் இன்னொரு தீர்மானம்.

இந்த இரண்டு தீர்மானங்களும் பலத்த விவாதத்துக்கு இடையில் ஒழுங்கு படுத்தப்பட்டு நிறைவேறின.

இந்த மகாநாட்டின் சிறப்புக்கு இலங்கை இந்து மத விவகாரத் துறை அமைச்சர் மாண்புமிகு ராஜதுரையின் பங்கு மிகப் பெரியது. மகாநாட்டின் வெற்றிக்கு முழுக்க முழுக்க அவர்தான் காரணம். இலங்கை அரசு யந்திரம் முழுவதையும் அவர் மகாநாட்டின் வெற்றிக்குத் திருப்பிவிட்டு, இலங்கை அரசுக்கே பெரும் கீர்த்தியைச் சேர்த்துக் கொடுத்துவிட்டார்.

உண்மையில் இந்த மகாநாட்டில் பங்கு பெற்று அதை வெற்றியடையச் செய்ததன் மூலம் இலங்கையின் பௌத்த அரசு, தான் தான் உண்மையான மதச் சார்பற்ற அரசு என்பதை வெளிப்படுத்தி விட்டது.

மகாநாட்டில் இலங்கை ஜனாதிபதியும், பிரதமரும், அமைச்சர் ராஜதுரையும் எவ்வளவு உயர்ந்த மனிதர்கள் என்பதற்கு அத்தாட்சியாக விளங்கினார்கள்.

அப்பேர்ப்பட்டவர்களைத் தலைவர்களாக அடைந்த இலங்கை மக்கள் மிக பாக்கியசாலிகள். கண்யம், பெருந்தன்மை, நியாயம் தர்மம், ஜனநாயகத்தில் பற்று ஆகியவற்றுக்குத் தலையாய சின்னமாக விளங்கும் அவர்கள் இன்னும் பல ஆண்டு காலம் இலங்கையின் அரியாசனத்தில் இருந்து, பதவி வெறி பிடித்த அரசியல் வாதிகள் கையில் அகப்பட்டு அல்லலுற்ற இலங்கையை நேரிய வழியில் நடத்திச் செல்ல இறைவன் அருள் புரிய வேண்டும்.

விடைகள்:

1. துளிகளின் எண்ணிக்கை ஐந்து ஐந்தாகக் குறைந்துள்ளது. முதல் கட்டத்தில் 35 துளிகள். எனவே ஐந்தாவது கட்டத்தில் 15 துளிகள்.

2. A,B,C,D... வரிசைக் கிரமத்தில் ஒரு கட்டத்திற்கும், மற்றொரு கட்டத்துக்கும் இடையில் இரண்டு எழுத்துக்கள் விடப்பட்டு எழுத பட்டுள்ளன.


3. பூஜ்யத்தைக் கொண்டு எந்த எண்ணைப் பெருக்கினாலும் விடை பூஜ்யம்தான். எனவே ஐந்தாவது கட்டத்தில் மட்டுமல்ல அனைத்துக் கட்டங்களின் மதிப்பும் பூஜ்யம் தான்.

4. இருள். ஏனெனில் ஐந்தாவது கட்டத்தின் நேரமான ஏழு மணிக்குச் சூரியன் மறைந்துவிடும்.

5. ஐந்தாவது கட்டத்தில் 15^{10-10} என வரவேண்டும். ஆனால் 15^{10-10} என்பதை 15^{0} என எழுதலாம். எந்த எண் ஆனாலும் சரி. அதன் 'பவர்' (Power) பூஜ்யமாக இருந்தால் அதன் மதிப்பு 1 மட்டுமே.

6. நான்காவது கட்டம்தான் ஐந்தாம் கட்டத்திலும் அமையும். காரணம் இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்.

-எம். ஜி. இராஜேஸ்வரி



நீங்கள் கேட்டவை / தராசு

✠ எஸ். சிவசங்கர், ஸ்ரீமுஷ்ணம்

? இன்சாட்டின் ஆன்டென்னுவை நமது விஞ்ஞானிகள் சரிசெய்து விட்டார்களே இப்போதாவது அவர்களைப் பாராட்டுவீர்களா?

! இப்போதாவது என்றால் என்ன அர்த்தம்? 25–4–82 இதழிலேயே நான், நமது விஞ்ஞானிகள் செய்ய முடியாததைச் செய்து காட்டியதாகப் பாராட்டித்தான் இருக்கிறேன். INSATஐ முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளத்தேவையான முன்னேற்பாடுகளைச் செய்யாமல் அவசரப்பட்டு INSATஐ அனுப்பியதைத்தான் குறைகூறி யிருக்கிறேன். இதேபோல்தான் பாம்பே ஹை விஷயமும். ஒரு நாளைக்கு 9 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இயற்கை வாயுவை உபயோகப்படுத்திக் கொள்ள முடியாமல் எரித்து விணடித்துக் கொண்டிருக்கிறார்கள். சரியான முன்னேற்பாடு இல்லாததால் ஏற்படும் கோடிக் கணக்கான நஷ்டத்தைத் தாங்குவது பொதுமக்கள் தான்.

✠ எஸ். எஸ். மணி, திருவனந்தபுரம்

? தப்புச் செய்கிறோம் என்று தெரிந்தே சிலர் தப்புச் செய்கிறார்களே, இது சரியா?

! தப்பு! தப்பு! ஹண்டே சொல்கிறார், குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளக் கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் முன்வருவது உற்சாகமளிப்பதாக இருக்கிறது என்று. (ஹிந்து 23–4) புள்ளி விவரம் கூறுகிறது: கிறிஸ்தவர்களே அதிகமுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் எண்ணிக்கை மிகவும் குறைந்து போயிற்று என்று. (எக்ஸ்பிரஸ் 23–4) இந்த முரண்பாடு அமைச்சர் தெரிந்தே செய்கிற தப்பு என்று நாம் நினைப்பது தப்பா?

✠ பி. டி. சிதம்பர சூரியநாராயணன், பெரியகுளம்

? அரசு பதில் நீதியுடன் இருக்குமா? தராசு பதில் சமநிலையில் இருக்குமா?

! இருக்கிறதோ, இல்லையோ, இருக்கவேண்டும் என்ற முயற்சியாவது இருப்பது சத்தியம். நக்கீரனின் பதிலில் இந்த முயற்சி கூட இல்லை, நிச்சயம்.

'தினமணி கதிரின் புதிய ஆசிரியர் கஸ்தூரிரங்கனைக் கல்கி விழுந்து விழுந்து புகழ்கிறதே' என்று ஒரு பொய்யான கேள்வி. அதற்கு 'நா.பா. பேரில் கல்கிக்குக் கடுப்பு' என்று ஒரு அபத்தமான பதில். முதலில் கல்கியால் பெருமையுற்று (குறிஞ்சி மலர், பொன்வண்டு) பிறகு கல்கிக்குப் பெருமை தேடித் தந்த (துளசி மாடம்) நா. பாவிடம் கல்கிக்கு என்ன கடுப்பு? 'ரங்கனை'ரைச் சேவித்து அதிர்வேட்டுக் கிளப்பி தீபாவளி கொண்டாடுவதால் கல்கிக்கு என்ன லாபம்? 18–4–82 இதழில் தராசு கஸ்தூரி ரங்கனைக் குறை கூறி எழுதியது தான் அதிகம்.

✠ பி. எல். ஜீ. கிருஷ்ணன்

? இப்போது மக்களிடையே சென்ஸ் ஆஃப் ஹியூமருக்குப்பதில் சென்ஸ் ஆஃப் ரூமர்தான் அதிகமாயிருக்கிறது. இல்லையா?

! ரூமரிலேயே இணைந்த ஹியூமரும் உண்டு. அரபு நாடுகளுக்கு அனுப்பி வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஏகப்பட்ட பேரிடம்









பணம் சுருட்டினார் தமிழக இ. காங்கிரஸ் தலைவர் தங்கபாலு என்பது ரூமர். தமிழக இளைஞர் இந்திரா காங்கிரஸ் காரியதரிசிகளே தங்கள் தலைவருக்கு எதிராகச் செயல்பட்டுக் குற்றச்சாட்டுக்களை டில்லி சென்று மேலிடத்தில் சமர்ப்பித்துவிட்டு வந்தனர் என்பது ஹியூமர்.

✠ மஞ்சுதேவன், சென்னை-17

? கிரிக்கெட் டீம் செலக்‌ஷனில் மூன்று பேர்தான் தென் இந்தியர்கள். அதில் ஒருவர்கூட தமிழகத்திலிருந்து இல்லையே? நியாயமா?

! ''தேர்வுக் கமிட்டியின் முடிவைப் பிரச்னைக் குரியதாக்கி விவாதிப்பது ஆட்டத்துக்கும் ஆட்டக்காரர்களுக்கும் கெடுதல் செய்யும்'' என்று எழுதும் பேடி, அதே கட்டுரையிலேயே அயல் நாடுகளுக்கு முதல் முறையாகச் செல்பவர் டீமில் ஐந்துபேர் உள்ளதையும், 'பார்க்கர், சுக்லா, சிவ ராமகிருஷ்ணன் ஆகியோரை டீமில் சேர்த்துக் கொள்ளாததையும் குறை கூறுகிறாரே. நியாயமா?



✠ ஹனீத் ஷரீப், கோவை-23

? உங்கள் எடைக்கு எடை ஏதாவது பொருள் தருகிறேன் என்று யாராவது சொன்னால் நீங்கள் எதை விரும்புவீர்கள்?

தயக்கமில்லாமல் மின்சார பல்புகளைத் தான் தேர்ந்தெடுப்பேன். வோல்டேஜ் ஃப்ளக்சுவேஷனில் மாசத்துக்கு நாலு பல்புக்குக் குறையாமல் ஃபட் என்று ஃப்யூஸ் ஆகிறது. புதுசு வாங்கிக் கட்டுப் படியாகலே. அம்பத்தூர் தொழிற்பேட்டையில் மின்வாரிய உயர் அதிகாரிகள், தொழிலதிபர்களைச் சந்தித்து மின் சப்ளை சம்பந்தமான அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் சில உத்தரவுகளையும் பிறப்பித்தார்களாம். நல்லது. அதோடு ஏழை சொல்லும் கொஞ்சம் அம்பலம் ஏறினால் தேவலாம்.

ராஜன், விருகம்பாக்கம்

? விலைவாசியை ரோஹிணியில் இணைத்து விண்ணுக்கு அனுப்பியது யார்?

! சமீபத்தில் டன்லப் கம்பெனியில் பணியாற்றும் ஓர் உயர் அதிகாரியிடம் பேசிக் கொண்டிருந்தேன். ஒரு கார் டயர் வாங்க நீங்கள் நூறு ரூபாய் தந்தால் அதில் எண்பது ரூபாய் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு வரிகள்." இருபது ரூபாயில்தான் உற்பத்திச் செலவு, தொழிலாளர் ஊதியம், நிறுவனத்தின் லாபம், போன்ற எல்லாம் என்றார். இந்த நிலைதானே இன்று இந்தியத் தொழில் அனைத்திலும் நிலவுகிறது? விலைவாசிகள் விண்ணில் வலம் வரக் கேட்பானேன்?

குமாரசாமி, திண்டிவனம்

? சந்திரனை வென்ற மனிதனால் கொசுவை வெல்ல முடியவில்லையே?

! புகை விடும் வளையங்கள், உடம்புக்குக் களிம்புப் பூச்சு, முழு வேகத்தில் சுழலும் மின் விசிறி முதலியவற்றால் கொசுத் தொல்லையிலிருந்து விடுபட முடியும் என்ற உத்தரவாதம் இல்லை. கொசுவலை நல்ல முதலீடு. அதிலும் எப்படியோ ஓரிரு கொசுக்கள் உள்ளே புகுந்துவிடலாம். ஆனால் இரவில் நம்மைக் கடித்த கொசுவைக் காலையில் பழி வாங்கி வெற்றி கொள்கிற திருப்தி இதில் மட்டுமே உண்டு!

✠ வெ. பாலசந்திரன், கல்கத்தா-26

? வேலை இல்லாத்திறமையுள்ள இளைஞருக்கு உங்கள் அறிவுரை என்ன?

! கல்லூரியில் நட்பு - அரும்பு. தொழில் துறையில் கூட்டு - மலர். கைகோத்துச் செயல்படுங்கள். சுய வேலை வாய்ப்பு, சிறு தொழில் வாய்ப்புக்களை அலசுங்கள். சிறுக ஆரம்பித்துப் பெருக வாழுங்கள்.

✠ தி. சுந்தரேசன், கோவை

? அமரர் கல்கி பாபநாசத்தில் கல்யாணி தீர்த்தத்தில் விழுந்து தற்கொலை செய்துகொள்ள முயன்றாராமே? காரணம், மூன்று முறை பி. ஏ. பரீட்சை எழுதி, மூன்று முறையும் தோல்வி அடைந்தது தானாமே? 'மேதைகள் வாழ்விலிருந்து' என்ற நூல் சொல்கிறதே?

! முழுப் பொய். 'கல்கி' பள்ளி இறுதிப் பரீட்சை எழுது முன்னரே காந்தி அடிகளின் அறைகூவலை ஏற்று, கல்விச் சாலையைப் புறக்கணித்துச் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார். சுயமாகப் படித்து அறிஞரானார். பள்ளியில் படித்த நாட்களில் மதிப்பெண்களைக் குவித்தவர்; எப்போதும் தன்னம்பிக்கையுடன் திகழ்ந்தவர்; அஞ்சா நெஞ்சினர்.


✠ கே. வி. சந்தானம், கும்பகோணம்

? உங்கள் பத்திரிகையில் ஜோசியம் ஒன்று குறைகிறதே?

! மற்றபடி நிறைவாக இருப்பதாகச் சொல்கிறீர்கள்; தாங்க்ஸ்.

ரு 10 பரிசு பெறுபவர்:

ஹனீத் ஷரீப்
6/24, பால்சாமி நாயுடு வீதி
ஆத்துப்பாலம், கோவை-23



டர்ர்.. ர்ர்ர்
ர்ர்..ர்ர்ர்.ர்ர்
ம்ஹோ..ம்ஹோ..ம்ஹோ..
ம்ஹோ.ம்ஹோ..ம்ஹோ..
அர்ஜென்டீனா
பிரிட்டன்
ஃபாக்லாந்து
தீவு
அரசு
ஆதரவாளர்கள்
மாநிலக்
கட்சி
ஐயோ, புலி!
ஐயோ, அநியாயம்!
அக்ரமம்!
காலிஸ்தான
வெறியர்கள்

மீண்டும் ஜீயர்!

கல்கி 25-4-82 இதழில் ஸ்ரீமத் அழகிய சிங்கரின் பேட்டி பற்றிய விமர்சனக் கடிதங்கள் படித்தேன். மேலும் ஸ்ரீமத் அழகிய சிங்கர் பேட்டியின் போது நேரிலேயே இருந்தேன். ஸ்ரீமத் அழகிய சிங்கர் தம் சொந்தக் கருத்தாகத்தான் சொன்னாரே தவிர மற்றவர்களைக் கட்டாயப் படுத்தவில்லை. ஸ்ரீமத் அழகிய சிங்கர் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபகரின் குரு பரம்பரையில் வருபவர். அந்தக் கொள்கைகளைப் போதிப்பவர். ஆதலின் அவர் தமது தர்மப்படி அருளியதில் தவறு கிடையாது. ஸ்ரீமத் அழகியசிங்கர் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தபடிப்ஸ்ரீமத்நாராயணனே முதல் தெய்வம் என்றும் அவரை வணங்குபவர்கள் மற்ற தெய்வங்களை வணங்க வேண்டிய அவசியமில்லை என்றும் பதில் கூறியுள்ளார். ஆனால் மற்றைய கோவில்களுக்கு உதவி செய்பவர்களை அவர் தடுக்கவும் இல்லை. உதவி செய்ய வேண்டாம் என்று சொல்லவுமில்லை.

ஸ்ரீரங்கம் முகுந்தன்

ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீமத் அழகிய சிங்கரின் பேட்டி பிரசுரமான பிறகு நமக்கு வந்த ஏராளமான கடிதங்களுள் உணர்ச்சிவசப் படாமலும் அறிவு பூர்வமாகவும் எழுதப்பட்ட ஒரு கடிதம் இது. மற்றவர்கள் ஒன்று, ஜீயரைக் குறை கூறினார்கள்; அல்லது 'பேட்டியை ஏன் பிரசுரித்தீர்கள்?' என்று கல்கி ஆசிரியரைச் சாடினார்கள். நிலைமையைத் தெளிவாக்க 'முகுந்தன்' வரவேண்டியிருந்தது!

கட்டுரை எழுதுவது வேறு, பேட்டி காண்பது வேறு. சந்தர்ப்பச் சூழ்நிலைகளைப் பொறுத்துக் கட்டுரையாளர் ஒரு பண்பாட்டைக் கடைப்பிடிக்கிறார். உதாரணமாய் ஒருவருக்கு மணி விழா எனில் நிறைகளையே கூறுவார். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் அம்மனிதரின் நிறைகளுடன் குறைகளையும் அதே கட்டுரை ஆசிரியர் சுட்டிக் காட்டலாம்; அவரது கொள்கைகளை விமர்சிக்கலாம். — தமது கணிப்பாக.

பேட்டியின் போதோ பேட்டி காண்பவர் தம்மிடமும் பொதுவாக மக்களிடையேயும் நிலவும் சந்தேகங்களையும் அபிப்பிராயங்களையும் கேள்விகளாக்குகிறார். பேட்டி காணப்பட்டவர் விளக்கம் தருகிறார். பதிலில் அவரது கொள்கைகள் பிரதிபலிக்கின்றன. ஏற்பதும் ஏற்காததும் நமது விருப்பம்.

ஜீயர் அவர்களிடமும் நம்மில் பலருக்கு இயல்பாக எழும் சந்தேகங்கள் கேட்கப்பட்டன. அவர் பதிலளிக்க மறுத்திருக்கலாம். ஆனால் விமரிசனத்துக்கு உள்ளாவோம் என்று தெரிந்தும் தமது ஆழ்ந்த நம்பிக்கைகளைத் துணிவுடன் வெளியிட்டார். தமது கொள்கைகளில் உறுதி காட்டிய அளவில் அவரிடம் நமக்கு மதிப்பு அதிகரிக்கவே செய்கிறது. இதனாலேயே அவரது எண்ணங்கள் அனைத்தையும் ஏற்க முடியாவிடினும் பிரசுரிக்க முடிந்தது. ஜீயரின் கருத்துக்கள் பலவற்றை ஒப்புக் கொள்ளாதவர்கள் இதனைச் சிந்திக்க வேண்டும்.

வேடிக்கை என்னவெனில் ஜீயரின் கருத்துக்களை முழுமையாக ஏற்று அவற்றை நியாயமெனவும் கருதுவோரில் கூட சிலர் பேட்டி பிரசுரமானதை விரும்பவில்லை! கோபிக்கிறார்கள். ''காண்ட்ரவர்ஸியில் கல்கி இறங்கவேண்டாம்'' என்று உபதேசிக்கிறார்கள். உண்மையில் இவர்கள் கவலை கல்கி பற்றியது அல்ல; ஜீயர் காண்ட்ரவர்ஸிக்கு உள்ளாகிறாரே என்பதுதான். ஜீயருக்கு உள்ள அளவு உறுதி அவரைப் பின்பற்றுவோரில் சிலருக்கு இல்லாததில் வியப்பில்லை.

சில அம்சங்களில் கருத்து மாறுபாடு இருப்பினும் பெரியவரிடமோ அவர் அலங்கரிக்கின்ற பீடத்தினிடமோ நமது மதிப்பும் மரியாதையும் என்றும் குறைந்து விடப்போவதில்லை.



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்




கல்கி
1982 மே 9
நளதுந்துபி சித்திரை 26
மலர்: 40 இதழ்: 41

17

ரவிகுலதிலகன்

செம்பியன்

தஞ்சையிலிருந்து ஜெயசிங்கனும் அராபியக் குதிரை வியாபாரி வேடத்தில் விஜயாலயனும் புறப்பட்டு முத்தரையர் தலைநகரமாம் சந்திரலேகை நோக்கிப் பயணப்பட்ட அதே தினத்தில் சொல்லி வைத்தாற்போல் மதுரையிலிருந்து குவளையும் அவள் தம்பியும் தோழியும் தகப்பனும் சீனனும் கிளம்பினார்கள். அவர்களும் சந்திரலேகை செல்ல



தெனத் தீர்மானித்துத்தான் தங்கள் குதிரைகளைத் தட்டி விட்டனர். அதிகாலை நேரத்தில் வெகு தூரம் வேகமாகச் சென்றவர்கள் கதிரவன் உச்சி வானை நெருங்க நெருங்கக் களைத்தவர்களாய் நிதானித்தனர். அடுத்து எதிர்ப்படும் ஊரில் ஒரு சத்திரத்தில் தங்கிப் பகலுணவு அருந்தி ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் பயணம் தொடர்வது எனப் பேசி முடிவெடுத்தனர். வழி நெடுக, அவர்கள் செங்கழுநீர்ப் பூக்கள் மலர்ந்திருக்கும் நீர் நிலைகளையும் பசுமையான வயல்வெளிகளையும் சோலைகளையும் பார்த்தபடி முன்னேறியதால் உற்சாகமாகவே இருந்தனர். அதுவும் அதிகாலை நேரத்தில் பட்சிகளின் இனிய கானத்தையும் மரகத வயல்களில் கூட்டமாக வந்திறங்கிய வெண் நாரைகளின் அழகையும் கேட்டும் பார்த்தும் குதூகலித்தான் குவளை. ஆனால் வெய்யில் ஏற ஏறப் பட்சிகள் மரக்கிளைகளின் நிழல்களைத் தஞ்சமடைய வயல்களின் மீதாகவும் அனல் காற்று பரவியது.

''அக்கா! இவ்வளவு பசுமையான இந்நாட்டில் பஞ்சம் என்பது போல் அன்று நீ எப்படித்தான் பேசத் துணிந்தாயோ! நான் ரொம்பப் பயந்து விட்டேன்'' என்றான் குவளையின் தம்பி.


''ஆமாமாம்! 'பாண்டிய நாட்டு யானைகளுக்குச் சரியாக உணவிடுவதில்லை போலும்! பட்டத்து யானையே மெலிந்து எடை குன்றிக் காணப்படுகிறதே! சுமந்து பார்த்தவன் கூறினால் நம்பத்தானே வேண்டும்!' என்று நீ அன்று சொன்னபோது ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனின் முகம் எப்படிக் கறுத்துச் சுருங்கிச் கண்டைக்காயாக ஆகி விட்டது தெரியுமா?'' சிரித்தான் கொம்மையன்.

''இப்போது சிரிப்பீர்கள்! அப்போது எப்படி நடு நடுங்கினீர்கள்! பக்கத்திலேயே இருந்த எனக்குத் தெரியாதா?'' என்றாள் குவளையின் தோழி, கொம்மையனைப் பார்த்து.

''கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது'' என்று ஒப்புக்கொண்டான் கொம்மையன்.

''யானையைப் பற்றிச் சொன்னதோடு விட்டாளா இவள்!'' என்று குவளையைக் குற்றம் சாட்ட ஆரம்பித்தாள் அவள் தோழி. '''சேனனுக்குக் கூட கூடல்மாநகரில் கொடுத்த காசுக்கு ஏற்பப் போதிய அளவு உணவு கிடைக்கவில்லை. இவன் வயிறார உண்டு பல நாட்கள் ஆகிவிட்டன' என்றும் மன்னரிடம் சொன்னாளே! எங்கிருந்துதான் அத்தனை தைரியம் வந்ததோ!''

''எனக்கு என்ன அச்சம்?'' என்று கேட்டாள் குவளை. இளவரசர் சொல்லிக் கொடுத்தபடி பேசி




னேன். விஜயாலயன் கூறுவதில் தவறேதும் இராது. அவர் சொற்படி நடந்தால் ஒரு துன்பமும் விளையாது என்பதில் அத்தனை திடமான நம்பிக்கை எனக்கு.''

பல ஆபத்துக்களைச் சந்திக்க நேர்ந்த போதிலும் எப்படியோ விஜயாலயன் வகுத்த திட்டம் நல்ல விதமாக நிறைவேறியதில் குவளை மன நிறைவும் ஆனந்தமும் அடைந்திருந்தாள்.

சென்ற ஆண்டு மழை பொய்த்ததால் பாண்டிய நாட்டில் விளைச்சல் சரியில்லை. ஆண்டின் பெரும் பகுதியில் வைகை வறண்டிருந்தது. ஆனால் பஞ்சம் என்பதால்பகை ஒழிந்து விடுமா? பாண்டியர்களை என்றுமுள்ள பகை இப்போதும் சூழ்ந்திருந்தது. தெற்கே ஈழ மன்னனிடம் பகை; வடக்கே பல்லவருடன் பரம்பரை பரம்பரையாக நீடித்த விரோதம். எதற்கும் சித்தமான நிலையில் பாண்டியரின் நிலப் படை மட்டுமின்றிக் கப்பல் படையும் எப்போதும் இருக்க வேண்டியிருந்தது. படைவீரருக்கு மட்டுமின்றி, யானை குதிரைகளுக்கும் ஏராளமான உணவு தேவையாயிருந்தது. படை பலத்தைக் குறைக்கவும் துணிவில்லை. நாட்டில் உணவுப் பற்றாக்குறை — பஞ்சம் என்று பகைவருக்குத் தெரிந்தால்போதும்; அதுவே படையெடுப்பை ஊக்குவிக்கும். எனவே உள்ள உணவைத் திறம்பட நிர்வகிப்பதும் மக்களுக்கும் சேனைவீரர்களுக்கும் பகிர்ந்தளிப்பதும் அவசியமாயிற்று. இதனைச் சாதாரண ஆற்றலோடு நிறைவேற்றினார் பாண்டிய சக்கரவர்த்தி. என்றாலும், அடுத்த பருவமழை, விளைச்சல், அறுவடை என்று முன்னேற்றம் காணும் வரை இக்கட்டான தருணம்தான். இதனை எப்படியோ ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டிருந்த விஜயாலயன், சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள விழைந்தான். அதனால்தான் எப்படியாவது ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனைச் சந்தித்துப் பஞ்சம், பட்டினி என்று பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று குவளைக்குக் கட்டளை பிறப்பித்திருந்தான். அந்த முயற்சிதான் எவ்வளவு விசித்திர, விநோத சம்பவங்களுக்குப் பிறகு வெற்றி பெற்றது! நினைத்துப் பார்த்தால் கனவு போல் இருந்தது குவளைக்கு.

> ஃபைவ் ஸ்டார் ஓட்டலுக்குள் நுழையப் போன ஒருவரிடம் பிச்சைக்காரன் கேட்டான்: ''ஒரு ரூபாய் இருந்தால் கொடுத்துட்டுப் போங்க.''
>
> அவர்: ''போப்பா எங்கிட்டே இல்லே.''
>
> பிச்சைக்காரன்: ''அப்போ பாதகமில்லே. அஞ்சு ரூபாயாவே கொடுங்க!''
>
> -செம்பூர் சந்துரு



அவள் பேச்சைக் கேட்டுச் சிறிது நகைத்தான் ஸ்ரீமாறன். ''பெண்ணே! நீ துடுக்குத்தனம் மிக்கவள் என்பதை அறிந்தே இருக்கிறேன். என்றாலும் இந்த அளவுக்கு ஆபத்தை எதிர்கொண்டு வரவேற்க வேண்டுமா நீ? உன்னிடம் கருணை காட்டலாம் என்று பார்த்தால் அதற்கு இடம் தரமாட்டேன் என்கிறாய்! தண்டனை பெற்றே தீர்வது என்று சபதம் எடுத்துக் கொண்டு பாண்டிய நாட்டில் நுழைந்தாயா?''

''மன்னர் மன்னா! உண்மை பேசுவது என்பது பாண்டிய நாட்டில் தண்டனைக்குரிய செயல் என்று எனக்குத் தெரியாமல் போயிற்று'' என்றாள் குவளை இடக்காக.

ஸ்ரீமாறன் முகத்தில் கோபாவேசத்தைக் கண்ணுற்ற இளவல் வரகுணன் இடையில் புகுந்து, ''அப்பா! இவளை இங்கேதான் விசாரிக்க வேண்டுமா?'' என்று கேட்டு மைதானத்தைச் சுற்று முற்றும் பார்த்தான். சேனை யானை மிதித்து நசுக்குவதை வேடிக்கை பார்க்கத் திரண்டிருந்த பெருங் கூட்டம், சேனனின் வெற்றியைக் கண்டு வியந்து போற்றிய பின் கலைந்து செல்லத் தொடங்கியிருந்த போதிலும், அவர்களில் ஒருசிலர் குவளைக்கும் மாமன்னருக்குமிடையே ஏதோ வாக்குவாதம் துளிர்த்திருப்பது போல் உணர்ந்து திரும்பி வந்து நெருங்கி நிற்கவும் துணிந்திருந்தனர்.

''நல்லது!'' என்ற ஸ்ரீமாறன், ''வரகுணா! இவர்களைத் திரும்பவும் விருந்தினர் மாளிகைக்கே அனுப்பிக் காவலில் வை. பிறகு நாம் பேசிக் கொள்ளலாம்'' என்று கூறி எழுந்து சென்று விட்டார்.

''குவளை! சக்கரவர்த்தி கூறியதைக் கேட்டாயல்லவா? காவலரை உடன் அனுப்பவா?'' என்றான் வரகுணன்.

''வேண்டாம் ஐயா! எங்களுக்கு விடுதலை என்று ஊராறிய அறிவித்த பின் காவலரை உடன் அனுப்பினால் சக்கரவர்த்தியின் பெருமை என்னாவது?'' என்று ஏளனக் குரலில் கேட்ட குவளை, ''நாங்களாகவே எங்கள் இருப்பிடம் திரும்பி விடுகிறோம். நீங்கள் அனுமதி தந்த பிறகு விடை பெறுகிறோம்'' என்று கூறிப் புறப்பட்டாள் சகாக்களுடன். போகிற போக்கில் அவள் பார்த்த பார்வையும் அதில் காணப்பட்ட குறும்பும் இளவல் வரகுணனின் இமைகளையும் இதயத்தையும் படபடக்கச் செய்தன. பிறந்தது முதல் தன்னை யாரும் எதிர்த்துப் பேசி அறியாத அவனுக்குக் குவளையின் அடக்கமற்ற பேச்சு புதுமையாக மட்டுமின்றிக் கிளுகிளுப்பு ஊட்டுவதாகவும் இருந்தது. 'பொல்லாத பெண்!' என்று தனக்குள் சிரித்துக் கொண்டவன், அவர்களை எட்ட இருந்தே கண்காணிக்குமாறு ஒற்றர் தலைவனுக்குச் சொல்லி அனுப்பினான்.

மறுநாள் காலை. அரண்மனைக் குதிரை லாயத்துக்கு வந்து அவர்கள் தாங்கள் இழந்த

குதிரைகளுக்கு மாற்றாக வேறு இரு பரிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற செய்தியுடன் ஒரு தூதன் வந்து சேர்ந்தான். அவனுடன் சென்று குதிரைகளைத் தேர்வு செய்து முடிந்ததும், வசந்த மண்டபத்தில் அவர்கள் காத்திருக்கலாம் எனவும் சக்கரவர்த்தி தமது முக்கிய பணிகளை முடித்துக் கொண்டு அங்கு வருகையில் அவரிடம் விடை பெற்றுச் செல்லலாம் எனவும் கூறி வழி காட்டி அழைத்துச் சென்றான்.

வசந்த மண்டபம் விசாலமான திறந்த பலகணிகளுடனும் மிக நேர்த்தியான கலை வேலைப்பாடுகள் கொண்ட தூண்களுடனும் அற்புதமாக இருந்தது. மண்டபத்தைச் சுற்றி வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் தோட்டம். அதனைச் சூழ்ந்து தெளிந்த நீர் தேங்கி நிற்கும் அகன்ற வாவி. காற்று அந்த நீரின் மேல் மிதந்து தண்மை பெற்று, மலர்களின் மேல் தவழ்ந்து மணம் பெற்று, வசந்த மண்டபத்துக்குள் நுழைந்து அங்கிருந்தோரைத் தழுவி, ஈட்டியதை ஈந்து சென்றது. ஆங்காங்கே அழகிய வெண்கலச் சிலைகளும் வண்ண ஓவியங்களும் அலங்கரித்திருந்தன. அங்கிருந்த உயர்தர பட்டுத் திண்டுகளுடன் கூடிய ஆசனங்களில் அமரவே குவளையுடன் வந்தோருக்குக் கூச்சமா யிருந்தது. தான் அமர்ந்தால் இருக்கை உடைந்து போய்விடும் என்று அஞ்சி நின்றிருந்தான் சீனன். குவளை மட்டும் 'கிடைத்த வாய்ப்பை நழுவ விடுவேனா' என்று கேளாமல் கேட்டுத் தன்னையே ஓர் இளவரசியாகப் பாவித்துக் கொண்டு அம்மண்டபத்தில் வளைய வந்ததுடன் அதன் வசதிகளை அனுபவிக்கவும் அழகுகளை ரசிக்கவும் செய்தான். குறைகளைத் திருத்தவும் முற்பட்டாள்! குழலூதும் கண்ணனின் செப்புப் படிமத்தைச் சற்று நேரம் பார்த்தவள் "இந்த இரண்டு பெண்சாதிக்காரன் சிலை இங்கு எதற்கு? இதை உடனே நீக்கிவிடு! இதற்குப் பதில் இங்கே வீராவேசம் காட்டும் நிசும்ப சூதனி சிலை ஒன்றை வை!" என்று சீனனுக்குக் கட்டளை இட அவனும் அவள் விளையாட்டில் பங்கேற்று, 'சித்தம்' என்பது போல் வாய் பொத்தித் தலையாட்டினான். அதேசமயம் யாரோ தொண்டையைக் கனைப்பது கேட்கத் திடுக்கிட்டுத் திரும்பினர்.

சக்கரவர்த்தி! அருகில் இளவல் வரகுணன்!

"பிரபோ... மன்னிக்க வேண்டும். விளையாட்டாக...." என்று அவள் ஆரம்பிக்கு முன்னர் ஸ்ரீமாறன் சிரித்து, "இதற்குள் உன் போக்குப் பழகி விட்டது பெண்ணே! நீ எதையும் விளையாட்டாக எடுத்துக்கொள்கிறாய்" என்றான். "என் கோபத்துக்கு ஆளாவது உட்பட!"

"ஐயா! தங்கள் கோபத்துக்கு இந்த ஏழை ஆளாகித் தண்டனை பெற்றாலும் யாருக்கும் எந்த வித நஷ்டமும் இல்லை. ஆனால் தாங்கள் கோபம் கொள்வது தங்கள் உடல்நிலையைப் பாதிக்குமே என்றுதான் கவலைப்படுகிறேன்!"

"தெரிந்திருக்கிறதல்லவா? பிறகு ஏன் என் பொறுமையைச் சோதிக்கிறாய்? உனக்குச் சேர வேண்டிய இரு குதிரைகளைப் பெற்றுக் கொண்டாயல்லவா? உங்களுக்கு நான்

கொடுத்த பரிசுகளையும் எடுத்துக்கொண்டு எவ்வளவு சீக்கிரம் பாண்டிய நாட்டை விட்டுச் செல்கிறீர்களோ அவ்வளவுக்கு மகிழ்வேன்!"

"தெரியும் மன்னவா! பாண்டிய நாடு அயல் தேசத்திலிருந்து புதிதாக வரும் யாரையும் குடிமக்களாக ஏற்றுக் கொள்கிற வளமான நிலையில் இன்று இல்லை என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறேன்!"

அவளைக் கூர்ந்து பார்த்தார் சக்கரவர்த்தி. "பெண்ணே! நீ வாயாடி மட்டுமல்ல, கெட்டிக்காரி! திரும்பத் திரும்ப ஒரே இடத்துக்கு உரையாடலை வேண்டுமென்றே கொண்டு வந்து நிறுத்துகிறாய். பாண்டிய நாட்டில் பற்றாக்குறை என்பதைத் திரும்பத் திரும்ப எனக்கு நினைவூட்டி இடித்துரைக்க அவசியமென்ன? பெண்ணே! உன் நோக்கமென்ன?"

"தங்கள் நலன் அல்லாது வேறு ஏதுமில்லை பிரபோ!" என்ற குவளை ஒரு கணம் தயங்கிச் சுற்று முற்றும் பார்த்து, சக்கரவர்த்தியின் கட்டளைப்படி காவலரும் மண்டபத்துக்கு வெளியேதான் நிற்கின்றனர் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின் தொடர்ந்தாள்: "வடக்கே முத்தரையர் ஆட்சியில் காவிரிப் பாசனத்தால் மனம் குளிர்ந்த பூமித்தாய் தானிய மணிகளை அள்ளிக் கொடுத்திருக்கிறாள். அங்கே தானியக் கிடங்குகள் நிரம்பி வழிகின்றன. அதனாலேயே முத்தரையருக்குத் துன்பம். விலை போகவில்லை. சீந்துவாரின்றிப் புழுத்துப் போய்க் கொண்டிருக்கின்றன. உங்களுக்கோ இங்கு இந்த ஆண்டு பற்றாக்குறை. நீங்கள் அங்கிருந்து உணவுத் தானியங்களைத் தருவிப்பது இரு தரப்பினருக்குமே பேருதவியாய் இருக்கும்."

ஆச்சரியமாகப் பார்த்தான் ஸ்ரீமாறன். "பெண்ணே! நீ யார்? உன்னை அனுப்பியது யார்?"

அவள் வேண்டுமென்றே மலங்க மலங்க விழித்தாள். ''உங்கள் கேள்வி புரியவில்லை. நாங்கள் நாடோடிகள். எங்களை எங்கு அனுப்புவது? யார் ஆணையிடுவது? அங்கு சென்றிருந்தபோது கண்டதை இங்கு சொல்கிறேன். ஏற்றால் உங்களுக்கு நல்லது. ஏற்காவிட்டால் எனக்கு நஷ்டமில்லை.''

மன்னர் சற்று யோசித்தார். ''குவளை! இப்படி உட்கார்'' என்று அதுவரை இல்லாத அளவு மரியாதை காட்டி அருகில் அமர்த்திக் கொண்டார். ''இதோ பார்! நீ யாராலும் அனுப்பப்பட்டு வரவில்லை என்பதை நான் நம்பவில்லை. போகட்டும். அதைத் தெரிந்து கொள்ள எனக்கு அவசியமும் இல்லை. ஆனால் உன்யோசனை அபத்தமானதுஎன்பதையாவது நீ உணர்ந்திருக்கிறாயா? முத்தரையர் பல்லவனின் மேலாதிக்கத்துக்கு உட்பட்டவர். நானோ பல்லவனின் பரம வைரி. அவ்வாறிருக்க முத்தரையருடன் நான் எப்படி வியாபாரம் செய்ய முடியும்? கடல் முத்துக்களைத் தந்து தானிய மணிகளை எப்படி வாங்க முடியும்?''

''ஐயா! எதற்கும் ஒரு விலை இருக்கிறது. நல் முத்துக்களைத் தந்து நெல் மணிகளைப்பெற முடியாதிருக்கலாம். ஆனால் சுதந்திரம் என்பது இதெல்லாவற்றையும் விட மதிப்பு மிக்கது. 'பல்லவ மேலாதிக்கத்திலிருந்து விடுதலை; எதிர் காலத்தில் அவர் யாருக்குமே கப்பம் செலுத்த அவசியமிராது' என்று முத்தரையருக்கு ஆசை காட்டினால்...''

சக்கரவர்த்தி சிந்தனையில் ஆழ்ந்துபோக அதைக் கலைக்க விரும்பாமல் நெடுநேரம் காத்திருந்த வரகுணன், வியப்பை அதற்கு மேலும் கட்டுப்படுத்த முடியாதவனாக, ''அப்பா! நீங்கள் சந்தேகித்தது சரி, இவர்கள் நாடோடிகளாகவே வாழ்ந்தாலும் இங்கே தூதர்களாக வந்திருப்பதாகத்தான் தோன்றுகிறது'' என்றான்.

''தூதாகவும் இருக்கலாம்'' என்றார் சக்கரவர்த்தி.

''சூது, வாது, தூது ஏதுமில்லை பிரபோ. யோசனை சொன்னேன். ஏற்பதும் ஏற்காததும் தங்கள் விருப்பம்'' என்றாள்.

''நல்லது மகளே, நன்றி'' என்றார் சக்கரவர்த்தி.

அத்துடன் ராஜ தரிசனம் முடிந்தது. அவர்களுக்கு வழிகாட்டி அழைத்துப் போகக் காவலரைக் கை தட்டி அழைத்தார் சக்கரவர்த்தி. விருந்தினர் மாளிகை சென்றடைந்த அவர்கள் அங்கு மேலும் ஒரு நாள் தங்கி இருக்க இளவல் அனுமதித்திருப்பதாக அறிந்து அகமகிழ்ந்தனர். மறுதினம் புறப்படத் தேவையான முன்னேற்பாடுகளைக் கவனித்தனர்.

அதற்கு முன் அன்று மாலையே தன் புரவியை நாலு கால் பாய்ச்சலில் செலுத்திக் கொண்டு அங்கு வந்த வரகுணன், குதிரை நிலையாக நிற்கு முன்னரே லாகவமாகத் தாவிக் குதித்துப் பெரும் பரபரப்புடன் படியேறி மாளிகையினுள் நுழைந்தான். முகமெங்கும் முத்து முத்தாக வியர்வை அரும்பி நிற்க, ''குவளை, குவளை!'' என்று உரக்க அழைத்து அவள் எதிர்ப்பட்டவுடன் ஆர்வத்தோடு அவள் கரங்களைப் பற்றிக் கொண்டு ரகசியக் குரலில், ''குவளை! உன் யோசனையை ஏற்பதில் ஆபத்துக்கள் இருந்தாலும் மன்னர் முயன்று பார்க்கத் தீர்மானித்து விட்டார்! தூது செல்லப் போவது யார் தெரியுமா? நான்தான்! இன்று இரவே புறப்படுகிறேன்! பல்லவ ஒற்றர்கள் கண்டு கொள்ளாதிருக்க மாறுவேடத்தில் செல்கிறேன். முத்தரையரை நேரில் சந்தித்த பிறகு இலச்சினை காட்டி என்னை அறிமுகப் படுத்திக் கொள்வேன். அந்தரங்கப் பேச்சு வார்த்தை நடத்துவேன்'' என்றான். ஒரு பெரிய சாகசச் செயலில் ஈடுபடத் தந்தையின் அனுமதி கிடைத்து விட்டதில் பெருமை, குதூகலம், எதிர்பார்ப்பு எல்லாம் உள்ளத்தில் நிரம்ப அவன் உடல் சிலிர்த்தது.

''மகிழ்ச்சி ஐயா!'' என்றாள் குவளை. ''ஆனால் ஓர் எச்சரிக்கை! முத்தரையர் அரண்மனையில் உத்தமசீலி என்றொருத்தி இருக்கிறாள். அவள் அழகி, அலங்காரி என்பது மட்டுமல்ல, அகந்தைக்காரி, என்பதும் உலகப் பிரசித்தம். உங்களைப் போன்ற ஆணழகர்களைக் கண்டால் தன் அகன்ற பெரிய விழிகளாலேயே விழுங்கி விடுவாள்! பத்திரம்!''


வர குணனின் முகம் இதைக் கேட்டு 'குப்' பென்று சிவந்ததை இப்போது எண்ணினாலும் குவளைக்குச் சிரிப்புத் தாங்க முடியாமல் வெடித்தது. சத்திரத்தில் பகலுணவுக்குப் பிறகு சற்றே படுத்திருந்த அவள்' நினைவலைகளோடு போட்டியிட்டு உடல் அலைகளை எழுப்பச் சிரிப்பலைகளை உதிர்த்தாள்.

''எந்தச் சூழ்நிலையிலும் நீ எப்படித்தான் சிரிக்கிறாயோ! நமது பணி முடிந்ததும் பழையாறை திரும்ப வேண்டும் என்ற இளவரசர் விஜயாலயனின் உத்தரவை மீறி நீ சந்திரலேகைக்குத்தான் செல்ல வேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பதை நினைத்தால் எனக்குப் பயத்தில் வயிற்றைப் பிசைகிறது'' என்றான் கொம்மையன். (தொடரும்)

நண்பன்: ''என்னடா பூட்டின்மேல் புவனேஸ்வரின்னு எழுதப்பட்ட துண்டுச் சீட்டு தொங்குது?''

அவன்: ''இமேர்னு என் மனைவி சினிமாவுக்குப் போகும் போதெல்லாம் படம் முடியும் நேரத்துக்கு நான் வந்து அவளை அழைத்துப் போக வசதியா அவள் படம் பார்க்கப்போகிற சினிமாத் தியேட்டரின் பெயரை ஒரு துண்டுச் சீட்டில் எழுதிப் பூட்டுடன் இணைத்துவிட்டுப் போவது வழக்கம்!''

-உ. ராஜாஜி





Imageads M-AL-1427 R Tam



அமரர் ஆர்.பி.

அவரை நினைக்கும்போதெல்லாம் மனத்தில் ஒரு நிறைவு ஏற்படும்.

உணர்ச்சிமயமான மனிதர் உண்டென்றால் அவர்தான் என்று சொல்ல வேண்டும்.

பெரும் பதவிகளில் இருந்தபோதிலும் எளியவராய் இருந்தவர் அவர்.

யார் அவர்?

அவர்தான் ஆர். பி. என்று எல்லாராலும் அன்புடன் அழைக்கப்பட்ட ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி அவர்கள்.

ஆர். பி. அவர்களின் மறைவு அவரோடு நட்பு முறையிலும், அலுவலகத் தொடர்பாலும் பழகிய யாருக்கும் தாங்கிக்கொள்ள முடியாத விஷயம்.

அவர் பழகிய முறை அப்படி. அன்பு செலுத்துவது என்பதில் ஒருகுழந்தை மாதிரி. பழகியவர்களைக் கண்டதும் அவர் கண்களில் பாசத்தோடு கூடிய ஓர் ஒளி தெரியும்.

அன்புக்காக அன்பு செலுத்திய அவர் ஒரு அந்தக் காலத்து ஆசாமி.

ஸ்ரீ ஆர். பி. வகித்த பதவிகள் எல்லாம் அவருடையபொறுப்புணர்வாலும், நிர்வாகத் திறத்தாலும், மனிதாபிமானம் மிக்க குணத்தாலும் சிறப்படைந்தன.

வானொலியின் நிலைய இயக்குநர், தமிழ் நாடு அரசில் செய்தி விளம்பர இயக்குநர், கதர் கிராமத் தொழில் இயக்குநர் போன்ற பல உயர் பதவிகளை வகித்தவர்.

விடுதலைப் போராட்டத்தில் இளம் வயதிலே குதித்த ஸ்ரீ பார்த்தசாரதி அவர்கள் கதர் இயக்கத்தில் விரும்பி ஈடுபட்டவர். ஸ்ரீ டி. சதாசிவம் அவர்களோடு தெருத் தெருவாய்க் கதர் மூட்டையைத் தூக்கித் திரிந்தவர்.

அந்த ஆர்வம் அப்படியே இருந்து வந்ததால் கதர் கிராமத் தொழில் வாரியத்தில் பொறுப்பு ஏற்றுக் கொண்டதும் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டார். அவற்றின் பலன் இன்று நகரங்கள் தோறும் காதி கிராஃப்ட் அங்காடிகள் பல செயல்பட்டு வருவதைக் காண்கிறோம்.

எந்தப் பதவி வகித்த போதிலும் உள்ளூற அவருக்குத் திருப்தி தந்தது எழுத்துத் துறைதான்.

திருச்சியிலிருந்து வெளிவந்த ''ஹனுமான்'' என்னும் பத்திரிகையிலும் ''ஆனந்த விகடன்'' இதழிலும் அவர் சிறப்பாய்ப் பணி ஆற்றியவர்.

இப்போதுள்ள வாசகர்கள் அறிந்திருக்க முடியாது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அமரர் கல்கியின் நகைச் சுவை எழுத்துக்கு அடுத்து ஸ்ரீ பார்த்தசாரதி அவர்களின் ஹாஸ்யக் கட்டுரைகள் நிறைய வெளி வந்தன.

அவருடைய நடையில் கிண்டலும், கேலியும் கும்மாளி போட்டுக் கொண்டு விளையாடும். மனிதர்களின் கோணங்கித்தனத்தை எல்லாம் படம் பிடித்துக் காட்டி விடுவார்.

எழுத்தில் இவ்வளவு நையாண்டி பண்ணுகிறவர் வாழ்க்கையில் மனிதர்களை மனதார நேசித்தார். உணர்ச்சி வயப்பட்டு அன்பு செலுத்தினார்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவர் வெளி உலகிலிருந்து விலகி அமைதியான வாழ்க்கை நடத்தி வந்தார். அவருடைய கலையார்வத்தையும் செறிந்த அனுபவங்களையும் நன்கு உணர்ந்த ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்கள் தம் கலாக்ஷேத்ராவுக்கு உறுதுணையாகக் கொண்டார்.

ஸ்ரீ பார்த்தசாரதி அவர்கள் ராஜாஜி, டி. கே. சி., கல்கி போன்ற பேரறிஞர்களோடு நெருங்கிப் பழகியவர். அவர்களின் அபிமானத்துக்கும் அன்புக்கும் பாத்திரம் ஆனவர்.

கடந்த சில ஆண்டுகளாக அவருக்கு ஒரு ஏக்கம் இருந்து வந்தது. பழைய நினைவுகளோடு இப்போதுள்ள உலகை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வார்.

ஒரு ஏமாற்றம் ஏற்படும் அவர் உள்ளத்தில். தாம் இவ்வுலகத்தில் தனியாய் விடப்பட்டதாக அவருக்குத் தோன்றியது. அதை மிக நெருங்கியவர்களிடம் கூறி அங்கலாய்த்துக் கொள்வதில்லை. அற்றுமைப்பட்டிருக்கிறார்.

இப்போது நமது அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமான அறிஞர் பெருமக்களுடன் சேர்ந்து உறவாடப் போய் விட்டார். அவருடைய ஏக்கம் தீர்ந்து விட்டிருக்கும்.

நாம்தான் ஆர். பி. யைப் போல அன்பு செலுத்துபவர் யார் இருக்கிறார்கள் என்று ஏங்க வேண்டும் இனி. - தீப. நடராஜன்

ஆரோக்கியம், ஆனந்தம், ஒன்றுக்கொன்று ஆதாரம்!



போர்ன்விடா பருகுங்கள்.

உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க போர்ன்விடா வழங்குங்கள். போர்ன்விடாவில் கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் நற்பண்புகள் நிறைந்துள்ளன. நூறு ஆண்டுகளுக்கும் மேலாக உணவுப்பான நிபுணர்கள் — காட்பரி தயாரித்து அளிப்பது.

காட்பரிஸ் போர்ன்விடா

உங்களோடு வளரும் நன்மை



மிச்சப்படுத்துங்கள் பணத்தை....
உங்கள் விருப்பமான
ரீ-பில்பேக் வாங்கிடுங்கள்.

OBM-7538 TM



கவர்ச்சிகள்

—கிருஷ்ணமணி—

4

'எந்தத் தொழிலுக்கும் சில நியதிகள் இருக்கின்றன. ராம நாராயணன் தம்முடைய விளம்பர நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அத்தகு நியதிகளைப் பின்பற்ற என்றுமே மறந்ததில்லை. இதை அவர் ஒரு தர்மமாகவே நினைத்தார். 'ஒரு தொழிலின் தர்மங்கள், அதில் ஈடுபடாத மற்றவர்களுக்குத் தர்மம் வழுவிய செயல்களாகக் கூடப் படலாம். ஆனால் ஒரு இன்வால்வ்மெண்ட் ஏற்பட்டுப் போகும்பொழுது, அதனுள் இருப்பவர்களுக்குப் பொதுப்படையான தர்மங்களைப் பற்றின அக்கறை இல்லாது போய்விடுகிறது.' ராம நாராயணன் முந்தின தினம் மாலையில் சொன்னதை முரளி நினைத்துப் பார்த்தான்.

முரளிதரனுக்குத் தன்னுடைய முதலாளியின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை போலிருந்தன. மனிதன் தன் சுயநலத்துக்காகச் சமுதாயத்தின் கோட்பாடுகளை மீறி, நியாயங்களைப் புறக்கணித்து வாழ்வதென்பது அவனால் ஒப்புக்கொள்ள முடியாததொன்றாக இருந்தது. ஆனால் சமுதாயத்தில் செல்வமும், செல்வாக்கும் பெற்றுச் சீருடன் வாழ்பவர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும்போது அறநெறிகளும், மற்றும் சமுதாயச் சட்ட திட்டங்களும் யாருக்கு மட்டும் ஏற்பட்டவை என்பது புதிராக இருந்தது. குறுக்கு வழிகளையும், வக்கரித்த போக்குகளையும் அநுஷ்டிப்பவர்களுக்கென்று தனியான ஒரு போக்கும் நியாயங்களும் அச்சமுதாயத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக ஆகிவிட்ட மாத்திரத்தில், சாதாரண எளிய மக்கள் தம் அன்றாட வாழ்க்கைக்கே போராடுவதும், அவர்களைமட்டும், சட்டங்களும் நீதிகளும், நியாயஸ்தலங்களும் ஓயாது அச்சுறுத்திக் கொண்டிருப்பதும் நினைத்துப் பார்க்கும்போது எரிச்சலூட்டுவனவாக இருந்தன.

பாவ புண்ணியம் என்பது கூட வெறும் கற்பனைதானோ? தனி மனிதன் ஒருவனுடைய செயல்களால் சமுதாயம் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கருத்தோற்றங்களே என்று கொண்டாலும், சமுதாய நல்வாழ்வுக்கு அவை எத்துணை தூரம் அவசியமாக இருக்கின்றன. ராம நாராயணனைப் போன்றவர்கள் தம்மையே பற்றி நினைப்பதால் இந்தப் பொதுவான விதிகள் அவர்களைக் கட்டுப்படுத்துவதில்லை போலும்.

''என்ன பலமான யோசனை'' குரல் கேட்டு முரளிதரன் தலை நிமிர்ந்தான்.

ஹிரண்மயி கொள்ளை அழகுடன், குவிந்த உதடுகளுடன் நின்று கொண்டிருந்தாள்.

''நம்ம விளம்பர உலகத்தைப் பத்தி நினைச்சுக்கிட்டிருந்தேன். வேடிக்கையான உலகம்!''

''உங்களைப் பத்தி நினைச்சாத்தான் எனக்கு வேடிக்கையாக இருக்கு.''

''ஏன்?''

''இன்னிக்கு ஏன் இவ்வளவு சீக்கிரமா ஆபீஸுக்கு வந்திருக்கீங்க?''

''ஒரு அரை மணி முன்னாடியே உன்னைப் பார்க்கலாம்னுதான். சொன்னாத் தப்பா நினைக்காதே. உன்னைப் பார்த்துக்கிட்டே இருக்கணும் போல இருக்கு. எனக்குள்ளே திடீர்னு ஒரு மாற்றம் ஏற்பட்டமாதிரி இருக்கு. தனிமையே போயிட்டது போல ஓர் உணர்ச்சி. எப்பவும் என் மனசிலே நீதான் இருக்கே. இந்த மாதிரி எனக்கு ஏற்படும்னு நினைச்சே பார்த்ததில்லே!''

அவள் அழகாகப் புன்னகைத்தாள். இப்பொழுது அவன் அவளை மிகவும் ஆசையுடன் பார்த்தான். அவனுடைய பார்வையின் தீவிரம் அவள் உடலில் ஓர் உணர்ச்சி வேகத்தை ஊட்டுவதாய் இருந்தது. அவளுக்கு உடல் சிலிர்த்தது. தலையைச் சற்றே கவிழ்ந்து கொண்டாள்.

காரியாலயத்தில் யாரும் வரவில்லை. காலை மணி ஒன்பதுதான் ஆகியிருந்தது. அவள் ஒரு லே அவுட் போடுவதற்காகச் சீக்கிரமே வந்திருந்தாள். முரளி இவ்வளவு சீக்கிரம் வருவான் என்று எதிர்பார்க்கவில்லை. இன்னும் சில நிமிடங்களில் ஒவ்வொருவராக வந்துவிடுவார்கள். பிறகு அவர்கள் அந்தரங்கமாகப் பேச முடியாது. அவளுக்கு அவனுடன் நிறையப் பேச வேண்டும் போல் இருந்தது. 'மாடர்ன் வுமன்' என்று தன்



ளைப் பற்றி ஒரு வறு வான கற்பனையுடனிருந்த அவளுக்கு இப்போது தானே ஒரு புதிராக ஆகிவிட்டது போலி ருந்தது. தன்னுடைய இயற்கை யான பெண்மை, தன்னுடைய புற உலகப் பாதிப்புக்களினின்றும் விடுபட்டு, அதற்கே உரித்தான பண்புடன் இயங்குவது போலப் பட்டது.

''ஹிரண்மயி!''

''உம்...!''

''ஏன் மௌனமாயிட்டே!''

''அப்படிப் பார்க்காதீங்க!''

''ஏன்?'' .

''என்னால தாங்க முடியல்லே!''

''உண்மையாகவா;'' இதைஅவன் ஒரு பெருமையுடன் கேட்டான்.

அவள் 'ஆம்' என்ற பாவனை யில் தலையசைத்தாள்.

மீண்டும் அவன் தன் கண்களை அவள் மீது ஓடவிட்டான்.

''ஹிரண்மயி! எங்கே சிரி பார்க் கலாம்''

காரண மில்லாமல், அர்த்த மில் லாமல் அவன் இப்படிச் சொன் னதும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. களுக் கென்று சிரித்தாள். அவள் கன்னங் களில் குழிவிழுந் தது.

''ப்யூட்டிஃபுல்!... டார்லிங்!''
அவள் திடுக்கிட்டாள்.
''முரளி!''
''யெஸ் மை ஹனி!''
அவள் முகம் சிவந்தாள். 'நோ! ப்ளீஸ்! வேண்டாம். நாம ஆபீஸிலே இருக்கோம்.''

அவன் மெல்ல எழுந்திருந்தான். அவனுக்கு மிக அருகாமையில் சென்றான். காரியாலய ஹாலின் நுழைவாயில் வரைக்கும் சென்று திரும்பினான். பியூன் எங்கோபோயிருந்தான். யாரும் கண்ணில் படவில்லை. வேகமாகத் திரும்பினான். தன் இருக்கையில் அமரச் சென்ற ஹிரண்மயியை நெருங்கினான். ஒரு அசட்டுத் துணிச்சலுடன் அவளது கரங்களைப் பற்றினான். திடுக்கிட்டுப் பார்த்த அவளைச் சில விநாடிகள் உற்றுப் பார்த்தான். தன் இடது கையால் அவளை அணைத்தான். மறு விநாடியே அவளுடைய இதழ்களில் இதழ் பதித்தான். அந்தச் சில விநாடிகள் அவனுக்கு இந்த உலகத்தையே எதிர்க்கும் துணிச்சல் வந்து விட்டது போலிருந்தது. ஹிரண்மயி கண்களை மூடிக் கொண்டாள். தலையை மட்டும் அசைத்து விடுபட முயன்றாள். ஆனால் அதில் கோபம் சிறிதும் இல்லை. அச்ச உணர்வு மட்டுமே மேலோங்கியிருந்தது. முரளி அவளை விடுவித்தான். அவளுடைய முகத்தில் வியர்வை முத்துக்கள் அரும்பியிருந்தன.

அவள் மௌனமாகத் தலை குனிந்தாள். அவனுடன் எதுவும் பேச விரும்பாதவள் போல், ஒன்றுமே நடக்காதது போல் மேசை அறையைத் திறந்து லே அவுட்டுக்கான விவரங்களை எடுத்து வைத்துக் கொண்டாள். அவளுடைய செய்கை முரளியின்மனத்தில்ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தியது.

''டார்லிங்! ஹிரண்மயி!....''

அவள் பதில் பேசவில்லை. முகம் எவ்விதச் சலனமுமின்றி இருந்தது. அவன் தன் இருக்கைக்குச் சென்றமர்ந்தான்.

கேஷியர் குப்புசாமி உள்ளே நுழைந்தார். ராமநாராயணனுக்குத் தூரத்து உறவுக்காரர். 'அவருக்கு வெற்றிலைப் பாக்கு மாமா' என்ற மறு பெயர் உண்டு. அக்கப்போர் பேசுவதில் வல்லவர். வயது ஐம்பதுதான் இருக்கும். எப்பொழுதும் தொளதொளத் துப்போன பேண்டும், அரைக் கை ஸ்லாக்கும்தான் அணிவார். அந்த பேண்ட் இடுப்பிலிருந்து அடிக்கடி நழுவி விடுவதும் அவர் அதைச் சரி செய்து மேலுக்கு இழுத்து விடுவதும் அந்தக் காரியாலயத்தின் தினசரி வேடிக்கைகளுள் ஒன்று. வாரத்தின் ஆரம்பத்தில் திங்கட்கிழமையன்றுதான் டிரஸ் மாற்றுவார்.

அவர் நகர்ப்புறத்தில் லட்ச ரூபாய் பெறுமானமுள்ள வீடு கட்டியிருக்கிறார் என்பதும், தாம் குடியிருந்து கொண்டு நானூறு ரூபாய் வாடகைக்கு ஒரு பகுதியை விட்டிருக்கிறார் என்பதும் எல்லோருக்கும் தெரியும். தினசரி ஆறு மைல் சைக்கிளில்தான் வருவார். அவருடைய மகன் இன்ஜினியரிங் பட்டதாரி. கம்பெனி ஒன்றில் நல்ல சம்பளமாம். பெண்ணையும் நல்ல இடத்தில் கொடுத்திருக்கிறார். அதனால் அவருக்கு ராமநாராயணன் அதிக மரியாதை கொடுத்தார். கம்பெனியின் அக்கௌண்டண்ட் மானேஜர் எல்லோருமே குப்புசாமிக்கு அவருடைய தகுதி அறிந்து மரியாதை கொடுத்தனர். எவருக்கும் சீக்கிரத்தில் பணம் பட்டுவாடா செய்துவிட மாட்டார்.

உள்ளே நுழைந்ததும் முரளிதரன் அவர் கண்களில் பட்டான்.

''என்ன முரளி! ஆச்சரியமா இருக்கே! உனக்கு இன்க்ரிமெண்ட் டேட் வருதா?'' என்று கேட்டார்.

அடிவெட்டுப் பேச்சு. முரளிக்கு அவரிடத்தில் எப்பொழுதுமே ஒருவித அச்சமுண்டு.

''இல்லே ஸார்! இன்னிக்கு எம். டி. கிட்டே ஒரு முக்கியமான எக்ஸிபிட்டுக்கு அப்ருவல் வாங்கணும். அதான் சீக்கிரமா வந்துட்டேன்!''

அவர் பார்வை ஹிரண்மயியின் பேரில் படிந்தது.

அரை குறை இங்கிலீஷில் கேட்டார். ''கொழந்தே! ரொம்ப மும்முரமா இருக்காப்லே இருக்கு!'' பெரிய ஹாஸ்யத்தைச் சொல்லிவிட்டது போல் சிரித்துக் கொண்டார்.

அவள் இலேசாகப் புன்னகைத்தாள்.

அவளிடம்சரளமாகப் பேச முடியவில்லையே என்று குப்புசாமிக்குக் குறை இருந்தது. ஆசை தீர அவள் அழகு உருவத்தைக் கண்களால் பார்த்துத் தீர்த்தார்.

'கிழம்! இதுக்கு என்ன வேண்டியிருக்கு' மனத்தில் நினைத்துக் கொண்டான் முரளி.

''ஹிரண்மயி! உனக்குச் சீக்கிரமே பிரமோஷன் கிடைக்கப் போறது!'' குப்புசாமி அவளருகே சென்று சொன்னார்.

அவள் மெல்லிய குரலில் சொன்னாள்: ''தாங்யூ ஸார்!''

''ஏன் என்னவோ போல இருக்கே உடம்பு சரியில்லையோ?''

முரளி பதறிப் போனான். அவள் அவரிடம் தன்னைப் பற்றி ஏதாவது சொல்லி விடுவாளோ என்று பயமாகக் கூடத் தோன்றியது.

''ஆமாம் ஸார். உடம்புதான் சரியில்லே.''

அவள் சொன்ன பதில் சற்று உரக்கவே இருந்தது. முரளி பெருமூச்சு விட்டான்.

''லீவு போட்டுட்டுப் போயிடும்மா!''

''அதென்னமோ தெரியலே சார்!உங்க சினிமா போஸ்ட்டரைக் கண்டால் என் மாட்டுக்குத் தனி ருசி! தவிர, பால் கூட 500 மில்லி அதிகம் சுரக்குது!''




அரிப்பும் எரிச்சலும் தரும் வியர்க்குருத் தொல்லையிலிருந்து விடுதலை பெறுவீர்!






வாங்குவீர் நைஸில். விரட்டுவீர் வியர்க்குருவை. பால்கம் பவுடரைவிட குறைந்த விலையில்!



மருந்துக் கலவை யுள்ள நைஸில்:

1. அதிக வியர்வை யைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற் படுத்தும் கிருமி களை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இத மளிக்கிறது.

"மாறுவீர் நியூட்ரமுல் வீரராய்" மா மல்லர் தாராசிங் கூறுகிறார்.



திடவுடல் அமைத்திட
தித்திக்க ஒரு சொல்,
தீரர்தாரா வாயால்:
நியூட்ரமுல். அமுல்
படைப்பு. அத்தனையும்
சத்து: அமுல் ஆடைப்
பால். அருமையான
மால்ட். இன்றியமையாப்
புரதம். இன்னமுதக்
கோக்கோ.
வைட்டமின்கள். உலோக
தாதுக்கள். ஓகோ சுவை
விருந்து! விலையோ மிக
மலிவு—போர்ன்விடா
பூஸ்ட், மால்டோவா
எதனையும் விட!



விற்பமுதல் விடுப்போர்:
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க
மார்க்கெட்டிங் ஃபெட. லிட்.,
ஆனந்த்-388 001

''வேலையை முடிக்கணும் ஸார்.''

''வெரி குட் கேர்ள். உன்னோட கடமை உணர்ச்சியைப் பாராட்டறேன்!'' சொல்லி விட்டுக் குப்புசாமி தம்மிடத்துக்குப் போய் விட்டார்.

இப்பொழுது மீண்டும் அவன் அவளைப் பார்த்தான்.

அவளும் யதேச்சையாகப்பார்ப்பது போல் இவனைப் பார்த்தாள். அவளுடைய அந்தப் பார்வையிலிருந்து கோபமா இல்லை உவகையால் ஏற்பட்ட மௌன ஊடலின் சாயலா என்பது அவனுக்குப் புரியவில்லை. காரியாலயம் நிரம்ப ஆரம்பித்தது. அவன் தன் வேலையில் ஆழ்ந்தான்.

அன்றுவழக்கத்தைவிட ராமநாராயணன் கலகலப்பாக இருந்தார். அவர் அப்படி இருந்தார் என்றால் பெரிய வேட்டை ஒன்றுக்குத் தன்னை ஆயத்தம் செய்து கொள்கிறார் என்று அர்த்தம்.

பம்பாயில் தொழிற்சாலைகள்நிறுவிப்பெரும் பொருள் ஈட்டிய ஒரு குஜராத்திக்காரர் தமிழ் நாட்டிலும் சில தொழிற்சாலைகளை நிறுவப் போவதாகவும், அவர் தம் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு, வட்டாரத்துப் புகழ் சேர்க்க விளம்பரம் செய்யப் போகிறார் என்பதும் கிசுகிசுக்கப்பட்ட விஷயங்கள். பல கோடி ரூபாய் மூலதனம் புழங்கும் தொழில்கள்.

அந்த ஸேட்டுக்கு இளம் வயதுதானாம். விளம்பரத்துக்காக ஏறக் குறைய ஒரு கோடி ரூபாய் ஒதுக்கு மளவுக்கு வசதி இருந்தது. முதன் முதலில் அவருடைய நம்பிக்கைக்குப்பாத்திரமாகும்வாய்ப்புயாருக்குக் கிட்டுகிறதோ அவர்களுடைய நிறுவனத்துக்கு நல்ல அறுவடை இருக்கும்.

''முரளி! ஸார் உங்களைக் கூப்பிடறார்!''

முரளி உள்ளே போனான்.

''லுக் ஹியர் மை பாய்!'' பீடிகை இல்லாமல் ராமநாராயணன் விஷயத்தை ஆரம்பித்து விட்டார். ''நீ இன்னும் ரெண்டு நாளிலே பத்து விதமான 'ஸ்லோகன்ஸ்' எழுதியாகணும். புடவைகள், ஷர்ட்டிங்ஸ், இது பற்றி நாலு. பிஸ்கட்ஸ், சாக்லெட், மால்டட் ஃபுட் இது பற்றி நாலு. காஸ்மெடிக்ஸ்லே ஸ்நோ, பவுடர் இது பற்றி ரெண்டு. எல்லாம் புது மாதிரியா இருக்கணும். ஹிரண்மயி கிட்ட மாடல் லே அவுட் போடச் சொல்லிட்டேன். பிக் பிஸினஸ். யூ மஸ்ட் பீ ஸ்மார்ட். ரியலி ஸ்மார்ட். ஓவர்டைம் ஒர்க் பண்ணினாலும் பரவாயில்லே நாளைக்கே வேணும். யூ கேன் கோ நௌ''...

அவனுக்கு உள்ளூற மகிழ்ச்சியாக இருந்தது. இரண்டு தினங்களும் ஹிரண்மயி அவனுடன் அதிக நேரம் இருப்பாள். அவர்கள் இருவரும் சேர்ந்து, கலந்து ஆலோசித்து, செய்ய வேண்டிய விஷயங்கள். தான் மட்டும் தனியாகச் செய்ய வேண்டுமென்றால் மிகவும் போர் அடிக்கும். ஆனால் இப்போது ராமநாராயணன் சொன்னதிலிருந்து இருவரும் சேர்ந்து கூட்டாகத் தயாரிக்க வேண்டிய நிலைதான்.



''நடு இரவில் சுதந்திரம் என்றால் என்ன?''

''மனைவி தூங்குகிற நேரமாயிருக்கும்!''

\- சி. பி. ஜெயன்

அவன் தன் மேசைக்குத் திரும்பியதும் சுரேஷ் அவனுக்காகக் காத்திருந்தான்.

''முரளி! இன்னிக்கும் நாளைக்கும் உனக்கும் ஹிரண்மயிக்கும் ஓவர்டைம் புக் பண்ணியிருக்கேன். எம்.டி. சொல்லியிருப்பாரே!'' 'ஆம்' என்ற பாவனையில் முரளி தலையசைத்தான். ''குட்! லுக் ஹியர்! கம்பெனி காரை எடுத்துண்டு... இடத்துக்குப் போ. அங்கே... சந்திச்ச விஷயத்தைச் சொல்லு. அவன் மூலமாத்தான் இது ஃபிக்ஸ் ஆகியிருக்கு. அந்த ஸேட்டோட ரெப்ரஸென்டேட்டிவ் இவன். இவனுக்குச் சாயந்திரமா ஹோட்டல் டிரிங்ஸ் வேணுமாம். ஏற்பாடெல்லாம் செஞ்சிட்டேன்னு சொல்லு. நான் சாயந்திரம் இவனை மீட் பண்றேன்னு சொல்லு. எந்த விதமா லே அவுட் போடணும்னு ஒரு யோசனை போலக் கேளு. அவனைக் கேட்டுப் போட்ட மாதிரி இருந்தால் அவனுக்குச் சந்தோஷமா இருக்கும். அவன் உருப்படியான ஐடியாஸ் தரமாட்டான். பரவாயில்லே. அவன் கிட்ட ஆர்க்யூ பண்ணக் கூடாது. யூ மேக் ஹிம் ஃபீல் பிக் அண்ட் இம்பார்ட்டெண்ட். மத்ததை நான் கவனிச்சிக்கிறேன். ஓ.கே. ஸ்டார்ட் ரைட் நௌ. பை தி பை! லஞ்சுக்கு அவனை இன்வைட் பண்ணு. குப்புசாமி கிட்டேயிருந்து நாற்பது ரூபாய் வாங்கிண்டு போ! லஞ்ச் ஃபிக்ஸ் ஆனவுடனே எனக்கு போன்பண்ணு! நான் லஞ்சுக்கு வர முடியாது. பெங்களூர் போயிருக்கேன்னு சொல்லு. சாயந்திரம் வந்திடுவேன். வந்ததும் அவனைப் பார்க்க உடனே வரேன்னு சொல்லிடு. மேக் ஹிம் ஃபீல் பிக். ஓ.கே!....''

முரளிக்கு ஹிரண்மயியைப் பார்த்துச் சொல்ல வேண்டும் போலிருந்தது. சுரேஷ் அவள் இருக்கும் இடத்தை நோக்கிப் போவதைப் பார்த்தான். வேறு வழியின்றி கேஷியரின் அறைக்குச் சென்றான். தனக்குத் திடீரென்று முக்கியத்துவம் ஏற்பட்டுவிட்டதாக உணர்ந்தான் முரளி. (தொடரும்)

கல்கி

இவன் கண்ணைத் திறந்தபோது அநேக மாக எல்லாம் முடிந்திருந்தது. ஆச்சரியங் கள் காத்திருந்தன. அதில் ஒன்று எதிரில். நாலடி உயரம். முக்கோண முகம். மற்ற உறுப்புக்களை உதாரணிக்க அப்போது உலகத்தில் பொருள்கள் இல்லை.

மாலன்

''பூமியின் கடைசி மனிதனுக்குக் காலை வணக்கங்கள்'' என்றது முக்கோணம்.

''என்னது?''

''பூமியின் கடைசி...'' அட்சரம் பிசகாமல் அதையே சொன்னது முக்கோணம்.

''யார் நீ?'' என்று அதிர்ந்தான் இவன்.

''அஸ்ட்ரோ கிரகத்து ஆசாமி. நேற்று இரவு பூமி எங்கள் கையில் விழுந்துவிட்டது. மனித குலம், மற்ற ஜீவராசிகள் எல்லாம் பிரளயத்தில் போய்விட்டன.''

''பிரளயம்?''

''ஆம். அலைகளின் தாக்குதல்.''

''அலைகளா?'' இவன் வெளியில் எட்டிப் பார்த்தான். பொட்டு ஈரம் இல்லை.

''ஆம். ரேடியோ அலைகள். உனக்குப் புரியாது. உங்கள் பாஷையில் அதற்கு வார்த்தைகள் இல்லை.''

இவனுக்குச் சுர்ரென்று கோபம் பொங்கிற்று. நேற்று இரவு உலகம் அழியும்வரைக்கும் இவன் யுனிவர்சிட்டி புரபசர். பயோ (எலக்ட்ரா) னிக்ஸில் டாக்டர். இவனுக்கு



ரேடியோ அலைகள் புரியாதென்று முக்கோணம் சிரிக்கிறது.

'அடேய், குள்ளா' என்றுகத் தவிரும்பினான். புரியாதாம். அத்தனை அல்பமா மனிதன்? சந்திரனை மிதித்ததடா எங்கள் விஞ்ஞானம். என்ன பிரயோசனம்? இந்தப் 'பிரளயத்தை'த் தடுக்க முடியவில்லையே. மனுஷ குலம் முழுவதும் போய்விட்டது! இனி யூனிவர் சிட்டி டாக்டரேட்? எலக்ட்ரானிக்ஸ்? சட்டென்று அந்தக் கவலை பிடித்தது.

''எல்லா மனுஷர்களையும் கொன்றுவிட்டு என்னை மட்டும் ஏன் பாக்கி வைத்திருக்கிறாய்?''

''உன்னை மட்டுமல்ல. ஒவ்வொரு ஜீவராசியிலும் இரண்டு. ஒரு ஆண், ஒரு பெண். ஒவ்வொன்றிலும் ஒரு மாதிரி சேகரித்திருக்கிறோம்.''

''எதற்கு? எங்களை என்ன செய்ய உத்தேசம்?''

''இந்தக் கிரகத்தை எங்கள் வளர்ச்சிப் பணிக்குப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானம். அதற்கு முன் இந்தக் கிரகத்தை முற்றிலுமாகப் பிடிக்கத் திட்டம். முழுசுமாகத் தெரிந்துகொள்ளும் நோக்கம். அதற்காக அமைத்திருக்கும்....'' முக்கோணம் அரை விநாடி தயங்கி வார்த்தைகளைச் சேகரித்தது.... ''உயிர் காட்சி சாலை இது.''

''Zoo?''

முக்கோணம் சரிபார்த்துக் கொண்டது. ''ஆமாம். ஆங்கிலத்தில் அப்படித்தான் அதற்குப் பெயர்.''

''ஆங்கிலம்! அடப் பாவி! எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாய்... இன்னும் ஏன் எங்களைப் பிடித்து....''

''எல்லாம் தெரியாது. பூமியின் பாஷை தெரியும். வெப்ப தட்பம் தெரியும். உயிர் வகைகள் தெரியும். ஆனால் அவற்றின் குணங்கள் தெரியாது. கற்றது கைம்மண் அளவு. கல்லாதது அஸ்ட்ரோ அளவு.''

''நிறுத்து'' என்று இரைந்தான் இவன். ''எங்களை உங்கள் கிரகத்துக்குக் கொண்டு செல்லத் திட்டமா?''

''இல்லை. அந்தச் சூழலில் உங்கள் ரசாயனம் மாறிவிடலாம். உங்கள் அமைப்பில் உங்களைப் படிப்பதற்காகத்தான் இந்த உயிர் காட்சி சாலை.''

இவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. 'ஆவாம். அதில் மனிதனை அடைப்பதாம். தொந்தரவு செய்யாதே என்று வெளியில் போர்டு தொங்க அஸ்ட்ராய்ட்கள் விநோதமாகப் பார்த்துக்கொண்டு நகர, வேடிக்கையாய்ச் சீண்ட இரக்கத்தில் பட்டாணியும், வாழைப்பழமும் இறைக்க...

வாட் அன் இன்ஸல்ட்! நான் ஓர் எலக்ட்ரானிக்ஸ் டாக்டர். சட்டென்று பக்கத்தில் கிடந்த பூச்சாடியைத் தூக்கி முக்கோணத்தின் தலையில் வீசினான். சின்னக் கீறல் விழுந்து ரத்தம் கசிந்தது. நம்மைப் போன்ற சிகப்பு ரத்தம். அவன் அலறவில்லை. பயப்பட



வில்லை. கோபப்படவில்லை. வலியில் சிணுங்க வில்லை.

''தாக்க முயற்சிசெய்யவேண்டாம். எங்கள் ஆயுதங்கள் பலமானவை. ஆனாலும் எங்கள் படிப்பு முடியும்வரை உங்களைக் கொல்லத் திட்டமில்லை. மாறாகத் தேவையான வசதிகள் கொடுக்க நினைக்கிறோம். உங்கள் படுக்கை, புஸ்தகங்கள், உங்கள் உணவெல்லாம் இந்தக் கூண்டிற்குள் கொணர்ந்து அமைத்திருக் கிறோம். வேறு என்ன தேவை?''

''தனிமை. தொலைந்துபோ!'' என்று உறுமினான் இவன். முக்கோணம் கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டது.

• • •

இவன் கோபம் அடங்கி நிதானமாக யோசித்தான். எல்லாம் போய்விட்டதே! மனிதன், அவன் கண்டுபிடிப்புக்கள், அவனுடைய விஞ்ஞானம் எல்லாம்.... இல்லை, விஞ்ஞானம் கொஞ்சம் பாக்கி இருக்கிறது, என் மூளையின் செல்களில். விஞ்ஞானம் மட்டுமில்லை. உணர்ச்சிகளும். கோபம், பயம், சுதந்திரம், உயிர்வாழும் ஆசை, அப்புறம் ஈகோ எல்லாம்.கையாலாகாத உணர்ச்சிகள். இவையெல்லாம் மறுபடி உலகைச் சிருஷ்டிக்குமா? ஈகோ இஸ் தி பவுண்டல் ஹெட் ஆப்ஹியூமன் ரேஸ். மனித குலத்தை உந்தும் சக்தி ஈகோ! சொன்னது யார்? அயன்ராண்ட்? அடச்சே! ஆளற்ற பூமியில் இனி எதற்குப் புத்தகங்கள். புத்தகங்களை எட்டி உதைத்தான். 'புஸ்தகத்தை மிதிக்காதேடா' அது சரஸ்வதி' அம்மா சொல்லியிருக்கிறாள் சின்ன வயசில். இனி அம்மாக்களுக்கு எங்கே போவது... 'வெயிட்! என்ன சொன்னாள், முக்கோணம்? பெண் ஒரு பெண் இருக்கிறாள்! இன்னும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. முயற்சி செய்து பார்க்கலாம். மறுபடி ஒரு உலகம், மனிதர்கள் எல்லாம் சாத்தியம். சாத்தியம்? முக்கோணங்கள் மனிதர்களைப் பெருக விடுவார்களோ? ம்ஹூம்.—மாட்டார்கள். ஸோ, மனிதர்கள் தழைக்க வேண்டுமானால், அவர்கள் பூமியை விட்டு விலக வேண்டும். அவர்களாக விலகப்போவதில்லை. விலக்கப்பட வேண்டும். எப்படி? யுத்தம் முடியாது. மிரட்டல் பலிக்கவில்லை. ஆசை காட்டுவது சாத்தியமில்லை. அவர்களுக்கு உணர்ச்சிகள் இல்லை. அவர்கள் பேச்சில் 'விருப்பம்' என்ற வார்த்தையை உபயோகிக்கவில்லை. எல்லாம் திட்டம், தீர்மானம், முடிவு இவைதான். எப்படி அவர்களை அகற்றுவது? எப்படி? எப்படி? யோசித்து யோசித்துச் சலித்துத் தூங்கிப் போனான்.

• • •

''மனிதா, மனிதா'' என்று உசுப்பியது' முக்கோணம். எழுந்து உட்கார்ந்ததும்'உதவி' என்று தயங்கியது.

''என்ன?''

''இரவு தூங்கிய இரண்டு பிராணிகள் எழுந்திருக்கவே இல்லை. உடல் ஜில்லிட்டுப் போயிருக்கிறது. இந்தச் சமயத்தில் அவைகளை என்ன செய்து எழுப்புவது?''

''உடல் ஜில்லிட்டு.... அவ்வளவுதான், அவை செத்துப்போய்விட்டன.''

''செத்துப்போதல்?''

''ஆமாம். மரணம்.''

''மரணம்?''

''மரணம் தெரியாது? உயிர் நீத்தல். சாகவே மாட்டீர்களா நீங்கள் எல்லாம்?''

''சாதல்...'' தன் வார்த்தை அடுக்குகளில் தேடியது முக்கோணம். அவைகளின் உயிர் நிறுத்தப்பட்டு விட்டது என்று சொல்கிறீர்கள்?''

''உயிர் நிறுத்தம்... அப்படிச் சொல்கிறீர்களா அதை?'' ஆமாம், அதுதான்.''

''அவைகளுக்கு வேண்டிய சூழல் அமைத்திருக்கிறோம். உணவு கொடுத்திருக்கிறோம். சீதோஷ்ணம் ஏற்படுத்தியிருக்கிறோம். அப்புறம் உயிர் நிறுத்தம் ஏன்?''

''உயிர் வாழ இவை மட்டும் போதாது.''

''இன்னும் என்ன வேண்டும்?''

''அன்பு. துணை. சுதந்திரம்.''

''புரியும்படி சொல்லு.''

''உலகின் ஜீவராசிகள் உயிர்வாழத் தேவையான ஒன்று. அன்பு. அன்பில்லாத உயிரை ஆண்டவன் கொண்டு போய்விடுவான்.''

''ஆண்டவன்?''

''ஆமாம். அதுதான் மரணம். நம் கண்ணுக்குத் தெரியாத சக்தி. கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்.''

''அன்பு காட்டுவது எப்படி?''

இவன் ஒரு நிமிடம் தயங்கினன். சட்டென்று மனத்தில் ஒரு மின்னல் வர

''வா, சொல்லித்—தருகிறேன்.''

◆ ◆ ◆

அன்று மாலை அவள் இவனுடைய கூண்டிற்கு வந்து விட்டாள். முன்னுள் அமெரிக்கப் பிரஜை. எழடி இருந்தாள். ஆரோக்கியம் கன்னத்தில் தெரிந்தது. மற்றொரு மனித உயிரைப் பார்த்த சந்தோஷம் முகத்தில்.

''அப்பாடா! நீ ஒர்த்தன் இருக்கிறயா! தாங்க் காட்!''

''வெல்கம்! '' கையை நீட்டினன். ''இப்படிப் பூண்டோடு அழித்துவிட்டார்களே பாவிகள்!''

''ஒன்றும் மோசமில்லை. விலைவாசி, பெட்ரோல் பஞ்சம், நியூட்ரான் பாம், கபட அரசியல், வஞ்சம் எல்லாம் நிச்சயம் போய்த் தொலைந்து விட்டது.''

''பிரயோசனம்? அதோடு மனித குலமும் அல்லவா போய்விட்டது?''

''ஹுக். நான் ஆன்த்ரபாலஜி மாணவி. உங்களுடைய புராண, சமூகங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் செய்திருக்கிறேன். எங்கள் பைபிள், உங்கள் புராணங்கள் எல்லாம் உலக அழிவைப் பற்றிப் பேசுகின்றன. 'கலி முற்றி பிரளயம் நேர்ந்து உலகம் அழியும் போழ்தில் என்றென்றும் ஏழு உலகத்தையும் காத்தருளும் மகாவிஷ்ணு கல்கியாய் அவதரித்து... அ....! என்ன சொல்ல வந்தேன்? உலகம் அழிந்துவிடுவதைப் பற்றிய கற்பனை, கவலை, பயம் எல்லாம் காலம் காலமாக மனிதர்களிடையே இருந்து வந்திருக்கிறது. ஆனல் அதைத் தவிர்க்க நாம் என்ன செய்திருக்கிறோம்? வி வேர் பாதர்ட் எபௌட் மூன், பட் நாட் எபௌட் எர்த்.''

''போகட்டும் பெண்ணே... இனி நாம் புதியதோர் உலகம் செய்வோம்.''

''அப்படியென்றல்...?''

''மறுபடி ஆதாம் ஏவாள் முயற்சி.''

''ஸாரி. எனக்கு செக்ஸ் அலுத்துவிட்டது. பதினன்காம் வயதில் துவங்கியது என் செக்ஸ் அனுபவம். இன்று எனக்கு இருபத்தி ஆறு. இந்தப் பன்னிரண்டு வருடத்தில் மூன்று ஆண்கள். எல்லோரும் சுயநலமிகள்.''

''பர்கெட் இட். பழைய உலகத்தின் தவறுகள் பிரளயத்தில் போய்விட்டன. இன்று நமக்கு இது கடமை.''

''யோசிக்கிறேன்.''

மறுநாள் வந்து முக்கோணம் விடை பெற்றுக் கொண்டான்.

''போய் வருகிறேன் நண்பனே!''

''என்னது?''

''இந்தக் கிரகம் நாங்கள் தங்க வாயக்கற்றது. எனவே கிளம்புகிறோம்.''

''என்ன ஆயிற்று?''

''எங்களுக்கு அன்பு காட்டத் தெரியவில்லை. மரணத்தை ஜெயிக்க முடியவில்லை. ஒரு நாளில் எங்களுடைய இரண்டு ஆட்களின் உயிர் நிறுத்தப்பட்டு விட்டது.''

''வாட்!'' என்று கூவினுள் ஆகாஸ்.

அவர்கள் பூமியை விட்டுக் கிளம்புகிற வைபவத்தைக் கண்ணுல் பார்த்துவிட்டு அவள் அருகில் வந்தான்.

''என்ன செய்தாய், அவர்கள் மிரண்டு போய்ப் புறப்பட?''

''தந்திரம்'' என்று இவன் தன் நெற்றிப் பொட்டைத் தட்டிக் காண்பித்தான். ''இதனுல்தான் இவர்களை ஜெயிக்க முடியும் என்று தோன்றிற்று. முக்கோணத்தின் ரத்தத்தைப் பார்த்ததும் தோன்றியது சந்தேகம். அவர்களின் மெட்டபாலிசம் நம்மைப்போல்தான் எனத் தோன்றியது. அவர்களும், கார்பன், ஹைட்ரஜன், நைட்ரஜன் சமாசாரம்தான் எனத் தோன்றியது. அதாவது ஊட்டம் உடம்பை வளர்க்கும். விஷம் ஆளைக் கொல்லும். விஷத்திற்குக் காத்திருந்தேன். அன்பு செய்யச் சொல்லிக் கொடுத்தேன். அவன் முட்டாள்தனமாய் பாம்பிற்கு முத்தம் கொடுத்தான்.

''அது விஷம் என்று அவனுக்குத் தெரியாதா?''

''தெரிந்திருக்கவில்லை. விஷ ஜந்துக்கள் பூமியின் விசேஷம். நம் அமைப்பின் விளைவு என்பது பயாலஜியின் கர்ண பரம்பரைச் சந்தேகம்.''

''கிரேட்!'' என்று கூவினுள் ஆகாஸ். தயங்கினுள். ''முதல் நாள் பதற்றத்தில் உன் பெயரைக் கேட்டுக் கொள்ளவே இல்லை''

''அவ்தார் கல்கி''

''என்னது?''

''நீ எளிமையாய்க் கூப்பிட, கல்கி''

''வாவ்!'' என்று முத்தமிட்டாள் ஆகாஸ்.



புதிய மேன்மையான 'கீ' யில் – அதிக
வெண்மையும் பளபளப்பும் காண்பீர்.



கயல் நுணுக்க இயல்!

நான் சென்னை அடையாற்றில் உள்ள சென்டிரல் பாலிடெக்னிக்கில் Diploma in Fisheries Technology & Navigation என்கிற கோர்ஸில் சேர்ந்து மூன்று ஆண்டுகள் படித்தேன். இதற்கு எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்திருந்தால் போதும்.

இந்தப் படிப்பின் மூலம் மீன்கள் எப்படி பிறக்கின்றன, வளர்கின்றன; எந்தச் சூழ் நிலையில் இருக்கின்றன, எந்தக் காலங்களில் பிடிக்கலாம் என்பனவும், மீன் மூலமாக என்ன பொருள்கள் கிடைக்கின்றன என்றும், மீனின் மூலப் பொருள்கள் உலகுக்கு எவ்வளவு அவசியம் என்பதையும் அறிந்துகொள்ளலாம். பிராக்டிகலாக மீன்களைப் பிடிப்பது பற்றிக் கூடச் சொல்லித் தருகிறார்கள். ஆனால் எங்களுக்கு இதுவரை வேலை கிடைக்காமல் இருப்பதுதான் கொடுமையிலும் கொடுமை. தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான் (எங்களை வேலைக்குத்Sub Inspector of Fisheries என்கிற மீன் துறை உதவி ஆய்வாளர்) தேர்வு செய்கிறார்கள்.

மேற்கூறிய கோர்ஸுக்குச் சென்னை சென்ட்ரல் பாலிடெக்னிக்கில் வருடத்திற்கு 20 மாணவர்களைத்தான் சேர்க்கிறார்கள். இதில் பாதிப்பேர்தான் தேர்ச்சி பெற்று வருகிறார்கள். இந்த டிப்ளமா வழங்கும் தொழில் கல்லூரி வேறு எங்கும் தமிழ் நாட்டில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வளவு குறைந்த எண்ணிக்கையில் படித்தவர்களுக்கே இந்தக் கதி!

இறால் பதப்படுத்தும் நிலையம் எங்களை வேலையில் சேர்க்கலாம். தமிழ் நாட்டில் உள்ள ஏரி, குளம் முதலியவற்றை அரசாங்கம் எங்களிடம் ஒப்படைத்தால் நாங்கள் மீன் வளர்த்து அரசாங்கத்துக்கு 50 சதம் வருமானமும் மீதி 50 சதம் எங்களுக்குச் சம்பளமாகவும் பயன்படுத்த முடியும். இதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டமும் நாட்டில் மீன் உற்பத்தியை அபிவிருத்தி செய்யவும் முடியும்.

-தி. மூர்த்தி

தகுதிகள் : Diploma in Fisheries Technology & Navigation (கயல் நுணுக்க கலம் இயக்கும் இயல்)

வயது : 27

விலாசம் : தி. மூர்த்தி
29, வட புதுத்தெரு,
அனந்தபுரம்
(வழி) விழுப்புரம் - 605201

ஒரு திரில்லிங் நியூஸ்!

ராஜ் நாராயண் இப்போது ஆங்கிலத்தில் ஒரு புத்தகம் எழுதிக்கொண்டு இருக்கிறார்.


அவர் ஹிந்தியில் சொல்வதை, அருகிலிருக்கும் ஒருவர் மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் எழுதி வருகிறார். விஷயம், "ஜனதா பிறந்து வளர்ந்த கதை!"

வீக்எண்ட் ரெவ்யூவிலிருந்து

-சேலம் மதிகுடி



விருது கொடுத்தவர்கள் முட்டாள்களா?



படம்: ரேகா

● திரு கோவி. மணிசேகரனின் சிறுகதை கண்டேன். தமிழனின் மேன்மையைத் தமிழனே தாழ்த்தும்படியாக அக்கதை இருந்தது.

தெஞ்சை அள்ளும் தஞ்சை விமானம், ராஜராஜப் பெருமன்னனின் பேரபிமானம் பெற்ற ஆலயக் கட்டிடக் கலை நிபுணர் ராஜராஜப் பெருந் தச்சன் இயற்றி செயலாக்கிய கவிதை. சிறந்த பொறி இயல் நுணுக்கத்தைத் தன்னகத்தே கொண்ட அவ்விமானம் 'கதல கர்ணம்' என்ற முறையில் உருவானது.

ராஜ ராஜனின் பத்தாம் நூற்றுண்டுக்கு முன்பே கூட அயல் நாட்டினரின் யாத்திரை நிகழ்ச்சிகள் உண்டு. அவ்வழியே அப்போது வந்த யாத்திரிகர்களின் வருகைப் பதிவாகும் கோபுரத்திலுள்ள அவ்வயல் நாட்டு உருவம். மற்று அதற்கும் தஞ்சைக் கோயிலை நிர்மாணித்த தென்னகப் பேரறிஞனுக்கும் துளியும் சம்பந்தம் இடையாது.

திருப்பதி ஜி. கே. மணி ஸ்தபதி

● 'குளோனிங்' என்னும் விஞ்ஞான விந்தையில் கூறிய அனைத்தும் சரியே. ஆயினும் இம்முறையில் உருவாகும் மனிதன் உடற்தோற்றத்தில் (Physical appearence) மட்டுமே உயிர் செல் எடுக்கப்பட்ட மனிதரின் அமைப்பைப் பெற்று இருப்பானே அன்றி மற்றவற்றில் அல்ல. சூழ்நிலையே ஒருவன் ஒரு கலையில் சிறந்து விளங்கக் காரணமாகிறது. சூழ்நிலை, விருப்பம், பயிற்சி இவையே ஒருவனை மாறுபடுத்துபவை.

பெரிய காஞ்சிபுரம் ஜி. கார்த்திகேயன்

● ஆச்சரியம் தரக் கூடிய புகைப்படம் ஒன்றைப் பிரசுரித்ததோடு நீர் நின்றிருக்கலாம். அதை விட்டு விட்டு எத்தனை தலைகள் என்று எண்ணச் சொல்லி, நாங்களும் எண்ண ஆரம்பிக்க, எங்கள் ஒரு தலை ஒன்பது தலையாக மாற...

கோவில்பட்டி இலங்கை அரசன்

● சரிதாவுக்கு விருது கிடைக்கவில்லைதான். ஆனால் போயும், போயும் 'ரேகா'வுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்கிறீரே! அந்த விருதைக் கொடுப்பவர்கள் முட்டாள்கள் ஒன்றும் அல்ல. ''ரேகா'' நடித்த அந்தப் படத்தைப் போய்ப் பாரும்!

கல்கத்தா-26 கே. கே. பாலசுப்பிரமணியன்

● 'புள்ளிகள் செய்திகள்' பகுதியில் தாங்கள் எழுதியுள்ள டாக்டர் எல். ஆர். டி. ரீராஜ்குமார் பற்றிய தகவல்களோடு அவர் தமிழக புகழ் பெற்ற காங்கிரஸ் தியாகி எல். ஆர். தியாகராஜனின் புதல்வர் என்பதையும் சேர்த்துத் தந்திருக்கலாம். தந்தை வழியில் மகனும் உதவிகள் புரிந்து வருகிறார்.

மதுரை-16 ஆர். வி. பிரசாத்

● 'ஓட ஓட விரட்டினால்' வழக்கமான சம்பவம் என்றாலும் ஜோதிர் லதா கிரிஜாவின் கைவண்ணத்தில் அதைப் படித்ததும், நேர்மையான எஜமானன் இல்லாதவரை நேர்மையான ஊழியன் கிடையாது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

பழவந்தாங்கல் ஆனைக்கூத்தன்

● சென்ற இதழில் 'பிடித்ததும் பிடிக்காததும்' என்ற தலைப்பில் 'நமக்கு நிஷாவிடம் ரொம்பப் பிடித்தது ரம்ஜான்போது நாகூர் செல்லத் தவறாத முஸ்லிமானபோதிலும் சாந்தோம் சர்ச், மாங்காடு கோயில் ஆகியவற்றையும் தரிசிக்கத் தயங்க மாட்டேன் என்று அவர் சொல்வது!' என்ற வரிகளைப் படித்து மிகவும் வேதனைப்பட்டேன். ஏனென்றால் இஸ்லாம் அப்பழுக்கற்ற ஏக தெய்வக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட மார்க்கம்.

சென்னை-1 நாகை ஜி. அஹமது

● ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ஆசியுடனும், ஆலோசனையுடனும், ''ஸ்ரீ சங்கரா மெட்ரிக்குலேஷன் இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்' கொடைக்கானலில் ஜூலை முதல் வாரம் முதல் தொடங்க இருக்கிறது. போர்டிங் வசதியுடன், 4, 5 வகுப்புக்கள் மாத்திரம் இந்த ஆண்டு தொடங்கும். ஒவ்வொரு ஆண்டும் மேல்வகுப்பு தொடர்ந்து நடத்தப்படும். பள்ளியில் மாணவர்களைச் சேர்க்க விருப்பம் உள்ளவர்கள் மே மாதம் 20ம் தேதிக்குள் மனுக்கள் அனுப்ப வேண்டும். மேல் விவரங்களுக்கு

திருச்சி ஆர். பஞ்சாபகேசன்

காரியதரிசி, சீதாலட்சுமி

ராமசாமி கல்லூரி



எம்.எல்.ஏ.க்கள்
அரசியல்
தலைவர்கள்
மகாராணி - இளையராஜா
சூப்பர் மேன்
ஜோலா!..
ஜோலா - மஞ்சு



போட்டி!
நல்ல காலம் பொறக்குது!
நல்ல காலம் பொறக்குது!
எதிரி அம்போன்னு போறான்!
குடுகுடுப்பாண்டி
ஜோஸ்யர்
வானம் பொழியுது..
பூமி விளையுது..
உனக்கேன்
வரி!
கட்ட பொம்மன்
போராட்டம்..பார்!
பாம்பு கீரி..
போராட்டம், பார்!
மகுடி வித்தை



விகடன்

அனுராதா ரமணன்

''அந்தக் காலத்திலே என். எஸ். கே., டி. ஏ. மதுரம் நானெல்லாம் ஒரு குரூப்பு... என்ன... பதினறு, பதினேழு வயசிருக்கும் எனக்கு அப்ப. அவங்களுக்கு நான் செல்லப் பிள்ளை மாதிரி... இப்ப மாதிரி — போட்டி பொறாமை யெல்லாம் கிடையாது அப்ப. 'அடேய் விகடா, இங்கே வாடா... எங்கே, பசு மாடு மாதிரி காதை மாத்திரம் அசைச் சுக் காமிடாம்பாரு, என். எஸ். கே. ஒரு தடவை, ரொம்ப சந்தோஷம் தானாம, தன்னோட வைர மோதிரத்தைக் கழட்டி எங் கையிலே போட்டுட்டாருன்னு பார்த் துக்குங்க...''

சீமாச்சு தம்மைச் சுற்றிக் குழந்தைகளை உட்கார்த்தி வைத்துப் பழைய காலக் கதை களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இருபது வருஷங்களுக்கு முன்பு வரையில் அவர் கொஞ்சம் நல்ல ஸ்திதியில் இருந்தவர் தான். அந்த தைரியத்தில் ஒன்றுக்கு மூன்றாய் பெண்டாட்டிகளை வைத்துச் சில காலம் அமோகமாய் வாழ்ந்தார்.

இன்று — கால ஓட்டத்தில் மிஞ்சியது ஒரு பெண்டாட்டியும் ஒன்பது குழந்தைகளும் தான்...

''அந்த வைர மோதிரம் என்னப்பா ஆச்சு?''

சுற்றிவர உட்கார்ந்திருந்த சிறிசுகளில் ஒன்று கேட்கிறது.

''முழுங்கியாச்சு... ஆ... வயித்துக்குள்ள போச்சு...'' — அவர் தமது பல்லில்லாத வாயைப் பெரிசாய்த் திறந்து காண்பிக்க, கேட்ட சிறுமி அதிசயித்துப் பார்க்கிறாள்.

''என்னது... மோதிரத்தை முழுங்கிட் டியா...''

''அட மக்குப் பொண்ணு...மோதிரத்தை நான் ஒருத்தனே அப்படியே 'லபக்'குனு வாயில போட்டு முழுங்கிட்டேன்னு நினைச் சியா.. மோதிரம் வித்த பணத்துல அரிசி வாங்கி, உங்க அம்மாவுக்கு மருந்து வாங்கி, உன் அண்ணனுக்கு டாக்டர் கிட்டக் கூட்டிக் கிட்டுப் போயி... ஆக எப்படியோ சோறாவோ மருந்தாவோ நம்ம எல்லார் வயித் துக்குள்ளேயும் அந்த மோதிரம் போயிடுச்சு. இதோ பாரு... கணேசு வயித்தில உங்கம்மா வோட ஜடைபில்லை... டேய்... இங்க வாடா... உன் தொந்தியைப் பார்க்கலாம்.''

கடைக்குட்டி மணசு வயிற்றில் தகப் பன் கிசுகிசு மூட்ட பையன் ஏற்கனவே பசியால் குழைந்திருந்த வயிற்றை இன்னமும் எக்கிக்கொண்டு சிரிக்கிறான்.

''உங்களையெல்லாம் பெத்து வளர்க்க— உங்க அம்மா எத்தனை நகையை வித்திருக்கா தெரியுமா? லலிதா பொறந்தப்போ கைக் கொலுசு, ரமேசு பொறந்தப்போ கல்லு வளையல், சுப்புணி பொறந்தப்போ அம்மா வோட தெக்லசு...''



சீமாச்சு சொல்லிக் கொண்டே போக நாலைஞ்சு பொடிசுகள் எதிர்த் திண்ணையில் பெரும் உருவமாய்ச் சாய்ந்திருந்த ரங்கனைப் பார்க்கிறார்கள்.

பதினாறு வயசு ரங்கன், திண்ணை கொள்ளாமல் சாய்ந்திருந்தான். அசாத்தியப் பருமன். தெருவில் போகிறவர்கள் அனைவருமே நின்று ஒரு முறை இவனைப் பார்த்துவிட்டு, தங்களுக்குள் பொங்கும் சிரிப்பை அடக்க முயன்று தோற்றுப் போய்...'விருட்'டென நகருவார்கள். அப்படியொரு சதைமலை.

''ஏம்பா... அம்மாவோட எத்தனை நகைங்களை இந்த ரங்கன் முழுங்கியிருப்பான்..''

சின்னது ஒன்று கேட்க ரங்கனின் கண்களில் மளமளவெனக் கண்ணீர்...

''அவனுக்குத்தான் இந்த வீட்ல அதிகச் செலவே இல்லை....'' — சீமாச்சு பெருமூச் செறிகிறார்.

முதல் இரண்டு மனைவிகளுக்கும் பிள்ளையே இல்லாமல் மூன்றுமவளுடன் காசியும், ராமேச்வரமும் போய் தவமாய்த் தவமிருந்து பிறந்தவன் இந்த ரங்கன்.

பிறந்தபோது எல்லாக் குழந்தைகளையும் போல் சாதாரணமாய்த்தான் இருந்தான். நாளாக ஆக பலூனை ஊதினாற்போல் ஊதிக் கொண்டே போக... வைத்தியர்கள் இது ஆரோக்கியத்துக்கு அறிகுறி இல்லை' என்று உதட்டைப் பிதுக்கினர். சீமாச்சு இன்னும் பெரிய டாக்டர்களிடம் மகனைக் காண்பித்த போது, அவர்கள் ரங்கனின் உடம்பில் உப்புச் சத்து அபரிமிதமாய் இருப்பதாயும், இதைக் குறைக்கவும், உப்புக் குறைந்து நீராய் இறங்கவும் கொடுத்த மாத்திரை மருந்துகள் கணக்கு வழக்கில்லை.

ஒரே மகனுக்குவைத்தியம் செய்ய வேண்டுமென்றாலே சீமாச்சுவின் நிலையில் கொஞ்சம் யோசித்துத்தான் ஆக வேண்டும். ரங்கன் பிறந்த வேளை, அவர் மனைவி மேலும் மேலும் பெற்றுக் கொண்டே போனதுதான்.

இன்றுவரை ரங்கன் டாக்டர் சொன்ன ஒன்றை மட்டும் கடைப்பிடித்து வருகிறான்.

''சோற்றிலோ, வேறு எந்தப் பதார்த்தத்திலேயோ ஒரு சிட்டிகை உப்புகூடக் கலக்காமல் சாப்பிடு'' என்பதுதான் அது.



சோறும் நிறையத் தின்ன முடியாது... காலையும் இரவும் ஒரு கவளம் வெறும் சோறு.

என்றாவது சீமாச்சுவின் கையில் பணம் சேர்ந்தால் நீர் இறங்க மாத்திரை வாங்கித் தருவார். அந்த மருந்தைச் சாப்பிட்ட ஒரு வாரத்துக்கு ரங்கன் உடம்பு வீக்கம் வடிந்து சற்று பார்க்கச் சகிக்கிறாற்போல் இருப்பான். இல்லாவிட்டால் இப்படித்தான். திண்ணையோடு திண்ணையாய் நகர மாட்டமல் அப்படியே நகர்ந்தாலும் ஒரு குன்று அசைவதைப் போல...

இந்த வீட்டிலேயே இவன் ஒருவனுக்குத்தான் சோற்றுக் கவலையே கிடையாது. ஆனால் அப்பா படும் சிரமங்களும், மற்ற குழந்தைகளின் வயிற்றை நிரப்ப அவர் இன்னமும் நைப்பாசை விடாமல் ஒவ்வொரு படக் கம்பெனியாய் ஏறி இறங்குவதும், தான் இப்படி எதற்குமே உதவாதவனாய் உட்கார்ந்து இருப்பதுமே அவனது பெருங் கவலை களாய்...

ஒரு கிண்ணம் சோற்றை அத்தனை குழந்தைகளுக்கும் சிறு சிறு கவளங்களாக உருட்டிப் போடும் சீமாச்சு, இது மாதிரி அந்த நாளையக் கதைகளை... தான் எம். கே. தியாகராஜ பாகவதருடன் நடித்ததை, டி. ஆர். ராமச்சந்திரனுடன் பம்பாய் போனதை, என்.எஸ். கே.யின் செல்லப்பிள்ளையாய் இருந்ததைக் கதை கதையாய்க் குழந்தைகளுக்குச் சொல்வார். அவர்கள் பேசுவதைப் போலப் பேசிக் காண்பிப்பார். இல்லாவிட்டால் ஆடு மாடு போலக் கத்திக் காண்பிப்பார். கண்களை உருட்டி, ஒரு காதை மட்டும் அசைத்துக் காண்பிப்பார்....

பிள்ளைகள் இதை ரசித்தபடி அரை வயிற்றுச் சோற்றுடன், வாய் கொள்ளாத சிரிப்புடன் எழுந்து விடுவார்கள்.

ரங்கனுக்கு மட்டும் சிரிப்பு வராது... எப்படி வரும்? அப்பாவின் நிலைமையை நன்கு உணர்ந்தவனாயிற்றே.

''அப்பாவுக்கு மறுபடியும் படத்திலே நடிக்க சான்ஸ் கிடைக்கணுமே சாமி...''

—இதுதான் அவனது தினசரி பிரார்த்தனை.

சீமாச்சு அலுக்காமல் சலிக்காமல் தினமும் சலவைக் கண்ணுகிப் போன பட்டு ஜிப்பாவையும், ஜரிகை யெல்லாம் உதிர்ந்து பல்லைக் காட்டும் அங்கவஸ்திரத்தையும் எடுத்து மாட்டிக் கொண்டு செருப்பில்லாத கால்கள் தேய...பட்டிணத்து ஸ்டுடியோக்களைச்சுற்றிச் சுற்றி வருகிறார்.

ஒரு காலத்தில் இவர் வளமாய் வாழ்ந்த போது இவரால் முன்னுக்கு வந்த ஒரு சிலர் வேண்டா வெறுப்போடு கொடுக்கும் ரூபாய்களும், அங்கவஸ்திரம் நிறைய உதாசீனப் பேச்சுக்களுமாய், முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு அவர் திரும்பி வருவதைப் பார்த்தால் ரங்கனுக்கு அழுகையாய் வரும்.

அன்றுகூட, சீமாச்சு பக்கத்துத் தெருவில் ஏதோ ஷூட்டிங் என்று கிளம்பிவிட்டார். குழந்தைகள் கூட ஷூட்டிங்கை வேடிக்கை பார்க்க ஓடிவிட்டார்கள்.

''இப்பப் போனா சாயந்திரம்தான் வருவேன். எப்படியாவது அந்த டைரக்டரைப் பிடிச்சு ஒரு சின்ன தலையைக் காட்டறாப் பல ஏதாவது உதவுங்கன்னு கேட்டுடறேன். அப்படி எதுவுமில்லேன்னா எடுபிடி வேலைக்காவது வச்சுக்குங்கன்னு கேக்கறேன் கமலம்... நீ சும்மா அழுவாதே... சாயந்திரத்துக்குள்ள குழந்தைங்க திரும்ப வந்தா... இந்தா எட்டணா...உடைச்ச கடலை வாங்கிக் கொடுத்துச் சமாளி... என்ன.. இந்த எடத்துலேயும் வழக்கமான பதில்தான் கிடைச்சுதுன்னா நான் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி வரைக்கும் போய் வரேன்.''

தாயிடம் தந்தை பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் ஊன்றிக் கவனித்தபடி திண்ணையில் சாய்ந்திருந்த ரங்கனுக்கு இருப்பே கொள்ளவில்லை.

அப்பா கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போய் ரத்த தானமளித்துவிட்டுப் பணம் வாங்கி வருவார் என்பது அவனுக்குத் தெரியும். முன்னைவிடவும் வயசாகி, தெம்பிழந்த அப்பா அடிக்கடி இப்படி ரத்ததானமளிப்பது அவனால் சகிக்க முடியாத ஒன்று.

''நானும் வரேம்பா...''

ரங்கனும் அவருடன் கிளம்ப...

''எங்கேடா...''

அவர் திகைத்து நிற்க,

''எனக்கும் ஷூட்டிங் பார்க்கணும்னு ஆசையா இருக்கு...''

ரங்கன் தனது சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு பொத்தான் போட முடியாததால் அப்படியே திறந்து விட்டபடி சீமாச்சுவுடன்ஷூட்டிங்நடக்கும் இடத்துக்குச்செல்ல தெருவெங்கும் 'ஓ'வென்ற சிரிப்பு அலைமோதுகிறது.

ஷூட்டிங் நடக்கும் இடத்தில்...

அவரவர்கள் தங்களது வேலையைக்கூட விட்டுவிட்டு ரங்கனைத்தான் அதிசயமாய்ப் பார்க்கிறார்கள்.

''உங்க படத்துல ஒரு சான்சு...''


சீமாச்சு எண்சாண் உடம்பையும் குறுக்கியபடி சொல்ல, டைரக்டர் — வைத்த விழி வாங்காமல் ரங்கனையே பார்க்க...

''ஓய்... உமக்கு வயசாயிடுச்சு. உம்ம பிள்ளையா இது... இவனுக்கு வேணா சான்ஸ் தரேன்....''

சரித்திர ஆசிரியர் : குறிப்பு எழுதிக் கொள்ளுங்கள் 'சிவாஜியின் அன்னை ஜீஜீ...

ஒரு மாணவன்: ''தப்பு சார். ஜெமினியின் மகள்தான் ஜீஜீ'' -ஆர். கோபாலன்




ஒவ்வொரு துளியிலும் தேர்ந்தெடுத்த தேங்காய்களின் நறுமணம்!
Yendelux
coconut oil
என்டிலக்ஸ்
தேங்காய் எண்ணெய்
மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
போன் : ஆபீஸ் : 2244, 4484, மில்ஸ் ; 2266, 4611
DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR
VIRUDHUNAGAR, Phone : 3107, 3745.

''இவனுக்கு நகைச்சுவைன்னு என்னன்னே தெரியாது சார்... சீக்கு உடம்பு...''

''இந்தக் காலத்துல நகைச்சுவைன்னு தனியா டயலாக் எதுவும் இடையாதுய்யா. வேணும்னு உம்ம பிள்ளையை அனுப்பும்... என் படத்துல ரெண்டு சீன் வரட்டும்... உடம்பைப் பார்த்தே சிரிப்பாங்க...''

சீமாச்சுவுக்கு டைரக்டரின் வார்த்தைகள் மகா ரோஷமாய் இருந்தாலும்... ரங்கன் அவரது பின்னுலிருந்தபடியே விடாமல் நச்சரித்ததால் 'சரிதான்' எனத் தலையாட்ட...

அட்வான்ஸாக நூற்றியொரு ரூபாய்...

அது, அந்தக் குடும்பத்தில் ஐம்பது லட்சம் ரூபாய் லாட்டரிச் சீட்டு விழுந்தாற் போல...

சீமாச்சு தன் மகனுக்கு தான் செய்யும் நன்றிக் கடனுக நீர் இறங்கும் மாத்திரைகளை ஒரு பாட்டில் வாங்கித் தந்தார். மருந்து உள்ளே சென்றதாலும் குடும்பத்தினர் வயிருரச் சாப்பிட்ட திருப்தியாலும் நிம்மதியாகக் கண் மூடிய ரங்கன் தான் சினிமாவில் எப்படி நடிக்கப் போகிறேமோ என்கிற சந்தோஷப் பதற்றத்துடன் தூங்க...

அடுத்த வாரம் ரங்கனது காட்சி படமாக்கப்படவிருக்க...அன்றுமகனுடன்டைரக்டரைப் பார்த்துவிட்டு உடைகளுக்கு அளவு கொடுக்கப் போன சீமாச்சு டைரக்டரின் 'திமர்' கோபத்துக்குக் காரணம் தெரியாமல் திகைத்து நின்ருர்.

''ஒரு வாரத்துக்குள்ள என்னய்யா பண்ணினீங்க... பையன் உடம்பு பாதியா இருக்கே இந்த உடம்பைப் பார்த்தா எவனய்யா சிரிப்பான்...''

''மருந்து வாங்கிக் கொடுத்தேன்... அது வந்து... அவன் அப்படி ஊதியிருந்தா, மூச்சு விடவே சிரமப்படுவான். கையில பணமிருந்தா தினமும் மாத்திரை வாங்கிக் கொடுத்துக் குழந்தை உடம்பை ஓரளவுக்கு நல்லா வச்சிருப்பேன்... என்ன செய்ய— பணம் கிடைக்கிறப்பத்தான் மருந்து வாங்கித்தர வேண்டியிருக்கு.. அவனால எங்க வயித்துப் பசி அடங்கறப்ப, நாங்க அவனேட உடம்பைக் கொஞ்சமாவது கவனிக்க வேண்டாமா...''

''அந்தக் கதையெல்லாம் யாருக்கு வேணுமய்யா... பையன் முன்னைப் போல ஆனு அழைச்சுக்கிட்டு வாரும். இல்லாட்டி அடுத்த வாரத்துக்குள்ள அட்வான்ஸைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்துட்டுப் போயிட்டே இரும்...''

சீமாச்சு மகனுடன் குனிந்த தலை நிமிராமல் வெளியேற...

வீட்டுக்குள் வந்ததும் வராததுமாய் ரங்கன் தன் தாயிடம் விசாரிக்கிருன்:

''ஏம்மா... ராவுக்கு குழம்பு, பொரியல் ஏதாவது இருக்கா...''

''கொஞ்சம் இருக்கு... குழந்தைங்களுக்கு அது போதும்... ஏண்டா ரங்கா புதுசாக் கேக்கறே...''

''இன்னிக்கு ஒரு நாளைக்கு அவங்களுக்கு மோர் சாதம் போடு...''

''என்னடா ரங்கா...''

''நீ போடும்மா சொல்றேன்...''

அவன், தாயை ஒருகுரலில் அதட்டிவிட்டுத் தனது தட்டை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார...

கமலம் அழுதுகொண்டே அவனுக்குப் பரிமாற...

சீமாச்சு ஒரு கிண்ணம் நிறைய மோர் சோற்றைப் பிசைந்து எடுத்து வந்து தனது குழந்தைகளைச் சுற்றிவர உட்கார வைத்துக் கொண்டு, சோற்றுப் பருக்கைகளை எண்ணி எண்ணி அவர்களின் கையில் வைத்தபடி என்னவோ பழங் கதையை ஆரம்பிக்க...

கையில் வைத்த சோற்றை விழுங்காமல் தட்டு நிறையக் குழம்பும், பொரியலுமாய், தின்ன முடியாமல் தின்னும் அண்ணனை ஒருவித பயத்துடன் வெறித்துப் பார்க்கிருர்கள் குழந்தைகள்.

'தாங்கள் எதைத் தின்றாலும் பங்கு கேட்காமல் தான்பாட்டுக்குத் திண்ணையில் சாய்ந்திருக்கும் இவன் இன்று மட்டும் ஏன், இப்படி வாரி வளைத்துத் தின்கிருன்...'

குழந்தைகளின் கவனத்தைத் திருப்ப சீமாச்சு செய்து காட்டிய வேடிக்கைகள் கோணஷ்டையான சேஷ்டைகள் எல்லாமே பயனற்றுப் போக...

ரங்கன் மட்டும் தட்டில் மீதமிருந்த கத்தரிக்காய்ப் பொரியலை அள்ளி வாயில் போட்டபடி அப்பாவைப் பார்த்து அகலமாய்ப் புன்னகைக்கிருன்.

அந்தச் சிரிப்பில் — 'அடுத்த வாரம் நான் சினிமாவில் நடித்துப் பார்ப்பவர்களை வயிறு குலுங்கச் சிரிக்கவைப்பேன்' என்கிற தெம்பு.

'இந்த விஷத்தைத் தின்ருவது வற்றிய உடம்பைப் பழைய நிலைக்குக் கொண்டுவந்து விடுவேன்' என்கிற வெறி.

எல்லாவற்றுக்கும் மேலாக 'இந்த உடம்பால் என் குடும்பத்தைக் காப்பாற்ற முடியுமானுல் இருக்கிற மட்டும் சம்பாதித்துத் தந்துவிட வேண்டும் என்கிற தீவிரம்...

தன் காலடியில் தலைஅண்ணுந்துபார்த்தபடி 'ஆ'வென வாயைப் பிளந்து நிற்கும் கடைக்குட்டித் தங்கையின் கன்னத்தில் ஆதரவாய்த் தட்டுகிருன் அவன்.

''என்னம்மா உன்னேட சோத்தையெல்லாம் அண்ணு தின்னுட்டானேன்னு பாக்கறயா... இன்னும் இரண்டு மூணு நாள்லே நானும் அப்பா மாதிரி ஷூட்டிங் போகப் போறேனே! அப்ப என்குண்டு தொப்பையை, பப்பாளிப் பழ மூஞ்சியைப் பார்த்துட்டு டைரக்டர் மாமா சிரிச்சுக்கிட்டே காசு தருவாரே, அப்ப உனக்கு என்ன வேணுமோ அண்ணு வாங்கித் தருவேனே....''


மகனது வார்த்தைகள் அந்த நகைச்சுவை நடிகரைக் கலங்க வைக்க... சுருங்கிப்போன முகம் அழுகையால் அஷ்ட கோணலாக...

அப்பா இதுவரை தங்களுக்குக் காட்டாத புது விதமான முக பாவத்தைக் காண்பிப்பதாலோ இல்லை, ரங்கனின் உப்பிய வயிற்றை நினைத்தோ...

கடைக்குட்டியின் சின்ன உதடுகளில் கீற்ருய்ப் புன்னகை.



இதோ ஒரு கிராமம்:



தஞ்சை மாவட்டம், திருவையாறு தாலுக்கா, பூதலூர் வட்டாரத்தைச் சேர்ந்த எங்கள் விஷ்ணம்பேட்டை கிராமம். காவேரி – கொள்ளிடம் நதிகளுக்கிடையே அமைந்துள்ளது. இரு போகம் விளையும் விவசாயம் முக்கிய தொழில்.

சுமார் 100 மேல் மட்ட வடிமுனைக் குழாய்களின் மூலம் மூன்றும் போகமாகக் கோடையில் எள் சாகுபடி. பூதலூர் வட்டாரத்தில் 43 பஞ்சாயத்துக்கள் உள்ளன. அதில் தென் பகுதி காடாரம்பம். வட பகுதி செழிப் புள்ளவை. அதனால் எங்கள் பகுதி தென் பகுதி வளர்ச்சிக்கு உழைப்பின் மூலம் ஏராளமான வரிகளைக் கொடுத்தும் எங்கள் பகுதி முன்னேறவில்லை. குறிப்பாக ஊராட்சி மன்றத்துக்குப் போட்டியாகத் தமிழக அரசு ''மக்கள் கமிட்டி'' என்ற அமைப்பைத் திணித்ததால் எங்கள் பஞ்சாயத்து கடுமையாக ஆட்சேபித்ததின் விளைவாக நியாயமாக எங்கள் கிராமத்துக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் புறக்கணிக்கப்பட்டது.

முன்பு விவசாய மான்யத் திட்டத்தில் கீழ் எங்கள் பஞ்சாயத்தில் 400 தென்னை மரங்கள், 40 ஏக்கர் முந்திரிப் பண்ணை உண்டாக்கி அது நல்ல பலனைக் கொடுத்து



* 1 பூதலூர் பஞ்சாயத்து ஒன்றிய பராமரிப்பில் உள்ள 6 கிலோமீட்டர் தூரமுள்ள விஷ்ணம்பேட்டை கப்பி ரஸ்தாவின் அவல நிலை.

* 2 நவீன சீரமைப்பு கால்வாய் திட்டம் என்ற பெயரில் அரசின் நிதி பல கோடி கணக்கில் வீணடிக்கப்படுகிறது. சிமெண்ட் கலவையின் தரம் முறையானபடி இல்லாத காரணத்தால் சிமெண்ட் பலகைகள் ஆங்காங்கே உடைந்து சிதறிக் கிடப்பதைப் பார்க்கலாம்.

* 3 படத்தில் காணப்படும் சாலை, பவனமங்கலம் - விஷ்ணம் பேட்டை, அலமேலுபுரம், பூண்டி இணைப்புச்சாலையாகும். சில காலம் முன்பு கனமழையினால் இந்த இணைப்புச்சாலையின் இருபுறமும் மண் அரிக்கப்பட்டுப் போக்குவரத்து அறவே துண்டிக்கப்பட்டது.

சாதனை – சோதனை – வேதனை!

வருகிறது. ஆனால் பஞ்சாயத்து கலைக்கத் பட்டவுடன் உணவுக்கு வேலை என்ற திட்டத்தின் கீழ் 300 தென்னங் கன்றுகள் மீண்டும் பயிரிடப்பட்டது. அதற்கு வேலி அடைப்பு, தண்ணீர் ஊற்றுதல், காவல் போன்ற பராமரிப்பில் சுமார் 30 மூட்டை அரிசியும், ரூ. 2000 வரை பணமும் செலவிடப்பட்டதுதான் மிச்சம். பேருக்கு ஒரு தென்னங் கன்று கூட இல்லை.

பாசன வடிகால் வாய்க்கால்கள் நீண்ட நாட்களாக வெட்டப்படவில்லை. வாய்க்கால்களில் புறம்போக்கில் ஏராளமான ஆக்கிரமணங்கள் உள்ளன. அவற்றை அப்புறப்படுத்தவே இல்லை. அதனால் விவசாயம் பெருமளவு பாதிக்கப்பட்டது என்பது கண்கூடான உண்மை. கட்சிக் கண்ணோட்டம் பாராமல் ஒட்டு மொத்தமாகக்கிராமம் முழுவதும் ரீ-சர்வே செய்து (செட்டில்மெண்ட்) புறம்போக்குகளை அப்புறப்படுத்த வேண்டும்.

விவசாயிகளின் செல்வம் கால்நடைதான். இப்பகுதியில் எங்களுக்கு மிகவும் வசதியாக ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் திருக்காட்டுப் பள்ளியில் அரசினர் கால்நடை மருந்தகம் இருக்கிறது. முன்பு அடிக்கடி கிராமங்களில் கால்நடை பராமரிப்புத் துறையினர் முகாம் செய்து கால்நடைகளுக்குத் தடுப்பூசி போட்டார்கள். ஆனால் இன்றோ நிலைமைகள் மாறிவிட்டன. இங்குள்ள கால்நடை இன அபிவிருத்தி நிலையம் திருவையாற்றிற்கு மாற்றப்படும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பகுதி மக்களின் கடும் ஆட்சேபணையை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.


இங்கு தனியார் ஆரம்பப் பள்ளி ஒன்று உள்ளது. அதனைத் தவிர அரசினரின் குழந்தைகள் காப்பகம் ஒன்றுள்ளது. குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கப்படுகிறது. வருகை பதிவேட்டில் 60 என்றாலும் வருகை உண்மையில் மிகக் குறைவு. ஆனால் மதிய உணவு சமயம் கூட்டம் கூடும். பிறகு கலைந்துவிடும்.

எங்கள் கிராமச் சாலைகள் இன்னும் சீராக்கப்படவில்லை. சாலைகளின் அவல நிலையைப் பற்றி அதிகாரிகளின் கவனத்துக்கும் பத்திரிகைகளில் ''ஆசிரியர்க்குக் கடிதம்'' என்ற பகுதியில் எங்கள் கோரிக்கைகளை எழுப்பியும் எந்தப் பலனும் இல்லை.

அதே. போலத் தெரு விளக்குகள் எரிவதும் இல்லை. இதை யெல்லாம் யாரிடம் போய்ச் சொல்வது என்று தெரியவில்லை.

தஞ்சை—திருச்சி மாவட்டத்தை இணைக்கக் கொள்ளிடத்தில் எங்கள் பகுதியில் ஒரு பாலம் கட்டினால் நிச்சயம் ஒரு பிரகாசமான எதிர்காலம் இப்பகுதிவிவசாயிகளுக்குஉண்டு. எங்கள் கிராமத்திற்கு மேற்கே, கொள்ளிடம் ஆற்றின் வலது கரையில் நீண்ட நாளாக ஒரு தூங்கு மூஞ்சி மரம் உள்ளது. அது வடகிழக்குப் பருவமழை சமயம் புயலின் போது சாய்ந்து, அதனால் திருவையாறு வரையில் 15கிராமங்கள் வெள்ளத்தில் சிக்குண்டு பாழாகி விடும் என்ற அச்சம் காரணமாக அதனை வெட்டி அப்புறப் படுத்திக்கொள்ளிடக்கரையிலும் நிரந்தரமாக ஒரு நல்ல தடுப்புச் சுவர் கட்டித் தரப்பட வேண்டும் என்று மகஜர் கொடுக்கப் பட்டது. ஆனால் அரசோ உயிருள்ள மரத்தை வெட்டக் கூடாது என்று காரணம் கூறுகிறது. இன்று இந்த மரத்தின் உண்மையான மதிப்பு ரூ. 500 பெறலாம். புயலில் அது வேரோடு சாய்ந்து கரை உடைக்கப்பட்டுச் சேதமேற்பட்டால் பல கோடிக் கணக்கில் சேதமேற்படும் என்ற விவரம் அதிகாரிகளின் கண்ணுக்குப் புலப்படவில்லை. காரணம் கரை உடைப்பெடுத்து வெள்ளப் பெருக்கென்றால், ''வெந்த வீட்டில் பிடுங்கியது ஆதாயம்'' என்பது போல் வெள்ள உடைப்பு சீர்செய்தல், வெள்ள நிவாரணப் பணி, கஞ்சித் தொட்டி, அது இது என்று சுரண்ட வாய்ப்பு இருக்குமே சிவப்பு நாடா முறை இன்னமும் நடைமுறையில் இருந்து வருவதைத் தவிர்க்க வேண்டும். மனுநீதி நாள் என்று பிரதி திங்கள் கிழமை தோறும் மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் ஒரு சடங்கு நடைபெற்று வருகிறது. அது ஒரு கேலிக் கூத்தாகும். பலனோ ஒன்றும் இல்லை. பொதுமக்களுக்குத் தண்டச் செலவு. விரைவில் ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும். அப்போதுதான்ஜனநாயகம் மலர வாய்ப்பு உண்டு. **-எஸ். வேணுகோபால்**

சைதாப்பேட்டையில் கண்ட காட்சி. '51 இ' பல்லவனின் திடீரென நுழைந்த செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் பஸ்ஸிலிருந்து இறங்குபவர்களிடம் டிக்கட்டை காட்டும்படி கேட்க,ஒருவர் அதைக் கவனிக்காமல்செல்ல இன்ஸ்பெக்டர்கள் அவரை அழைத்தார். ஆனால் அவரே திரும்பிப் பார்க்காமல் சென்று கொண்டிருக்க ஓடிச்சென்று அவரின் சட்டையைப்பிடித்து இழுத்து நிறுத்திய இன்ஸ்பெக்டர் கண்கலங்கினார். காரணம் பிடிபட்டவர் ஓர் ஊமை. டிக்கட் எடுத்திருந்தும் காது கேளாததால் அவர் சென்றிருக்கிறார் என்பது எல்லோருக்கும் பிறகுதான் புரிந்தது. —பெம்ஜி



வீட்டில் அனைவரின் கேசப் பராமரிப்புதானே? அதற்கு நம்பகமானது, விசேட ஃபேமிலி ஷாம்பூ பாமோலிவ்.



பாமோலிவ் ஷாம்பூ:
ரெகுலர், அல்லது
கூடுதலான
போஷாக்கிற்கு எக்



பாமோலிவ். எல்லா வகைக் கேசத்திற்கும் ஏற்ப விசேட முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது. வளமையான நவீன ஷாம்பூ. உங்கள் கேசத்தை நன்கு தூய்மை துலங்க வைக்கிறது. குழந்தைகளின் மென்மையான கேசத்திற்கோ மிகவும் ஏற்றது.

அது மட்டுமா? இவ்வகை ஷாம்பூக்களிலே சிக்கனமானது. பாமோலிவ் ஷாம்பூ—குடும்ப பட்ஜெட்டிற்கும் ஏற்றது.

குடும்பத்தினர் கேசப் பராமரிப்புக்கு நேசமானது-உங்கள் பட்ஜெட்டிற்கும் ஏற்றது

GK&E PS.7 TM

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்®
ஒன்றில்தான்
அவர்களுக்கு
அன்றும் தேவைப்படும்
23 ஊட்டச் சத்துக்கள்
அடங்கியுள்ளன.

வளரும் குழந்தை-
களுக்கென்றே
சிறப்பான சில
தேவைகள்
உள்ளன—வளரும்
வயதிலே உடம்புக்குத்
தேவைப்படும்
மிகச் சிறந்த புரதம்,
22 மூலாதார
ஊட்டச் சத்துக்கள்
—அளிக்கிறது
காம்ப்ளான். மறவாதீர்கள்,
டாக்டர்களின் சிபாரிசு
பெற்ற, திட்டமிட்ட உணவு
காம்ப்ளான்.

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப் புத்தகம்.

"குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி"
50 பைசா தபால்தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக:
தபால் பை நம்பர் 19118, (Comp) G-78, பம்பாய் 400 025.

லிண்டாஸ்-GLC-6-2012 TH

திட்டமிட்ட பரிபூரண உணவு — காம்ப்ளான்®

சிம்லா ஸ்பெஷல்

பாபு–கோபு அமெச்சூர் நாடகம் நடத்தும் நெருங்கிய நண்பர்கள். பாபுவின் தங்கைக்கு மணம் முடிக்கப் பெரிய தொகை தேவைப்படுகிறது. நெருக்கடியான நேரத்தில் 'சிம்லா'வில் நாடகம் நடத்த அழைப்பு வருகிறது. அதில் நிறைய வருமானம். கல்யாணத்தை முடித்துவிடலாம் என்று திட்டமிட்டுப் புறப்படுகிறார்கள்.

சிம்லாவுக்குப் போன பிறகு கதை திசை திரும்பி விடுகிறது. கோபுவின் அம்மாவுக்கு உடல் நலம் சரியில்லை என வந்த அவசரத் தந்தியைப் பாபு அவனிடம் கொடுக்காமல் மறைத்து விடுகிறான். இது கோபுவுக்குத் தெரிந்துபோய் நாடகம் நடக்க நடக்க கிரீன் ரூமில் பாபுவை அடிக்கிறான். போதாத குறைக்கு அந்தப் 'படுதா'வும் அவனது மண்டையைப் பதம் பார்த்து விடுகிறது.

நல்ல வேளையாக நாடகத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பியதும் கோபுவின் அம்மா பிழைத்துக் கொள்கிறாள். பாபுவின் தங்கைக்குத் திருமணம் நடக்கிறது.

அச்சுப் பிச்சுக் கதை. (எழுதியவர் இன்னொரு 'க') அதைச் சிரிக்க வைத்துச் சொல்ல ஆசைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நினைத்ததில் தவறில்லை. நாம் சிரித்தால் தான் தவறு.

பாபுவாக வரும் எஸ். வி. சேகரும் கோபுவாக வரும் கமலஹாசனும் பிஃப்டி பிஃப்டி. கமல் தன்னுடைய பொன்னான கால்ஷீட்களை வீணடித்து விட்டாரே!'

சேகருக்கு இந்தப் படம் ஸ்பெஷல்தான். சந்தேகமில்லை. அலட்டிக் கொள்ளாமல் நடித்திருக்கிறார்.

கதை சொல்வதாகச் சொல்லிக் கழுத்தறுக்கும் ஸ்ரீப்ரியாவிடம் வெறும் பகட்டைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை.

சேகரின் தங்கையாக சாந்தி கிருஷ்ணா. நடிப்புக்கும் சரி, கிகிகிக்களுக்கும் சரி நோ சான்ஸ்.

சிம்லாவையாவது ஒழுங்காகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்களா? அதுவும் இல்லை. வெறும் வெள்ளை வெளேர் பனியைத் தவிர வேறொன்றும் இல்லை. (கர்ணன் சார்! இந்திப் படங்களைப் பார்க்கிற வழக்கம் இல்லையோ?)

படத்தின் ஸ்பெஷல்—

மனோரமா, மகேந்திரன், மூர்த்தி, காத்தாடி ராமமூர்த்தி, வனிதா, குண்டு கல்யாணம், உசிலை மணி, ஊாஸ் மோகன், டைப்பிஸ்ட் கோபு, ஜி. கே.' இத்தனை பேரும் அடித்திருக்கும் கொட்டம்தான் நாடகக் கொட்டம்!



துவாரகேஷின் எதிரும் புதிரும்

● கன்னட நடிகர் துவாரகேஷ் எடுத்த படத்தைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கும் தயாரிப்பாளர் சொன்ன செய்தி இது.

துவாரகேஷ் எந்தப் படத்தை எடுத்தாலும் எதிரும் புதிருமான அர்த்தமுள்ள வார்த்தைகளைத்தான் தலைப்பாக வைப்பாராம்.

உதாரணம்: பெத்தா-கெத்தா
கிட்டு - குட்டு
கன்னா - குன்னா
குரு - சிஷ்யா

மூன்று நிமிடப் புதிர்

இங்கே உள்ள 20 கட்டங்களில் பதினொரு நடிகைகளின் பெயர்கள் சிதறிக் கிடக்கின்றன. ஒரே எழுத்தைத் திரும்பத் திரும்பப் படிப்பதன் மூலம் பதினொரு நடிகைகளையும் கண்டு பிடிக்கலாம்.

எங்கே, யார் யார் ஒளிந்திருக்கிறார்கள் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

ரா	வ	ஸ்	ல	க
சு	ஜெ	ஜா	சு	ப்
பி	ம	தா	ர	சா
மி	ய	ரி	னி	வி

விடை:

1. ராதா 2. வனிதா 3. ஸ்மிதா 4. ஜெயசுதா 5. லதா 6. சரிதா 7. ஜெயப்பிரதா 8. சுஜாதா 9. சுமலதா 10 சாரதா 11. கவிதா.




கதறல்! கதறல்!

● மனோரமாவை யானை அலாக்காகத் தூக்கும் இக்காட்சி இடம்பெற்ற படம் இதுவரை வெளிவரவில்லை. (பாவம் மனோரமா! படம் வெளிவரும்வரை இப்படியேதான் தொங்க வேண்டுமா?)

நிஜமாகவே யானை மனோரமாவை இப்படி தூக்கினால் அவர் என்ன சொல்லிக் கத்துவார்? நகைச்சுவையான 'கதறலை' நாலே வரியில் தபால் கார்டில் மட்டுமே எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் நகைச் சுவைக் கதறல்களுக்குப் பரிசு உண்டு.

முடிவு தேதி: 20-5-82.

''கதறல்! கதறல்!'' என்று தலைப்புக் கொடுக்கவும்.



அரட்டை!

"அண்ணே! 'அலைகள் ஓய்வதில்லை' வெள்ளி விழாவுக்குப் போயிருந்தீங்களா?"

"போகாமல் இருப்பேனா? ரொம்ப நாளைக்கப்புறம் ஒரு சினிமா வெற்றி விழாவுக்கு முதல்வர் எம். ஜி. ஆர். வந்திருந்தார். அது மட்டுமா? பாரதி ராஜாவை ஓகோ... ஓகோ... ஓகோன்னு புகழ்ந்து பேசினாரு."

"அது என்ன அண்ணே மூணு ஓகோ?"

"ஒரு 'ஓகோ' படத்துக்கு. இன்னொரு 'ஓகோ' படத்திலே நடிச்ச நடிகர் நடிகைகளுக்கு. மூணாவது ஓகோ பாரதி ராஜாவுக்கு...."

"ஓகோ அப்படியா? ரொம்ப கரெக்டாப் புகழ்ந்திருப்பாரே?"

"அதுதான் இல்லே. கொஞ்சம் அளவுக்கு மீறியே புகழ்ந்துட்டாரு... அப்படீன்னு நான் சொல்லலே. விழாவுக்கு வந்திருந்தவங்க பேசிக்கிறாங்க. சுமார் ஒண்ணேகால் மணி நேரம் பாராட்டியிருக்காருன்னு பாருங்களேன்!"



"அப்ப வெற்றியெல்லாம் தடபுடலோ?"

"தடபுடல்தான். வெள்ளை டிரஸ்லே குழந்தைகள் வரிசையா நின்னு முதலமைச்சருக்கு பூ தூவி வரவேத்தாங்கோ. முதல்வர் பேசறச்சே, 'கங்கை அமரன் ஒரு பாட்டிலே அந்தக் கிழங்கை எங்கிருந்து தேடிப் பிடிச்சாரோ....' அப்படீன்னு சொல்றதுக்குள்ளே ஜனங்க சிரிச்சுட்டாங்க. ஆனா ஒண்ணு சொன்னாரு. 'அப்படி ஒண்ணும் அந்தப் பாட்டுவிரசமா இல்லே'ன்னுசொல்லிட்டாரு."

"நம்ப சேம்பர் ராமானுஜம், சித்ரமகாக் கிருஷ்ணமூர்த்தி, வி. சீனிவாசன் இவங்களெல்லாம் எதேதோ கோரிக்கைகளை முதலமைச்சர் கிட்டே சொல்லி சொல்லியிருப்பாங்களோ?"

"பின்னே என்னங்க கிடைச்ச சான்ஸை விடுவாங்களா? சினிமாவை மத்தத் தொழில் மாதிரி சட்ட ரீதியான தொழிலாக்கணும்னு சீனிவாசன் சாரு சொன்னாரு.

"அதுக்கு முதல்வர் 'நீங்க செலுத்தற வரிக்குப் பெயரே தமாஷா வரி. தமாஷா வரி செலுத்தறவரை அதை எப்படி சட்ட ரீதியான தொழிலா மாத்த முடியும்? முதல்லே அந்த வரிக்குப் பெயரை மாத்தித் தொழில் வரின்னு வைக்க முயற்சி செய்யுங்கோ. அப்புறம் பார்க்கலாம்'னு சொன்னாரு."

"கரெக்டான பதில். ம்... பரிசு வாங்கினவங்க எல்லாம் வாத்தியார் காலைத் தொட்டுக் கும்பிட்டிருப்பாங்களே... பாரதி ராஜா அறிமுகப்படுத்தின ஆர்ட்டிஸ்ட் எல்லாரும் வந்திருந்தாங்களா?"

"'நிழல்கள்' சுவிதா (சுபத்ரா) மட்டும் வந்தாங்க. வேற யாரும் காணோம்."

"அழகுதான். பாரதி ராஜா என்ன பதில் சொன்னாரு?"

"அவர் மேடை ஏறி நல்லாப் பேசக் கத்துண்டிருக்காரு. உணர்ச்சிகரமா பிரமாதமாப் பேசினாரு. 'அந்தக் காலத்திலே எம். ஜி. ஆர். அரசியல் மீட்டிங்கிலே பேச வரச்சே அவரோட சில்க்சட்டைக் காத்து என் மேலே படாதான்னு ஏங்கியிருக்கேன். இன்னிக்கு அவரே என்னை இப்படிப் பாராட்டிப் பேசிட்டாருன்னு நெனைக்கிறப்போ பூர்வ ஜன்ம பலன் தான்னு நெனைக்கத் தோணுது. எனக்கு தேசிய விருது கிடைச்சாக் கூட இத்தனை சந்தோஷப்பட்டிருக்க மாட்டேன்'னு பேசினாரு."

"பலே பலே கெட்டிக்காரர்தான்."

"இன்னொரு சமாச்சாரமும் சொல்றேன். முதலமைச்சர் இந்தப் படத்தை இரண்டு தடவை பார்த்தாராம். அது மட்டுமில்லே. அனைத்திந்திய அண்ணா தி. மு. க. சார்பாக இந்தப் படத்துக்குப் பாராட்டு விழா ஒண்ணு நடத்தப் போறாங்களாம்."

"அப்படியா? அப்ப அதே மாதிரி தி. மு. க. காரங்க தண்ணீர்... தண்ணீர் படத்துக்கு ஒரு பாராட்டு விழா நடத்துவாங்களோ?"

● தயிர்வடை. தேசிகன் பயில்வான் மாதிரி முண்டு பனியன் போட்டுக் கொண்டு தன் மகளாக நடிக்கவிருக்கும் 'குண்டு வனஜா'விடம் பேசிக் கொண்டிருந்தார்.


தயிர்வடை இன்றைக்கும் கட்டை பிரம்மச்சாரி. (வயது 50)

குண்டு வனஜா தன்னைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். "மூன்றாம் பிறையில் மகேந்திரன் கொஞ்சம் குலாபி நான்தான் சார்" என்றார். இன்னமும் அவர் நடித்த படங்களின் பெயர் ஒப்புவித்தார்.

"பொம்பளை பகோடா காதர் என்று யாராவது உங்களை அழைக்கிறார்களா?" என்றேன்.

"இல்லே... என் உருவம்தான் என்னுடைய சாதனை. 15 வயதிலிருந்து நடிக்கிறேன். இப்போ 27 வயசு ஆகுது. கணவர் இறந்துட்டாரு. ஒன்று இரண்டு சீனுக்குத்தான் நடிக்கக் கூப்பிடுறாங்கோ" என்று குறைப்பட்டுக் கொண்டார்.

ராக்காயி டிவி பாக்கிறாள்!



கவுண்ட் டௌன்

5

4

3

2

1

0

ஷ்ஷ்ஷ்... இந்திய இன்சாட் 1-ஏ செயற்கைக் கோளை அமெரிக்காவின் டெல்டா 3910 ஏவுகணை விண்ணளவு உயரே கொண்டு செல்கிறது. இடம் அமெரிக்காவின் கேப் கென்னடி. உயரே போவது இன்சாட் மட்டுமல்ல. இந்தியாவின் விண்வெளி சகாப்தமும், இந்திய அமெரிக்க உறவும், இந்திய விஞ்ஞானிகளின் கடும் உழைப்பும் வானளாவ உயர்ந்துள்ளது.

டெலிவிஷனில் பெரு முன்னேற்றங்களைச் செய்யப் போவதற்கு முன்னோடியாகவோ, என்னவோ, தன் திட்டமிட்ட பயணத்தை ரத்து செய்து இரண்டு முறை தடங்கலுக்கு வருந்திய பின் 10.4.82, 12.17 மணிக்குத் தன் சரித்திரப் பயணத்தைத் துவங்கி ஒரு நிமிடத்துக்கெல்லாம் வானம் கனத்த மழையைப் பூமாரி போலப் பொழிந்தது நல்ல சகுனம்தான்.

இன்சாட் 1-ஏ இந்திய தேசிய செயற்கைக் கோள், இதன் வகையில் முதலாவது. நாட்டின் தொலை பேசித் தொடர்பு வசதியைப் பெருக்கவும் வானிலை மாறுபாடுகளை முன் கூட்டியே மொழியவும் டீ. வி. ரேடியோ ஒலி, ஒளி பரப்புப் பகுதியினை அதிகரிக்கவும் இது பெருமளவு உதவப் போகிறது.

Indian National Satellite System என்பதன் சுருக்கமே INSAT-IA. இதைப் போன்ற இன்னொரு செயற்கைக் கோள் இன்சாட் 1-பி ஜூலை 1983ல் பறக்க விடப்படும். ஒன்று உபரியாக இருக்கும். ஒவ்வொன்றின் ஆயுளும் 7 ஆண்டுகள்.

கர்நாடகாவின் ஹாசன் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மாஸ்டர் கண்ட்ரோல் ஃபெசிலிடி (M C F) விண்ணில் மிதக்கும் இன்சாட்டை இயக்கும். தற்போது இன்சாட் இதன் கட்டுப்பாட்டில் இயங்க ஆரம்பித்து விட்டது.

இன்சாட் 1-ஏவில் மடங்கிய நிலையில் இருந்த ஓர் ஆண்டெனாவை இங்கிருந்தபடியே நிமிர்த்துவதில் ஏற்பட்ட பெரும் பிரச்னை தீர்க்கப்பட்டது. இந்த மாஸ்டர் கண்ட்ரோல் தரை நிலையத்தில் முழுதும் சுழலக் கூடிய 14 மீ. விட்டம் கொண்ட ISRO தயா

விஞ்ஞானப் பக்கங்கள்

ரித்த இரண்டு பெரிய ஆன்டெனாக்கள் உள்ளன. மற்றும் இதன் அனைத்து எலக்ட்ரானிக்ஸ் கருவிகளும், அமைப்புக்களும் இந்தியாவில் உள்ள பெரும் நிறுவனங்களினாலேயே முழுதும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் தேவைகளுக்கேற்ப இன்சாட்டை வடிவமைத்தவர்கள் ஃபோர்ட் விண்வெளி தொடர்பு நிறுவனம். இவர்கள் புகழ் பெற்ற 'சூரியர்' முதற்கொண்டு 75க்கும் மேற்பட்ட செயற்கைக் கோள்களை உருவாக்கிய அனுபவம் உடையவர்களானதால் இன்சாட் 1-ஏ தடங்கலின்றிப் பயன் தரும் என்று நம்பிக்கை கொள்ளலாம்.

இன்சாட் பூமியின் வேகத்திலேயே சுற்றுவதால் பூமியைப் பொறுத்தவரை அது நிலைபெற்று நிற்பது போலவே தோன்றும். டெல்லிக்குச் சற்று கிழக்கே இன்சாட் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும்.

சேலம் மாவட்டம் புதுச்சத்திரம் பிர்க்கா கோவிந்தம்பாளையத்தைச் சேர்ந்த பெரியண்ணன் 2500 கி. மீ.க்கு அப்பால் 'தட்டிக் கொடுத்திருக்கும்' தன் பெண்ணுடன் அங்கிருந்தவாறே பேச வாய்ப்புள்ளது. 8000 நீண்ட தூர தொலை பேசி இணைப்புக்கள் உருவாக்கலாம். இணைப்புக்கள் விண்ணோடும் முகிலோடும் மின்னலைகளாகப் போவதால் நம்பகமான மேம்பட்ட தொடர்பு கிட்டும். இயற்கைச் சங்கதிகளால் தடங்கல்கள் மிகவும் குறையும்.

கிரிக்கெட் மேட்சுகளும், தலைநகர சுதந்திர தின நிகழ்ச்சிகளும் நகரத்தவர்க்கு மட்டும் சொந்தமில்லை. டி. வி.யைக் கனவிலும் நினைத்திராத தெலுங்கு தேசத்தின் கர்னூல் மாவட்டக் கிராமங்களும் குஜராத்தின் ராஜ்கோட் மாவட்டக் கிராமங்களும் கூட இனி கிரிக்கெட் ஆட்டத்தை டி. வி.யில் பார்க்க வாய்ப்புள்ளது. 8000 நேரடி டி. விகளும், 7000 விசேஷ VHF டி. வி.களும் இன்சாட்டுடன் இணைக்கப்படும். மற்றும் பீஹார், ஒரிஸ்ஸா, உத்தரப் பிரதேசத்தின் பிற்பட்ட கிராமங்களின் கல்வி சமூக மேம்பாடு விரிவடையும்.

5 சேனல்களைக் கொண்ட புதிய எஸ் பேண்ட் ரேடியோ ஒலிபரப்பு துவங்கும்.. டெல்லி, கல்கத்தா, பாம்பே, மெட்ராஸ் ஆகியவை இன்சாட்டுடன் இணைக்கப்பட்டுத் தொலை தூர ரேடியோ ஒலிபரப்பு நடைமுறைக்கு வரும்.

புயல் அரக்கனும் வெள்ள பூதமும் இனி நாம் ஏமாந்த சமயம் வந்து நாசம் செய்து விளையாட முடியாது. புயலோ, வெள்ளமோ வருவதை முன்கூட்டியே இன்சாட் மூலம் அறிந்து சேதத்தை முழுவதும் முடியாவிட்டாலும், இயன்றவரை தடுக்கலாம்.

செயற்கைக் கோளை விண்ணில் பறக்கவிடவும் தரைக் கட்டுப்பாடு நிலையத்திற்கும் ஆன செலவு 113 கோடி. தொலைபேசித் தொடர்பு தரை நிலையங்கள் வகையில் செலவு 63 கோடி. வானிலை—தரை நிலையங்களுக்காக 12 கோடி ரூபாய் ரேடியோ இணைப்பு நிலையங்களுக்காக 3 கோடியும் டி. வி. நிலையங்களுக்காக 70 கோடியும் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று, ''அவனவன் சந்திரனுக்குப் போறான். நாம் சந்திரனைக் காதலியின் முகத்துக்கு ஒப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்'' என்று ஏகத்தாளமாகப் பேசின நம்மூர்த் திண்ணை ஆசாமியே இன்று ''இவ்வளவு கோடிகளை விழுங்கிவிட்டுப் பறக்காதது தான் குறை. இந்தக் கோடிகளைக் கிராமங்களுக்கு விஸ்தாரப் பணிகளுக்குப் பயன்படுத்தலாமே'' என்று அங்கலாய்க்கிறார்.

பல விஷயங்களில் நம் நாடு பிற்பட்டிருந்தாலும் இன்சாட் போன்ற ஒரு சில சங்கதிகளால்தான் உலக அரங்கில் நம்மை அடையாளம் காட்டிக் கொள்ள வழி ஏற்படுகிறது. மேலும் இந்தக் கோடிகள் கிராமப்புற நலன்களை மனத்தில் கொண்டே செலவிடப்பட்டுள்ளன. காந்தியடிகள் எதிர்கால இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில் என்றார். எதிர்காலம் நிகழ் காலமாகி வருகிறது. உயிரைக் கண்டு கொண்டோம். உயரக் காத்திருப்போம்.

—நளினிசாஸ்திரி

இந்த இதழில்..



இதயம் — மைத்ரேயி

கல்கண்டு — பாலகுமாரன்

விகடன் — அனுராதா ரமணன்

கல்கி — மாலன்

அடுத்த இதழில்...

சாவி — ஆர். சேகர்

தாய் — சிவசங்கரி

குங்குமம் — பானுமதி ராஜாராம்

கதிர் — டி.எஸ். அனந்தராமன்

குமுதம் — சுப்பிரமணிய ராஜு

ஸ்ரீராம் டிரஸ்ட் அளிக்கும் மாபெரும் வாய்ப்பு!

ஸ்ரீராம் டிரஸ்ட்-
அமுதசுரபி
வெளியீட்டாளர்கள்-
அளிக்கும்
அரிய சலுகை:

ரூ. 1,000
டெபாஸிட் செய்தால்
7 ஆண்டுகளில்
ரூ. 2,000 ஆக
திருப்பி அளிக்கிறோம்!

அத்துடன் அமுதசுரபி
வழங்கும் போனஸ்:



போனஸ் 1 : பிரபல ஓவியர் 'சில்பி' வரைந்துள்ள தென்னகத் திருக்கோயில் தெய்வங்களின் வண்ணச் சித்திரங்கள்—6* பதிவுத் தபாலில் அனுப்பப்படும்.

போனஸ் 2 : 84 மாதங்களுக்குத் தொடர்ந்து அமுதசுரபி மாத இதழ் அன்பளிப்பாக உங்களை அடையும்.

போனஸ் 3 : 7 ஆண்டுகளுக்கு அமுதசுரபி தீபாவளி மலர் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.

நீங்கள் செய்ய வேண்டியது: ரூ. 1,000 அல்லது அதன் மடங்குகளில் டெபாஸிட் செய்யலாம். ஒவ்வொரு ரூ. 1,000-க்கும் இந்த போனஸ் சலுகைகள் உண்டு.

* 1. ஸ்ரீ குருவாயூரப்பன் 2. திருப்பரங்குன்றம் ஸ்ரீமுருகன் 3. பத்ராசலம் ஸ்ரீராமர் 4. தஞ்சை ஸ்ரீ பங்காரு காமாட்சி 5. சங்கரன் கோவில் ஸ்ரீ கோமதி அம்மன் 6. திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மன்.

உங்கள் டெபாஸிட்டை
அனுப்ப வேண்டிய முகவரி:
ஸ்ரீராம் டிரஸ்ட்
123, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை 600 001.

இச்சலுகை 1982, டிசம்பர் 31 வரை மட்டுமே!

ADWAVE/ST AS/3039



திரு நரசிம்மன்

ஐயோ, வேண்டாம் ஈ.எஸ்.ஐ.

ஐம்பது வயது நரசிம்மன் நங்கநல்லூர்க்காரர். 6 பிள்ளைகளும், ஒரு பெண்ணும் கொண்ட பெரிய குடும்பம். இந்த வருடம் ஜனவரியில் பொங்கல் சமயத்தில் அவரது வலது கையில் ஆள் காட்டி விரலில் சிறு கொப்பளம் ஒன்று புறப்பட்டது. ஒரே நாளில் அது பெரிதாகி ரொம்பவும் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தது. வலி தாங்க முடியவில்லை. தூக்கம் கிடையாது. மறுநாள் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு டாக்டரிடம் (எம். பி. பி. எஸ். முடித்து கிளினிக் ஆரம்பித்துச் சில மாதங்களே ஆகின்றனவாம்) காட்டியிருக்கிறார். அவர் ஒரு பிளேடை எடுத்துக் கொப்புளத்தைக் கீறி, துடைத்து, கட்டுப் போட்டு அனுப்பிவிட்டார். அன்றைய தினம் வலியில்லை. நரசிம்மனுக்கு நிம்மதி.

ஆனால் அவரது நிம்மதி நீடிக்கவில்லை. இரவே மறுபடி விரலில் குத்தல் தொடங்கியது. ரத்தமும் வர ஆரம்பித்தது.

சைதாப்பேட்டை ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைக்கு மறு நாள் போயிருக்கிறார். அவர்களும் கட்டுப் போட்டு கே. கே. நகர் ஈ.எஸ். ஐ. மருத்துவ மனைக்குப் போய் எக்ஸ்-ரே எடுத்துக் கொண்டு வரச் சொன்னார்களாம். தொடர்ந்து ரத்தம், சிறுநீர், இத்யாதி டெஸ்டுகள். விரலுக்கோ 'டிரஸ்ஸிங்' மட்டும்தான் இப்படியே இரண்டு வாரம் போய்விட்டது. டெஸ்ட் ரிசல்ட்களில் எந்த விதக் குறைபாடும் கண்டுபிடிக்கப்படவில்லை.

நரசிம்மன் பெரிய டாக்டரிடம், 'சார்! இப்படி ஒரு நாள் விட்டு ஒரு நாள் நங்கநல்லூரிலிருந்து சைதாப்பேட்டைக்கும் கே. கே. நகருக்குமாக அலைவது கஷ்டமாக இருக்கிறது. என்னை ஆஸ்பத்திரியிலேயே அட்மிட் செய்து, சிகிச்சை அளியுங்கள்' என்று சொல்ல, அவர்கள் முதலில் மறுக்க, இவர் வற்புறுத்த, ஒரு வழியாய் ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்தனர்.

அப்போதும் வெறும் டிரஸ்ஸிங்தான் தொடர்ந்தது. டாக்டரைக் கேட்டபோது, ஏதோ டெஸ்ட் டியூபோ ஏதோ ஒன்று இல்லை என்றும், அது வந்ததும்தான் விரலிலிருந்து சீழ் எடுத்து டெஸ்ட் செய்து முடிவு செய்ய வேண்டும் என்றும் கூறினார். அது எப்போது வரும் என்று கேட்டால் சரியான பதில் இல்லை.

''அந்தச் சமயத்தில், என் விரலில் மேல் பாதி சதை அழுகிவிட்டது. அந்த நிலையில் தான் டாக்டர் என்னிடம் 'வேறு வழியில்லை; பாதிக்கப்பட்ட விரலை வெட்டிவிட வேண்டியதுதான்' . என்று சொன்னார். எனக்கோ அதிர்ச்சி. என் பக்கத்திலிருந்த என் மனைவி அழுதே விட்டாள்.

''அன்று மாலை நான் வேலை செய்யும் நிறுவன டைரக்டரிடம், என் கைவிரலை இழக்கப் போவதைக் கூறி அழுதேன். அவர், ''நீ ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரியை மறந்துவிடு. உன்னை ஒரு பிரைவேட் நர்ஸிங் ஹோமில் அட்மிட் செய்து சிகிச்சைக்கு ஏற்பாடு செய்கிறேன்' என்று சொல்லி, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள டாக்டர் சம்பத்தின் கிளினிக்கிற்கு அனுப்பி வைத்தார். டாக்டர் சம்பத்தின் மகன் டாக்டர் விஜயராகவன்தான் எனக்கு சிகிச்சை அளித்தார். அவர், கை மருத்துவ ஸ்பெஷலிஸ்ட். இங்கிலாந்தில் பயிற்சி பெற்றவர். இடது முழங்கைப் பகுதியிலிருந்து சதையை எடுத்து பாதிக்கப்பட்ட வலது ஆள்காட்டி விரலில் வைத்துச் சிகிச்சை அளித்தார். ஒரே வாரத்தில் நல்ல முன்னேற்றம். மடக்க முடியாது, நீட்டிக்கொண்டே இருந்த விரலை இப்போது இரண்டு முட்டுக்களில் நன்றாகவும் மூன்றாவது முட்டில் ஓரளவும் மடக்க முடிகிறது. எப்படியோ என் விரலைக் காப்பாற்றிவிட்டார் டாக்டர் விஜயராகவன்'' என்றார் நன்றிப் பெருக்குடன் நரசிம்மன்.

டாக்டர் விஜயராகவன் சொன்னார்: ''சரியான நேரத்தில் வந்தார் நரசிம்மன். இரண்டு வாரம் கழித்து வந்திருந்தால் விரலைக் காப்பாற்றியிருக்க முடியாது. ஒரு சிறு கொப்புளத்தை அந்த அளவுக்கு விபரீதமாக்கியது வருத்தத்துக்குரியது. இத்தகைய நிகழ்ச்சி மேலை நாடுகளில் நடந்திருந்தால் டாக்டரிடமிருந்தோ, மருத்துவ மனையிலிருந்தோ நஷ்ட ஈடு கோரியிருப்பார்கள். இங்கே நமது மக்கள் டாக்டரின் வாக்கை வேத வாக்காய் எடுத்துக் கொள்கிறார்கள். டாக்டர்கள் மீது நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கையை டாக்டர்கள் மதித்து, மிக ஜாக்கிரதையாய் சிகிச்சை அளிக்க வேண்டும்.''

இந்த விஷயத்தில் யாரைக் குற்றம் சொல்ல?

முதலில் அவசரப்பட்டு பிளேடால் கீறி சிறு விஷயத்தை விபரீதமாக்கிய டாக்டரையா? ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைகளையா?

குற்றம் யார் மேல் இருந்தாலும் பல தொழிலாளர்கள் ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரிகளுக்கு வைத்தியம் செய்து கொள்ளப் போகவே பயப்படுகிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை!

-எஸ். சந்திரமௌலி

இலக்கியத்தில் இறையுணர்வு

தன்னைத்தான் உணர்வது ஆன்மீகக்கல்வி. கல்விக்குப் பொதுவாக அமைந்த இடர்ப்பாடுகள் தன்னைத் தான் உணரும் ஆன்மிகத் திறும் உண்டு.

அடியில் நெருப்பு இருப்பது தெரியாமல் வெளியே வெந்து கிடக்கும் பொருளைச் சில நேரம் காண்கிறோம். அது போலத்தான் ஐம்புலன்கள் அடியினின்றும் நெருப்பை மூட்ட, மனம் அதற்கு மேல் நீறுபூத்த நெருப்பாய்க் கிடக்கிறது. இதுவரை உடலே சிந்தனைக்கு இடமாக இருக்கிறது. எப்படியோ ஒரு கட்டத்தில் உடலை ஓரளவு மறந்து உலகை—உலகப் படைப்பை — இயக்கத்தைச் சிந்திக்கும் அறிவைப் பெறுகிறோமே, அதுதான் ஆன்மச் சிந்தனை. ஒவ்வொருவரையும் ஒரு காலம்வரை உடலையே சிந்திக்க வைத்து, ஒரு கட்டத்தில் ஆன்மாவைச் சிந்திக்குமாறு செய்விக்கிறவள் உமையம்மை. இதனை மாணிக்கவாசகர் "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்ற தொடரால் உணர்த்துகிறார்.

அதிவீரராம பாண்டியர் தனக்கு இந்த ஆன்மச் சிந்தனையை இறைவன் திருவுரு வணக்கம் தந்ததாகப் பாடுகிறார்.


"திருக்கருவை நகரில்வாழும் பெருமானே! பாம்பணிந்த கழுத்தும், ஒப்பனை கொண்ட உமையம்மை வீற்றிருக்கும் இடப்புறமும், தலையணியும், புரிசடையும் சிவந்த வாயும், நீலக் கழுத்தும், அஞ்சேல் என்னும் திருக்கரமும், மழுவும், மானும், மலரடியும் என் முன்னே வெளிப்படுத்தி என்னை ஆண்டாய்!"

"விண்ணவர்க்கு இறைவா! என்னுடைய மாற்றத்துக்குக் காரணம் என்ன என்று எனக்கே விளங்கவில்லை! என் கல் மனத்தையும் கரைத்தாய்! ஒப்பனை கொண்ட உமையவளுடனும், வெள்ளை ரிஷபத்தின் மேலேறி நாராயணனும் அறியாத் திருவுரு காட்டி என்னைப் பூரணன் ஆக்கி வைத்தாய்!"

விஜி: டிராபிக்கில் நிற்கும் பெண் போலீஸ்காரி 'ஸ்டாப்' என்று போர்டை காட்டரு நீபாட்டுக்கு ஸ்கூட்டரை நிறுத்தாமல் போய்க்கொண்டே இருக்கிறாயே ஏன்?

சரோஜா: அவள் என் நாத்தனார். அவள் நிக்கச் சொன்னால் நான் நிற்கவேண்டுமா என்ன?

-லலிதா செல்லப்பா



"விண்ணவர் வணங்கப் போட்டியிடும் விரை மலர்ச் சேவடியை, கண்ணிறையக் காட்டினாய். உன் நின்று அன்பு உருகியது. உலைப்பட்ட மெழுகானேன்; கடவுளே என்று உன்னை அழைக்கும் புண்ணியம் புரிந்தேன்! இனிப் பெறும் பேறு வேறொன்றுமில்லை!"

"உன் திருவடிக் கமலத்தைச் சிக்கெனப் பிடித்தேன். நான் பேசுவது எல்லாம் உன் திருநாமம்; பார்க்கும் பொருளில் எல்லாம் நீயே உருவெளியாகத் தோன்றுகின்றாய்! சிந்தை, நாக்கு, கண் எல்லாம் நீ! மறுவறு சிறப்பின் மாசிலாமணியே! வரதனே! சிவ பெருமானே!"

"இறைவா! எனக்குக் காதல் பிறந்தது உன்னிடம்! பெற்ற அந்த மனநிலை கனிந்தது: அந்தக் களிப்பில் யான், எனது என்னும் உணர்வெல்லாம் இற்றது: முத்தமிழ்க் கருவாகிய உன்னையே எண்ணியிருந்தேன்; உன் நாமம் நாத்தழும்பேற்றியது. நான் பெற்றதை இதற்கு மேல் சொல்ல முடியவில்லை."

"உலகில் உள்ள மலை முகடுகள் அனைத்தினுக்கும் மேலாக நின் திருமுடி. பாதாளம் ஏழினுக்கு அப்புறமும் உன் பாதம்! அடி கடந்த கை திசை கடந்தன. உன்னில் எல்லாம் அடங்கியதை உணர்த்தும் திறன் இதுவே!"

"எளியனும், புன்தொழில் இயற்றும் பாதகனும், களியனும், தீக்குண வஞ்சகனும், நெஞ்சென்னும் கரையாக் கருங்கல் உள்ளத்தனும் இருந்தேன். நின் பொன்னடி என் சென்னியில் பொருத்தினாய்! தூயவன் ஆனேன்!"

"தேவர்கள், மாதவர்கள், முனிவர்கள் இரண்டு இரண்டு தினமும் தொழுதேத்தும் சிலம்புத் திருவடியை அருள்புரிந்தாய்! மைந்தனை அனுப்பிச் சூரனை முடித்தவனே! உன் கருணை பெரிது!"

"இறைவா! எண்ணமே எல்லாமாய் இருப்பதால் எண்ணமே மனம். நான் உன் நினைப்பைத் தருவதால் மனத்தைத் தினமும் வணங்குவேன். தனத்தை நிலையென எண்ணி மயங்க மாட்டேன்: புண்ணியனே! மார்க்கண்டேயனுக்காக மறலியை உதைத்தவனே!"

"உன்னை வணங்க எனக்குத் தலை தந்தாய்! உன் புகழைப் பேச நா தந்தாய்! இணங்கியிருக்க அடியவர் கூட்டமும் காட்டினை! இனி எனக்குப் பெறும் பேறு வேறு உண்டோ?"

ஆன்மச் சிந்தனை இறையை நோக்கி எங்ஙனம் உருக வைக்கும் என்பதை அதிவீரராம பாண்டியர் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியில்பாடியுள்ளார். இந்த நூலுக்கு அமைந்த வேறு பெயர் குட்டித் திருவாசகம்.

வணங்குஎனத் தலையளித்தனை என் புகழ்
வாழ்த்துஎன நாத்தந்தாய்
இணங்கு எனத் திருக்கூட்டமும் காட்டினை
இனிப் பெறும் பேறு உண்டோ?
துணங்கை இட்டு வெம்பேய்க் கணம்
குதித்திடக்
கடலை ஆடு அரங்காகக்
கணங்கள் போற்றநின் றாடிய குழகனே!
கருவைஎம் பெருமானே!

இனிப் பெறும் பேறுண்டோ?

கீரன்





கல்கண்டு

~பாலகுமாரன்~

நேற்றையவிற்பனை மொத்தமும் கூட்டி, அந்த மாதத்திய கணக்கில் சேர்த்து, வந்த தொகையைத் தனியே எழுதி போன வருடம் அதே மாதம் என்ன விற்பனை என்பதைப் புரட்டிப் பார்த்து இரண்டுக்கும் உள்ள தொகை வித்தியாசம் கண்டு பிடித்துப் பேனாவை மூடி சட்டைப் பையில் நழுவ விடுகையில் பேனாவின் அடிப்புறம் சின்ன டக்கென்ற சப்தமாய் பைக்குள் உள்ள பொருள் மீது மோதுவதை உணர முடிந்தது.

ராஜா மறுபடி பேனாவை எடுத்துவிட்டு, சட்டைப் பையில் விரல் விட்டுத் துழாவினான். சின்ன சதுர ஸ்படிகமாய் கல்கண்டுத் துண்டு வெளியே வந்தது. எப்படி. சட்டையிலே கல்கண்டு.... குழந்தை போட்டிருக்குமோ? குழந்தை ரேணுவின் முகம் நினைவுக்குவந்தது. உதட்டைப் பிதுக்கி அழும் உருவம் வேதனைப்படுத்திற்று. இப்பக் குழந்தை எங்கே இருப்பாள்? நேற்று ரொம்ப முரட்டுத்தனமாக நடந்து கொண்டோமோ... குழந்தை. குழந்தையின் . கஷ்டம் நினைவு படுத்திக் கொள்ளாமல் அநுடற்றி கவலையே இல்லாமல் பெரியவர்கள் விஷயம் பெரியவர்கள் கவலையே முக்கியமாகக் கொண்டு அழும் குழந்தையைத் துரத்தி விட்டோமோ...

''உனக்குக் குழந்தை பிறக்காமப் போகாதுடா... உனக்கும் குழந்தை பிறக்கும். ஒண்ணுக்கு மூணு பிறக்கணும். மூலைக்கு ஒண்ணு நின்னு ஊட்டி அடிக்கணும். அப்போ எதைத் துரத்துவே. எங்க துரத்துவே? பெண்டாட்டிக்குச் சிரமமாயிருக்குன்னு அப்பவும் தோணுமா? தோணினாலும் தோணும் உனக்கு. அப்படி தோணித்துனா உன் குழந்தையை எங்கிட்டக் கொண்டு வந்து விடு. நான் பார்த்துக்கறேன். அனுப்பட்டுமான்னு அவ கிட்டப்போய் அட்வைஸ் கேட்காதே. வேண்டாம். நாமே நாலு சாத்துச் சாத்தி வச்சுப்போம்னு சொல்லுவே. பாலாறு தாண்டறப்போ வெயில் சூடு தாங்காம கைக்குழந்தையை மணல்ல போட்டு அது மேலே நின்னாளாம் ஒருத்தி. அந்தப்புத்தி உன் பெண்டாட்டிக்கு. உங்களுக்கு நிறைய நிறையக் குழந்தைகள் பிறக்கணும். நான் பார்க்கணும்.''

வாழ்த்தாய், சாபமாய், வயிற்றெரிச்சலாய் வேதனையாய், விரக்தியாய்ச் சொல்லிவிட்டு அக்கா தன் குழந்தையுடன் படி இறங்கினாள். அம்மாவும் பஸ் ஸ்டாண்ட் வரை கூடப் போவதாய்ச் சொல்லிவிட்டு இறங்கினாள்.

''அவளுக்கு பஸ் ஸ்டாண்ட் வழி தெரியாதா? உங்கம்மா என்னத்துக்குக் கூட? இரண்டு பேரும் தெரு முனையில் நின்னுமாத்திமாத்தி என்னை வைது தீர்க்கணும். வையட்டும். நிறைய பிறக்கணுமாம். இவ பாக்



கணுமாம். இவ்வளமாதிரி விவஸ்தை கெட்ட ஜென்மமா நான்? விட்டாப் போறும்னு கூத்தடிக்கிறவளா. எங்களுக்கு எப்பப் பெத்துக்கணும்னு தெரியும். எப்படி வளர்த்துக்கறதுன்னு தெரியும். எவ தயவும் வேண்டாம். செருப்புக்கு வக்கில்லாதவ குழந்தை பெத்துண்டா மணல்ல போட்டுத்தான் நிக்கணும். மத்தவளைக் குத்தி என்ன பலன்?''

அலமேலு கைப் பம்பை ஓசையெழ அடித்தபடி இரைந்தாள்.

ராஜாவுக்கு யார் பக்கம் பேசுவது என்று தெரியவில்லை. விடிந்து பல் தேய்த்துக் குளித்து ஆபீஸ் கிளம்பற வரையில் கூட இது பற்றி முடிவுக்கு வர முடியவில்லை. வேலைப் பளுவில் மறக்க முடிந்ததே தவிர விவரம் பிடிபடவில்லை. சற்று மறந்தபடி இருந்ததையும் இந்தக் கல்கண்டு துணுக்கு ஊதி விட்டு விட்டது.

ராஜா அந்தக் கல்கண்டுத் துணுக்கை டிராயரைத் திறந்து ஜம் கிளிப் பாக்ஸில் போட்டான். அழுத்தி மூடிவிட்டுச் சாப்பிடக் கிளம்பினான்.

நேற்றைய சண்டைக்குக் கல்கண்டு காரணம். ஒவ்வொரு நாள் சண்டைக்கும் ஏதாவது உப்புச் சப்பில்லாத காரணம். புத்தகம் கிழிந்து விட்டது என்று ஒரு நாள். பெட்டி திறந்து கிடக்கு என்று ஒரு நாள். சொம்பில் மூத்திர நாத்தம் அடிக்கிறது என்று ஒரு நாள். ஏதாவது காரணம். நேற்றுக் காரணம் கல்கண்டு.

மாசம் நூறு கிராம் கல்கண்டு வாங்கி தினத்துக்கு இரண்டு துணுக்கு நைவேத்தியம் செய்வது வழக்கம். அது சின்ன அலுமினிய டப்பாவில் அழுத்தி மூடப்பட்டிருக்கும். நேற்று அந்த டப்பா விளையாடக் கிடைத்து விட்டது குழந்தை ரேணுவுக்கு. அம்மா அதைப் பிடுங்க எத்தனித்திருக்கிறாள். குழந்தை பின்னுக்கு மறைத்துக் கொண்டு அழகு காட்டியிருக்கிறது. அதட்டி இருக்கிறாள். கெட்ட வார்த்தை சொல்லியிருக்கிறது. மடக்கி முதுகில் அறைந்திருக்கிறாள். ஆத்திரத்துடன் டப்பாவைச் சுவரில் எறிந்திருக்கிறது. டப்பா திறந்து கொண்டு வீடு முழுக்கப் பொடிசு பொடிசாய் நூறுகிராம் கல்கண்டும் சிதறியிருக்கிறது. படுக்கையில், பீரோசந்தில், கட்டிலுக்கடியில், கொடியிலிருந்த ரவிக்கைமடிப்பில்... அம்மா கண்ணுக்குத் தெரிந்தவரை தேடித் தேடித் திரட்டியிருக்கிறாள். அறுபது வயதுக் கிழவி வீட்டைப் புரட்டியா சுத்தம் செய்துவிட முடியும்? அங்கங்கே விழுந்த கல்கண்டுத் துணுக்குகளுக்கு ஆயிரம் எறும்புகள். அலமேலு ஆபீஸ் முடிந்து வீட்டுக்கு வந்து ரவிக்கை மாற்றுகையில் அக்குள் முழுதும் பிடுங்கி எடுத்து விட்டன. பாடீஸ் பட்டையும், கலைந்த கூந்தலும் கோபப் பார்வையுமாய் நிற்கும் அலமேலுவைப் பார்க்கும்போது ராஜாவுக்கு பாஞ்சாலிசபதம் ஞாபகம் வந்தது. ''அட துச்சாதனா...'' என்று தன்னைப் பார்த்து இவள் எந்த நிமிஷமும் சொல்லி விடலாம் என்று தோன்றிற்று. அலமேலுவுக்கு ஆபீஸ் வேலை எப்போதுமே அதிகம். வேலை பார்த்துக் கொண்டே மைக்ரோ பயலாஜியில் பி. எச்.டி. செய்கிறவளுக்கு வேலை அதிகமாகத்தான் இருக்கும். கொஞ்சம் கோபம் வரத்தான் வரும். ஆனால் இன்றைக்கு அலமேலு அதிகமாகக் கோபப்பட்டாள்.

''நான் ஏரைக் கட்டிண்டு ஹாஸ்டலுக்குப் போறேன். உங்கக்கா பொண்ணை நீங்களும் உங்கம்மாவுமாச் சீராட்டுங்கோ. ஒரு நாளைப் போல இந்த எழவு தாங்கலை. முதுகைப் பாருங்கோ. நெருப்புத் தீய்ச்சது மாதிரி

எரியறது'' — திரும்பிச் சிவந்த முதுகைக் காண்பித்தான்.

''விளக்கேத்தற சமயத்துல ஏண்டி எழவுங்கறே... பொம்மனாட்டியா லட்சணமா இருக்க மாட்டேங்கிறியே...''

''ஆமா, நான் பொம்மனாட்டி இல்லே. ஆம்பிளை . மீசை ஒண்ணுதான் முளைக்கலே. பகவான் தப்பாய்ப் படைச்சுட்டான். ஆம்பிளையாப் பிறந்திருந்தா எப்பவோ பி.எச்.டி. முடிச்சிருப்பேன். பத்துத் தேய்த்து பம்ப் அடிச்சுச் சோத்துக் கடையை முடிச்சு நான் படிக்க உட்கார்றது மகா பாவம்.''

''ஆமா நீ பத்துத் தேய்ச்சுத்தான் இங்கே மணக்கறதாக்கும். சமையல் உள் முழுக்கக் கரப்பு நடமாடறது. சாக்கடை குத்தி மருந்து போட யாருக்கும் நேரமில்லே. எறும்புக்கு இத்தனை ஆட்டம் யாராவது போடுவாளா? அது ரெண்டுங் கெட்டான். விஷமம் பண்ணுதேன்னு தெரியுமா? உன்னை எறும்பு புடுங்கணும்னு அது கல்கண்டு வீசித்து? நீயும் நாலு குழந்தையோடு வளர்ந்தவதான்.''

அம்மா பேச... அவள் பேச... அரை மணி நேரம் திமிலோகப்பட்டது. ராஜாவுக்கும் அன்று வேலை அதிகம். ஆனாலும் பேசாமல் உட்கார்ந்திருந்தான். இந்த விஷயம் இத்தோடு முடிந்திருக்க வேண்டியதுதான். ஆனால் அக்காவும் ஒரு தவறு செய்தாள்.

''இன்னிக்குக் குழந்தை இங்கேயே இருக்கட்டுமேம்மா. அவர் எங்கேயோ வெளியே போகணும்னார். நானே சாயந்திரமாக் கூட்டிண்டு போறேனே. ரேணுக்குட்டி நீ பாட்டியோடயே இருந்துடறியா? உனக்கு பாட்டிதானே ரொம்பப் பிடிக்கும்?''

ராஜாவின் அக்காவுக்கு அவன் வீட்டுக் கருகிலேயே வேலை, தனியார் பள்ளிக்கூடத்தில் டீச்சர் உத்தியோகம். போன வருடம் தான் வேலைக்குச் சேர்ந்தாள். குழந்தையைப் பார்த்துக் கொள்ள அருகிலேயே அம்மா இருக்கிறாள் என்ற தைரியத்தில் டீச்சரானாள். எப்போதாவது ஒரு முறை ராத்தங்கலாய்க் குழந்தையை விட்டுப் போவாள். பெண்ணின் வசதி, பெண்ணின் சந்தோஷம் குழந்தையைத் தன்னிடம் பொறுப்பாக விட்டு விட்டு புருஷனுடன் குதூகலமாய் தன் பெண் இருக்கப் போகிற வசதி கண்டு அம்மாவும் மறுக்கமாட்டாள். அலமேலு சும்மா—இருந்து விடுவாள். ஆனால் இன்றைக்குப் பார்த்து அக்கா இதைக் கேட்டிருக்க வேண்டாம். குழந்தை பதில் சொல்லு முன் அலமேலு குறுக்கே பாய்ந்தாள்.

''வேண்டாம். அவளை எடுத்துண்டுபோங்க. எங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கு. ரா முழுக்க ரெண்டுங்கெட்டான் குழந்தையை வச்சுக்க முடியாது''

''நான் எங்கம்மா கிட்டப் பேசறேன். நீ ஏன் குறுக்கேபாயறே? உங்கிட்ட நான் வாயைத் திறந்து ஒண்ணும் கேட்டதில்லையே.''

''இது என் வீடு. இனிமே என்கிட்டத் தான் கேட்கணும்.''

''இல்லே. இது எங்கம்மா வீடு. அவ தன் புள்ளையோட இருக்கிற இடம். நான் அவ கிட்டத்தான் கேட்பேன்.''

''இந்தக் குழந்தை இங்க இருக்கக் கூடாது.''

''அதை நீ சொல்ல முடியாது.''

''நான்தான் சொல்வேன். எங்க சௌகர்யத்தை மிஞ்சித்தான் உபகாரம் பண்ண முடியும். நீங்க ஊர் சுத்தறதுக்குக் குழந்தை இடைஞ்சலா இருக்குன்னு எங்கதலைல கட்டிட்டுப் போய்ட்டா நாங்க ஆம்படையான் பொண்டாட்டியா இருக்க வேண்டாமா? ஊர் சுத்த எங்களுக்குத் தெரியாதா? என்னை பொம்மனாட்டியான்னு கேட்டேளே. உங்க பொண்ணு பொம்மனாட்டிதானா? இன்னொரு புருஷன் பொண்டாட்டி அசௌகர்யம் அவளுக்குத் தெரிய வேண்டாமா?''

''இதென்ன கூத்து... என் குழந்தையா உங்களுக்கு நடுவில படுத்துண்டு கை விரிச்சண்டிருக்கா. அநியாயமாப் பேசறியே.''

''நானும் அதைத்தான் கேக்கிறேன். உங்க ரெண்டு பேர் நடுவில குழந்தையா கைவிரிச்சிண்டிருக்கு? இருந்தாலும் பொறுத்துக்க வேண்டியதுதான். நீங்க பெத்த குழந்தை. அதை ஏமாத்திட்டுத் தூங்கறது உங்க சாமர்த்தியம். ரொம்ப கெட்டிக்காரியா அம்மா கிட்டக் கொண்டு வந்து விட்டுட்டா. போனாப் போறதுன்னு நாத்தனார் வயசுக் காரியாச்சேன்னு நானும் இத்தனை நாள் பொறுத்திண்டிருந்தேன். ஊர் சுத்துவேன். இன்னொண்ணு பெத்துக்குவேன். அதைப் பார்த்துக்க அம்மா—வேணும்பேள். இது ஒண்ணு பண்ற அட்டகாசம் போறுதுன்னு என் வீடு கைக்குழந்தை துணியா நாறணுமா?''

''குழந்தை பெத்தவளுக்குத்தான் தெரியும் அதன் அருமை. வருஷம் நாலாச்சு. ஒரு புள்ளைப் பூச்சியக் கூடக் காணோம். நீ ஏன் பேசமாட்டே!''

அவரவர் பலவீனத்தை அவரவர் தொட, சண்டை அதிகமாகி மூன்று பெண்களுமே அழத் தொடங்கினார்கள்.

ராஜா அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தான். பி.எச்.டி.யும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம் என்று ஒரு கணம் யோசித்தான். இந்த அம்மா ஆனாலும் அக்காவுக்கு அதிகமாகத்தான் செல்லம் கொடுக்கிறாள் என்றும் தோன்றிற்று. கூடப் பிறந்த தமக்கையே தனக்குக் குழந்தை இல்லை என்பதை இடித்துக் காட்டுகிறாள் என்பது வேதனைப் படுத்தியது. யாரைக் குற்றம் சொல்வது என்று தெரியாமல் மனசு குழம்பிற்று. தற்காலிகமாக அக்கா தன் குழந்தையை வீட்டுக்கு எடுத்துப் போவதே குழந்தைக்குச் சௌகர்யம் என்று நினைத்தான். இத்தனை இரைச்சலுக்கு நடுவே மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்த குழந்தை நிச்சயம் அதன் அம்மாவின் அணைப்புக்கே ஏங்கும் என்று நினைத்தான். தன்னால்தான் இந்தச் சண்டை என்று குழந்தைக்குத் தெரிந்திருக்கக் கூடும். அக்கா ஆயிரம் சமாதானம் செய்தாலும் இங்கே தூங்கும்போது விசும்பி விசும்பி அழும். தன் வீட்டில் தன் பெற்றோர்களுக்கு நடுவே தான் பாதுகாப்பாய் இருப்பதைக் குழந்தை உணர வேண்டும். பாட்டி வீட்டில்

இருப்பதால் ஓர் அருவருப்பு உணர்வு குழந்தையைத் தாக்கி விடக் கூடாது.

ராஜா மிகுந்த யோசனைக்குப் பிறகு அக்காவை நோக்கி, ''நீ குழந்தையை எடுத்துண்டு போ'' என்றான்.

ஆனால் வீட்டிலிருந்த மூன்று பெண்களுமே இதைத் தவறாக எடுத்துக் கொண்டு விட்டார்கள்.

அலமேலு தான் ஜெயித்து விட்டதாகச் சிரித்தாள்.

அம்மா தன் பிள்ளை மாறிவிட்டான் என்று புலம்பினாள்.

அக்கா அவனை அடியோடு வெறுத்தாள். வாசற்படியில் குழந்தையோடு நின்றபடி ''உனக்கு நிறைய நிறையக் குழந்தைகள் பிறக்கணும். நீ அவஸ்தைப் படறதை நான் பார்க்கணும்'' என்று சாபமிட்டாள்.

அக்கா போன பிறகு ராஜா அறை முழுக்க ஈரத் துணியால் துடைத்தான். நிறைய எறும்புகளோடு பத்துப் பன்னிரண்டு கல்கண்டுத் துணுக்குகளும் கிடைத்தன. தட்டி சுத்தப்படுத்தி அலுமினிய டப்பாவில் போட்டான். இரவு தலைகாணியை உதறும் போது இன்னும் இரண்டு துணுக்குகள் கிடைத்தன. அலமாரியைத் திறந்து அலுமினிய டப்பாவில் போடச் சோம்பலாக இருந்தது. வீணாக்குவானேன் என்று வாயில் போட்டுக் கொண்டான். தித்தித்தது. தித்திப்பு நாக்கில் இருக்கிறவரை அக்காவின் அழுகையும் குழந்தையின் கலங்கின முகமுமே ஞாபகம் வந்தது. மறுநாள் நிவேதனம் பண்ணின கல்கண்டுத் துணுக்குகளைத் தான் தின்றது அம்மாவிடம் கொடுத்தான். அம்மாவுக்கும் கல்கண்டு தின்னும்போது குழந்தையின் நினைவு வருமோ என்று யோசித்தான். பாதியை அலமேலுவுக்கும் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அலமேலுவுக்குக் குழந்தை நினைப்பு வரும் என்பது என்ன நிச்சயம்?

குழந்தையை அக்கா அன்று கொண்டு வந்து விடவில்லை. ஆனால் அந்த ஒற்றைக் கல்கண்டுத் துணுக்கு எப்படியோ பாக்கெட்டில் விழுந்து இப்போது ஜெம் கிளிப் பிரக்னில் கிடக்கிறது. வாயில் போட்டுக் கொள்ளாமலேயே அதன் ருசி தெரிகிறது. அந்த ருசி பற்றித் தெரிகிற போதெல்லாம் குழந்தையின் ஞாபகம் வருகிறது. ஒரு நூறு கிராம் கல்கண்டு வாங்கிக் கொண்டு போய்க் குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். அக்காவை மெல்லச் சமாதானப்படுத்த வேண்டும். இனிக் குழந்தையைக் கொண்டு விட்டாலும் விடாது போனாலும் என் நிலைமை தெரியாது என்மீது கோபப்படாதே என்று சொல்ல வேண்டும். ஸ்வாமிக்கு நிவேதனம் பண்ணுவது போல அந்த நூறு கிராம் கல்கண்டைக் குழந்தைக்குக் கொண்டு போய்க் கொடுத்தால்தான் தன் மனசு கொஞ்சமாவது ஆறும். முற்றிலும் இந்த ரணம் ஆற என்ன செய்ய வேண்டும்?

வெகு நேரம் யோசித்தும் ராஜாவுக்குத் தெரியவில்லை.

17

மறுநாள் மாலை பள்ளிக்கூட நேரம் முடிந்ததும் எல்லாரும் வெளிப்பட்டனர். ஆனால் அவள் மட்டும் ஆசிரியைகளின் அறையிலிருந்த தன் அலமாரியில் புத்தகங்களை அடுக்கிக் கொண்டு அசட்டையாகத் தாமதம் செய்து கொண்டிருந்தாள். அவள் வருகைக்காகக் கடைத் தெருவில் அந்த பாலிகிளினிக் முன்னால் நிறுத்தப்பட்டிருக்கும் தன் காரின் டிக்கியைத் திறப்பது போல பாவனை காட்டிக் கொண்டு நிற்கப் போகும் ஸ்ரீதரனை அவள் அன்று பார்க்க விரும்பவில்லை. அவன் மாடியிலிருந்து கீழே இறங்கி வருவதற்குள் அவள் பஸ்ஸில் ஏறிப் போய் விட்டதாக நினைத்துக் கொள்ளட்டும். ஆசிரியைகளிடம் பரவி நிற்கும் இந்த வம்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும்வரை அவள் அவனைப் பார்க்கப் போவதில்லை; பேசப் போவதில்லை.

''டீச்சர்....''மிருதுவான குரல் அவளைத் திடுக்கிடச் செய்தது. அலமாரிக் கதவுகளைச் சாத்திப் பூட்டிவிட்டுத் திரும்பினாள்.

வாயிற்படியருகே தோளில் புத்தகப்பை தொங்க நெற்றி மீது உச்சி முடி புரள, கவலை அப்பிய முகத்துடன் மாணவி ராதிகா நின்று கொண்டிருந்தாள்.

சாதாரண மனிதன்

'லக்ஷ்மி'

''இந்தத் தடவை என்ன கொண்டு வந்திருக்கே? வேர்க்கடலை உருண்டையா... வெல்லச் சீடையா?... முன்பே சொல்லியிருக்கேன். இதுகளை எடுத்துட்டு என்னைப் பார்க்க வரக் கூடாதுன்னுட்டு... என்ன சங்கதி...'' எரிச்சலும் கோபமுமாக அவளை முறைத்துப் பார்த்தாள் சந்தியா.

''தினமும் உங்களுக்குத் திங்கறதுக்கு ஏதாவது வீட்டில் சுட்ட பலகாரம் எடுத்துட்டு வரணும்னுதான் ஆசையா இருக்கு. ஆனால் நீங்க போட்ட உத்தரவை மதிச்சு நான் எதுவுமே எடுத்துக்கிட்டு வரதில்லே. நான் வந்து...'' மென்று விழுங்கினாள் ராதிகா.

மறுபடியும் அந்தப் பையன் விஷயமாகப் பேச வந்து விட்டாள் போலும்... சந்தேகத்துடன் ராதிகாவை வெறித்துப் பார்த்தாள்.

''நான் உள்ளே வரலாமா டீச்சர்?...'' ராதிகா தயங்கிக் கொண்டு கேட்டபோது எரிச்சலையும் மீறி அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

''வாசற்படியைத் தாண்டி உள்ளே வந்து நிக்கறே இப்போ... வரலாமான்னு இனி என்னத்துக்குக் கேள்வி?... சட்டுனு வந்த விஷயத்தைச் சொல்லிட்டுப் போ.''

''நீங்க வழக்கமாப் போற பஸ் இத்தனை நாழி கிளம்பியிருக்கும் டீச்சர்... அடுத்தது வரத்துக்கு...'' சொல்லிக் கொண்டே ராதிகா அறைக்குள் நுழைந்து மேஜையருகே வந்து நின்றாள்.



''தெரியும். அடுத்தது வரத்துக்கு ஒரு மணி நேரமாகும். வீடு போய்ச் சேருவதற்குள் இருட்டி விடும். இதைப் பத்திப் பேசவா இப்போ இங்கே வந்தே?'' என்று அதட்டினாள் சந்தியா.

ராதிகாவின் உதடுகளும் மூக்கும் உணர்ச்சி வசத்தில் துடித்தன. எதையோ சொல்ல முயன்று முடியாது தவிக்கிறாள் அவள் எனப் புரிந்துகொண்ட சந்தியா.. மெலிதாக முறுவலித்தாள்.

''பயப்படாமச் சொல்லு... என்ன உதவி தேவைன்னு மனம் விட்டுக் கேள். செய்யத் தயாரா இருக்கேன்.'' மெல்லிய குரலில் ஆறுதலாகக் கூறினாள்.

''என் கிளாஸில் படிக்கிற பொற்கொடியை நீங்க கொஞ்சம் கண்டிக்கணும் டீச்சர்!''



''ஏன் அவள் உன் புஸ்தகத்தைக் கேட்காமக் கொள்ளாம எடுத்துக்கொண்டுட்டாளா?...''

''கார்த்திகா டீச்சரின் பொண்ணுன்னு பொற்கொடிக்கு ரொம்பவே தலைக் கனம். இப்போ இருக்கிற ஹெட் மிஸ்ட்ரஸ் ஓய்வடைஞ்சதும் அவ அம்மாதான் அடுத்த படியாத் தலைவி பதவிக்கு வருவாங்களாம். அந்தத் திமிரில் அவளுக்கு யார் கிட்டேயும் பயம் கிடையாது. தன் பக்கத்திலே உட்கார்ந்துண்டு இருக்கிற கனகத்துக்கிட்டே அவ உங்களைப்பத்தி வம்பு பேசிக்கிட்டிருந்தா. கையிலே வச்சிருந்த ஸ்கேலாலே பட்டுனு தலையில ஓங்கிப் போடணும்போல எனக்கு ஆத்திரமா இருந்துச்சு டீச்சர்.... அப்படி நான் செய்யறதை நீங்க விரும்ப மாட்டீங்கன்னு பேசாமக் கேட்டுக்கிட்டிருந்தேன். ஆனால் மனம் ரொம்ப வேதனைப் பட்டது.'' கண்களில் நீர் முட்ட மேஜை ஓரத்தைப் பிடித்துக் கொண்டு தடுமாறினாள் ராதிகா. பகீர் என்ற உணர்வு நெஞ்சைக் கவ்விக் கொள்வதை உணர்ந்தாள் சந்தியா.

''உனக்குக் கோபம் வரும்படி. அப்படி அவள் என்ன பேசிட்டா?''

''வந்து...வந்து...'' என்றுதிணறிவிட்டு... கண்ணீரைச் சட்டென்று துடைத்துக்கொண்டாள் ராதிகா. நான் மயக்கம் போட்ட போது வந்து என்னைப் பரிசோதிச்சு மருந்து எழுதிக் கொடுத்தாரே அந்த டாக்டர்.... அவர் பேர் ஸ்ரீதரனும். அவர் உங்களை... எனக்குப் பயமா இருக்கு டீச்சர்...'' என்று கூறிவிட்டு விசும்பத் தொடங்கினாள்.

சட்டென்று அந்தப் பெண்ணைத் தன் அருகில் இழுத்து அணைத்துக் கொண்டாள் சந்தியா. தன் மீது அந்த மாணவிக்கு உள்ள பாசத்தை எண்ணி மனம் நெகிழ்ந்து போனாள்.

அதே சமயம் தன்னைப் பற்றிய வம்பு மாணவிகள் வரை வந்து விட்டிருக்கிறதே என்றும் திகைத்துப் போனாள். ஆசிரியைகள் அன்று பேசிய வம்பு அந்த அறையைத் தாண்டி அவர்களது வீடுகள் வரை போய் விட்டிருக்கிறது. அப்பாவிடம்அம்மா சொன்னதைக் கேட்டு, பொற்கொடி வகுப்பில் தன் சிநேகிதியிடம் கிசுகிசுத்திருக்கிறாள். இந்த ரீதியில் போனால் ஊர் முழுவதும் விரைவில் கொல்லென்றாகி விடும்... கோபத்துடன் சந்தியா தன் உதட்டைப் பற்களால் அழுத்திக் கடித்துக் கொண்டாள்.

''பொற்கொடி ஏதோ தப்பாப் பேசியிருந்தா அதுக்கு நீ ஏன் பயப்படணும்?'' ஆறுதலாக ராதிகாவின் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

''டாக்டர் ஸ்ரீதரன் உங்களைக் காதலிக்கிறார்னு பொற்கொடி சொல்லியிருந்தா நான் ரொம்ப மகிழ்ச்சியடைஞ்சிருப்பேன். ஆனால்... ஆனால்... டீச்சர் அவள் ரொம்ப அசிங்கமாச் சொன்னதைக் கேட்டுத்தான் எனக்கு ரொம்ப ஆத்திரம் வந்தது. அந்த டாக்டருக்கு நீங்க ஆசை நாயகியாக இருக்கிறீர்களாம்.'' சொல்லிவிட்டுச் சட்டென்று சந்தியாவின் பிடியிலிருந்து நகர்ந்து மிகவும் கிலியுடன் ராதிகா அவளைப் பார்த்தாள்.

''மன்னிச்சுக்கோங்க... இதைச் சொல்லாட்டா எனக்கு ராத்திரி தூக்கமே வராது போல மனசு அடிச்சுக்கிச்சு. அந்தப் பொற்கொடியை நீங்க கட்டாயம் கண்டிக்கணும்.'' கண்களில் நிறைந்த கண்ணீரைத் தன் புறங்கையால் துடைத்துக் கொண்டு அங்கே நிற்கப்பயந்தவளாக ஒரேஓட்டமாக வெளியே பறந்து விட்டாள்.

பூமி நழுவித் தடாலென்று எங்கேயோ பள்ளத்திலே விழுந்துவிட்ட அதிர்ச்சியில் பிரமித்துப் போய்ச் சிலையாக நின்றுவிட்டாள் சந்தியா.

நேரம் கழித்து வீட்டுக்கு வந்த அவளிடம் அத்தை ஜகதா உடனடியாக எதுவும் பேசவில்லை.

காலையில் புறப்படு முன் அவள் கவனித்தாள். செல்லக்குட்டியின் இழப்பைத் தாங்காது வெகு நேரம் அழுது விட்டதால் முகம் உப்பி, இமைகள் வீங்கி ஜுரமடித்து எழுந்தவள் போல சந்தியா காணப்பட்டாள்.

வெறும் காப்பியுடன்தான் அவள் வேலைக்குப் புறப்பட்டுப் போயிருந்தாள். அத்தை கட்டிவைத்த டிபன் டப்பாவைக் கூட எடுத்துப்போகவில்லை.

அவளது பிடிவாதம் அத்தைக்குத் தெரிந்ததுதான். பசி வயிற்றைச் சுருட்டினாலும் பல்லைக் கடித்துக் கொண்டு பள்ளிக்கூடத்திலேயேதான் உட்கார்ந்திருப்பாள். அருகில் இருக்கும் காப்பி ஹோட்டலுக்குச் சென்று மதிய உணவின்போது எதுவும் வாங்கிச் சாப்பிடமாட்டாள்.


குளித்துவிட்டு மாற்றுடையுடன் வந்தவளை உட்காரவைத்துச் சட்டென்று உணவைப் பரிமாறினாள் ஜகதா.

''சாப்பிடும்மா சந்தியா. உணவையும் உறக்கத்தையும் நாம் யாருக்காகவும் எதுக்காகவும் ஒழிக்க முடியாது. என்னை உதாரணத்துக்கு எடுத்துக்கோ. எத்தனை விதமா துன்பங்களை அனுபவிச்சிருக்கேன். பூவும் பொட்டுமாக இருக்க வேண்டிய இள வயசில் விதவைக் கோலம். ஒரு பெண்ணுக்குக் கணவனின் மரணம்... ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. அதுக்காக நான் அவரோட உடன்கட்டை ஏறிட்டேனா? மலை போல் நம்பிக் கொண்டிருந்த என் அண்ணனும் ஒரு நாள் மரம் போல் சாஞ்சுட்டான். அவரோட கூடவா நான் போயிட்டேன்? செல்லக்குட்டியின் உடலை மாரப்பன் அழைச்சுக்கிட்டு வந்த ஆட்கள் மூங்கிலிலே கட்டித் தூக்கிக்கிட்டுப் போறச்சே அம்மான்னு அதன் கன்றுக்குட்டி அலறிக் கத்தினப்போ நான் துடிதுடிச்சுப் போனேன். குமுறி அழுதேன். அதுக்கு மேலே என்ன செய்ய முடியும்? சொல்லு. கால்நடை மருத்துவர் தடுப்பு ஊசி போட்டிருந்தா இந்த வியாதி வந்திருக்காதுன்னு சொன்னார். சரி தடுப்பு ஊசி போட்டுக் கவனிச்சிருந்தோம்னு வச்சுக்கோ... எத்தனை நாளைக்கு அந்தக் கிழப் பசுவை நாம காப்பாத்த முடியும்? இந்த நோய் இல்லாட்டா இன்னொரு நோயிலே செத்திருக்கும். சாவைத் தடுத்து நிறுத்த தடுப்பு ஊசி எதாச்சும் இருக்கா? வயசான மாடு... இப்படி நம்ப வீட்டிலேயே செத்ததுன்னு நீ மன ஆறுதல் அடையணும். உங்கத் தான் குமரேசன் சொன்னபடி மாட்டை தவறிப் போய் அடிமாட்டுக்காரங்க கிட்டே வித்திருந்தா உன் மனம் எத்தனை வேதனைப்படும்? உன்னோடு கூட துணையா இருந்துண்டு இருக்கிற நான் மட்டும் சாஸ்வதமா?

நண்பர்: ''ஊரில் ஒரே திருட்டு பயமாக இருந்தும் உன் மனைவி எல்லா நகைகளையும் போட்டுக் கொண்டு வெளியில் போகிறாளே ஏன்?''

மற்றவர்: ''அவளுக்குத் திருடர்களை விட என் வீட்டிில் தான் பயம் அதிகம்!''

- ச. இராசகோபாலன்



நினைச்சுப்பாரு...'' சொல்லிக் கொண்டே அத்தை குழம்பைச் சோற்றின் மீது ஊற்றினாள்.

''அத்தை!... உங்களையும் இழந்துட்டு என்னைத் தனியா வாழச் சொல்றீங்களா?'' துக்கத்தில் நிறைந்த சந்தியா சட்டென்று அவளது இடது கரத்தைத் தன் கன்னத்தோடு பொருத்திக் கொண்டு குமைந்தாள்.

''பட்டினி கிடக்காம சாப்பிடு சந்தியா! நாலு பிள்ளைகளுக்குப் பாடம் கத்துக் குடுக்கிற உனக்கு இந்த விவேகம் இல்லேன்னு அதிசயம்தான்.'' சொல்லிவிட்டு மெல்லத் தன் கையை விடுவித்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

சந்தியா பதில் பேசாது மௌனமாகச் சாப்பிட்டாள். மௌனமாகத் தன் பாயை அத்தை அருகே கூடத்தில் விரித்துப் போட்டுக்கொண்டு படுத்தாள். மெல்லத் தன் முகத்தை அத்தையின் முதுகின் மீது வைத்து அழுத்திக் கொண்ட வண்ணம் தூங்க முயன்றாள். அழுகை தொண்டை வரை அடைத்தது.

'அத்தை ஓவென்று வாய் விட்டு அழணும் போல் எனக்குத் துக்கம் நெஞ்சைப் பிளக்குது. அதுக்குப் பல காரணங்கள் இருக்கு. மாட்டுக் கொட்டகை இடிஞ்சு விழுந்து நமக்கு நஷ்டம் தந்துட்டதேன்னு அழுவேனா... செல்லக்குட்டி இப்படிப் போக்குன்னு ஒரே நாளில் சிக்காகிப் போயிட்டுதேன்னு அழுகிறதா... என்னையும் டாக்டர் ஸ்ரீதரனையும் சேர்த்து வச்சு ஊரிலே அசிங்கமாக் கதை கட்டத் தொடங்கிட்டாங்கன்னு அழுவேனா... அப்பா போய் இப்படி நாம ரெண்டு பேரும் ஆதரவற்றுத் தவிச்சுக்கிட்டு நிக்கிறோமேன்னு அழுவதா... எதுக்கு அழுவேன் அத்தை...' மனத்தைக் குடைந்த அந்தத் துயரத்தை வார்த்தைகளால் கொட்டி அளந்து விட வேண்டும் போன்றதொரு துடிப்பு... பாவம் அத்தை -வயதும் வியாதியுமாக அவதிப்படுகிறவளை மேலும் வேதனைப்படுத்துவானேன் என்ற இரக்கத்தின் காரணமாக மௌனமாகப் படுத்துக் கிடந்தாள்.


ஜகதாவுக்கு உறக்கம் சுலபத்தில் வந்துவிடவில்லை. அன்று காலை சந்தியா பள்ளிக்கூடம் புறப்பட்டுச் சென்றதும் சொல்லி வைத்தாற்போல் குமரேசன் ஒரு ஓசிக் காரில் வந்து வாசலில் நின்றான்.

''உள்ளே வாப்பா என்று அழைத்தாள். நல்ல வேளையாக அதற்குள் மாரப்பன் ஆட்கள் இறந்த பசுவை அகற்றி விட்டிருந்தனர். கூடத்து ஊஞ்சலில் வந்து உட்காரு முன் தோட்டத்தை எட்டிப் பார்த்து விட்டுத்தான் வந்தான் குமரேசன்.

''வீட்டை விற்றுவிடுங்கோன்னுகரடியாகக் கத்தினேனே கேட்டீங்களா? இப்போ மாட்டுக் கொட்டகையைப் புதுப்பிக்கணும், ஓடுகளை மாத்தணும்''ரிப்பேர்னுகையைவச்சால் என்ன பிடிக்கும் தெரியுமா?''

ஜகதா மௌனமாக நின்றாள்.

''வழியிலே கோடி வீட்டுப்பையன்சொன்னான். பசுமாடு செத்துப் போயிட்டுதாமே?''



''நான் பல சந்தர்ப்பங்களில் கிண்டிரேஸுக்குப் போய்விட்டுத் திரும்பி வருவதற்குக் கூட காசு இல்லாமல் திண்டாடி இருக்கேன்.''

''அய்யோ பாவம். இந்தக் கஷ்டத்தையெல்லாம் உணர்ந்து ரேஸ் விளையாடுவதை நிறுத்திட்டீங்களா?''

''ம்ஹூம் கிண்டிக்கே வீட்டை மாத்திக்கொண்டேன்...''

-எஸ். வனஜா

''வயசாச்சு போக வேண்டியதுதானே?'' வெறுப்போடு பேசினாள் ஜகதா.

''அப்பவே வித்திருந்தா ரெண்டு காசைக் கையில் பார்த்திருக்கலாம். சந்தியா அதுக்கு பிடிகொடுத்துப் பேசலை.... இதெல்லாம் போகட்டும். இப்ப நான் எதுக்கு இந்தக் காலை வேளைல திருச்சியில் பட்டறையில் அத்தனை வேலைகளையும் போட்டு விட்டு வந்திருக்கேன் தெரியுமா..''ஆத்திரமாக உறுமினான்.

''ஆம்பிளை அந்து இல்லாத குடும்பம் குட்டிச்சுவராயிடும்னு சொல்லுவாங்க... அது இந்த வீட்டைப் பொறுத்தவரை உண்மையாயிடுச்சு.....''

''குமரேசா...: நீ என்னப்பா பேசறே?''

''நாலு பேர் பேசிச் சிரிக்கிற உண்மையை உங்ககிட்டச் சொல்றேன். நம்ப குடும்ப மானம் கப்பலேறிடுச்சு... சந்தியாவைத் தான் வாங்கினகாரில் வச்சுக்கிட்டுத் தினமும் ஊர்வலம் போறானுமே அந்த டாக்டர் பயல்... கடைத் தெருவிலே நம்ப மளிகைக் கடை மன்னாரின் ஆள் என்ன சொன்னான் தெரியுமா? 'வாத்தியார் ஐயா மகளை இந்த ஊருக்கு வந்துக்கிட்டிருக்கிற டாக்டர் பயல் வச்சுக்கிட்டிருக்கான்...'

''பல்லுமுப்பத்திரண்டும் கொட்டுறாப்பலே அடிச்சு நொறுக்கி யிருப்பேன். நம்ப சங்கதி தானே 'இன்னும் அம்பலத்துக்கு வரும்னு பதறிக்கிட்டு ஓடிவந்தேன். – சந்தியாவின் நடத்தை கேட்க நல்லாவா இருக்கு?''

தன் வாழ்வில் எத்தனையோ கஷ்டங்களைக் கண்டு பழகிவிட்டிருந்த போதிலும் ஜகதா அந்தப் பெரும் பழியைக் கேட்டு வெதறிப் போய்விட்டாள். குமரேசன் தலை மறைந்ததும் 'இதென்ன கொடுமை!' என்று தனக்குள் பேசியபடி குமுறி அழுதாள்.

அதை எப்படி அவள் சந்தியாவிடம் சொல்வாள்? 'ஏற்கனவே மனம் புண்ணாகிப் போயிருக்கும் அந்தப் பெண்ணை பாவம்... குமரேசன் வந்து போன விஷயத்தைச் சொல்லி மேலும் வேதனைப்படுத்துவதா... வேண்டாம்...'மௌனமாகப் புரண்டு படுத்தபடி அமைதியின்றித் தவித்தாள் அத்தை ஜகதா.

(தொடரும்)

இதயம் பேசுகிறது



மைத்ரேயி

வானத்தில் திடுதிடுவென்று புரண்டது ஓர் இடி. அது தன் தலையிலேயே வந்து இறங்கின மாதிரி பட்டது சேதுவுக்கு. படித்து முடித்து வேலையில்லாமல் இருந்த ஒரு வருஷத்தில் நெஞ்சில் எழும்பாத வெறுப்பும் விரக்தியும் இப்போது வந்து சேர்ந்து கொண்டது. இப்படி ஒரு சுயநலக் கூட்டமா மனுஷ இனம்? போன வாரம் இதே சனிக் கிழமையில் தொடங்கியது பிரச்னை. சனிக்கிழமை அவர்களுக்குச் சம்பள நாள்.

'பத்திக்' கைலிகளுக்காக வெள்ளைத் துணிகளில் உருகின மெழுகால் பூப்போடுகிற வேலை. எட்டரை மணியிலிருந்து அரை மணி சாப்பாட்டு நேரம் போக சாயங்காலம் அஞ்சு மணிவரை.

சாதாரணக் கைலி வரைகிறவர்களுக்கு ஒரு நாளைக்கு நாலு ரூபாய். சுவர்ப் படங்கள் வரைகிற ஒன்றிரண்டு திறமைசாலிகளுக்கு ஆறு ரூபாய். ஆனால் அன்றைக்கு வந்த சம்பளத்தில் அரை நாள் சம்பளம் குறைவாய் இருந்தது எல்லாருக்கும்: முதலில் மானேஜரின் கவனக் குறைவாகக் கருதப்பட்டு, முடிவில் முதலாளியின் உத்தரவென்று தெரிந்து கொண்டதும் எழும்பின உரத்த சந்தேகங்கள் முதலாளியின் காதுகளில் பெரும் கூச்சலாய்ப் போய் விழுந்தன.

சலனம் அவர் எதிர்பார்த்ததுதான்.

எழுந்து வந்து கேட்டார்.

''என்னப்பா சத்தம் இங்கே?''

ஒரு மௌனம் விழுந்து மறுபடியும் முணுமுணுப்புக்கள் எழுந்தபோது மானேஜரே சொன்னான்.

''சம்பளம் கொறைவா இருக்கேன்னு கேக்கறாங்க முதலாளி.''

''வேலை பார்த்த நாளுக்குத்தானே சம்பளம் தரணும்?''

முதலாளியே மறுபடி சொன்னார்.

''புதன் கிழமை அரை நாளுதானே வேலை செஞ்சீங்க!''

எல்லாரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

எதிர்பார்த்த விஷயமில்லை இது.

திங்கள் கிழமை வருகிறதாயிருந்த மெழுகுக் கோட்டா செவ்வாய்க் கிழமை சாயங்காலம் வரை வந்திருக்கவில்லை. எல்லாக் கிண்ணங்களிலேயும் பேனாவை முக்கியெடுக்கக்கூட முடியாத அளவுக்கு மெழுகு தீர்ந்து போயிருந்தது.

புதன் கிழமை காலையில் கோட்டா எடுக்கப்போன மானேஜர் மத்தியானம் வரை திரும்பவில்லை.

அதற்காகச் சும்மா இருக்கவில்லை அவர்கள். தரையில் கனமாய் அப்பிக் கிடந்த மெழுகைப் பெயர்த்துப் பெயர்த்து எடுத்து உருக்கி ஏதோ வேலை செய்து கொண்டுதான் இருந்தார்கள். மெழுகு வந்த பின்னால் ஒரு கடமை உணர்வோடு வழக்கத்துக்கு மேல் அதிகமாகவும் வேலை செய்திருந்தார்கள். இப்போது அதற்காக ஒரு அரை நாள் சம்பளம் மறுக்கப்பட்டது பெரிய துரோகமாக இருந்தது அவர்களுக்கு.

''எங்க அரை நாள் சம்பளத்துல வீடா கட்டப் போறீங்க?''

சாரதாவுக்கு மனசு வாயிலே இருந்தது எப்போதும். பெரிய குரல் வேறு சேர்ந்து கொண்டு சிலருக்கு அவளை ராட்சசியாகவும் வேறு சிலருக்கு ரட்சகியாகவும் காட்டிக் கொண்டிருந்தது. இப்போது அவளுக்குப் பதில் சொல்ல முதலாளி அங்கே நிற்கவில்லை. ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றியது சேதுவுக்கு. இரண்டு ரூபாய் பெரிய விஷயமில்லை அவனுக்கு. அவன் இந்த வேலையோடு என்றைக்குமாய் இணைந்தவனுமில்லை. படித்த படிப்புக்குத் தகுந்த வேலை கிடைக்

இறவரை தன் கைச் செலவுக்கு இன்னொருவரை அணுகாமல் இருக்க, அதோடு கொஞ்சம் கற்பனையை உபயோகப்படுத்தக் கூடியதாய் இருக்கிறதால் ஒரு சிநேகிதரின் சிபாரிசில் ஒப்புக்கொண்ட வேலை. அதற்காகச் சும்மா இருக்க முடியவில்லை அவனால். இந்த எளிய மக்களின் உரிமைகளை என்னால் பாதுகாக்க முடியும் என்கிற ஈகோ.

முதலாளியின் அறைக்குப் போய் அவரோடு பேசிப் பார்த்தான். நீ என்னடா இன்றைக்கு வந்தவன் என்கிற ரீதியில் இருந்தது அவர் பேச்சு. பேசிப் பயனில்லை என்று புரிந்து கொண்டு மற்றவர்களுக்கு ஒரு புது வழி சொல்லிக் கொடுத்தான். வேலை செய்யற நேரத்துக்குத்தானே காசு, வேலை அளவைப் பத்திக் கணக்கில்லை. ஒவ்வொருத்தரும் நாலு கைவி போடுகிற நேரத்தில் ஒன்று இல்லையென்றால் இரண்டு போட்டார்கள். நிதானமாய்ப் பேனாவை மெழுகில் தோய்த்து மெதுவாய் அப்படியும் இப்படியும் திருப்பித் தூக்கி வடித்து நொடிக்கொரு தடவை பேனாவை மெழுகில் முக்கி...

மெள்ள வேலை செய்வது ஒரு நரகம்தான்.

முதலில் அது பிடிபடவில்லை அவர்களுக்கு.

சரசரவென்று சங்கு சூரியன் பூ என்று வரைந்து வரைந்து பழகின கைக்கு அது கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. பேனாவைத் துணியில் செங்குத்தாய் நிறுத்திலாவகமாய் ஒரு சரட்டென்ற சுழற்சியில் சூரியனைச் சிதற விடலாம். அதில் வேகத்தைக் குறைத்தால் சிதறல் சரியாய் விழாது. பூ அசிங்கமாய்ப் போகும்.

போகட்டுமே உனக்கென்ன?

அவர்களுக்கு இந்த நிதானம் கைவந்த போது முதலாளியின் மனசில் நிஜம் உறைத்திருந்தது. மானேஜரைப் பக்கத்திலிருந்து பார்த்துக் கொள்ளப் பணித்தார். ஆனால் கெடுபிடியாலே என்ன பண்ண முடியும்? கடைசியில் இதற்கெல்லாம் சேதுதான் காரணம் என்று தெரிந்து அவனைக் கூப்பிட்டு அனுப்பினார்.

''என்னப்பாசேதுவென்னவேணும்கிறீங்க.''

''எங்களுக்கு அந்த அரை நாள் சம்பளத்தைத் தரணும்.'' – சொல்லிவிட்டுச் சடாரென்று அதுவரை நினைத்திராத ஒன்றையும் திடீரென்று கேட்டான் சேது. ''விலையெல்லாம் ஏறிடிச்சு. தினமும் ஒரு ரூபாய் கூலியைக் கூட்டித் தரணும்கிறாங்க எல்லாரும்.''

பூதம் புறப்பட்டிருப்பது தெரிந்தது.

தீபாவளிக்கு நாற்பது நாள்தான் இருந்தது.

எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டுப் புது ஆளுக்குப் பூப்போடச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. முதலாளி முடிவெடுத்து விட்டார்.

இன்றைக்கு ஒரு வாரச் சம்பளத்தோடு போன வாரத்து அரை நாள் சம்பளமும் இருந்தது. எண்ணிப் பார்த்துவிட்டு சேதுவை ஒரு ஹீரோவாய் அவர்கள் மனசுக்குள் போற்றிக் கொண்டிருந்த அந்தக் கணத்திலேயே ஒரு செய்தியைத் தூக்கி யெறிந்தார்.



''இந்தத் தொழில்ல லாபம் ஒண்ணும் அதிகமில்லே எனக்கு. ஒரு நாளைக்கு அம்பது பைசா ஏத்தித் தரேன். ஆனா ஒரு ஆளைக் கொறச்சாத்தான் சம்பளம் ஏத்த முடியும். கொஞ்சம் நிறுத்தி எல்லாரையும் ஒரு தடவை பார்த்து சேதுவின் மேல் பார்வையைப் பதித்து எடுத்துச் சொன்னார். ''உங்கள்ல கடைசியா வந்தவங்க வீட்டுக்குப் போக வேண்டியிருக்கும்.''

யோசித்துச் சொல்லச் சொல்லிவிட்டுத் தம் அறைக்குள் நுழைந்து கொண்டார்.

கடைசியில் வந்தவன் சேதுராமன்.

கொக்கி வலியதாய்த்தான் இருந்தது.

ஐம்பது பைசா கூலியைத் தூக்கிப்போட்டு அவர்களுடைய நல்லெண்ணங்களை நசுக்குகிறதாய் இருந்தது. உங்கள் மேல் அக்கறையுள்ளவனானால் தலைக்குக் கத்தி வருகிறபோது என்ன செய்கிறான் பாருங்களேன் என்று இவனைக் கைகாட்டி விடுகிறதாய் இருந்தது.

எல்லாரும் குழம்பிப் போயிருந்தார்கள்.

வாரம் மூன்று ரூபாய் என்பது பெரிய விஷயம்தான் அவர்களுக்கு. சேது தானாகவே போய்விடுவதாகச் சொல்லிவிட்டால் பிரச்னை இல்லை என்று நினைக்கிற மாதிரி இருந்தது அந்த மௌனம்.

வேலை போகிறதில் சில பிரச்னைகள் உண்டு சேதுவுக்கு. ஆனால் அவை நிரந்தரமானவையல்ல. இன்னும் வேறு வேலை கிடைக்கிற நம்பிக்கை விட்டுப் போகவுமில்லை. ஆனால் அவர்களுடைய மௌனம்தான் பெரிய இடியாகப் பட்டது அப்போது. அவர்களிடமிருந்து கிடைக்காமல் போகிற ஒத்துழைப்புக்காக மனசு ஏங்கியது. மனிதர்களின் மேல் ஒரு வெறுப்புக் கிளம்பி விசுவரூபமெடுத்தது. யாருக்காகவும் எப்போதும் எங்கேயும் பரிந்து பேசுகிறதில்லை. தனக்காக அன்றிப் பிறர்க்காக இனி எதையும் செய்வதில்லை என்றெல்லாம் அவசரத் தீர்மானங்கள் நிறைவேறின மனசில். மௌனத்தைக் கலைத்து,

''என்ன செய்யலாம் சேது?'' என்றான் மணி.

''அவரைக் கேக்குறதுக்கு என்ன இருக்கு? அந்தாளு பழிவாங்கணும்னு நெனைச்சா அதுக்கு நாமளும் எடங் கொடுக்கிறதா? சேதுத் தம்பி வேற வேலை கிடைச்சுப் போறவரைக்கும் நம்மளோடதான் இருக்கணும். நாம எல்லாருமா இப்படிச் சொன்னா அந்தாளு என்ன பண்ண முடியும்?''

சாரதாவின் பெரிய குரல் ஒரு கத்தியாய் எல்லார் காதையும் கிழித்தது. இப்படி ஒரு தொடக்கத்துக்காகவே காத்துக் கொண்டிருந்த மாதிரி தங்களுக்கும் ஒரு பலம் இருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டு அவசரமாய் வழி மொழிந்தனர் மற்றவர்கள்:

''கூடச் சம்பளம் வேணும்னு கேட்டதே சேதுதானே?''

''கவலைப்படாதே சேது. நாம ஒண்ணாச் சேர்ந்தா யாரு என்ன பண்ண முடியும்?''

சாரதாவின் கறுத்து இளைத்துக் களைத்த முகம் தெய்வத்தின் முகமாகப் பட்டது சேதுவுக்கு. அவன் வேண்டியது இந்த நேசம்தான். இது மட்டும் தான். இவர்கள் மறுபடி போராடலாம். வெற்றி பெறலாம். அல்லது இவன் வேலையிழந்தாலும் இழக்கலாம். அதைப்பற்றிக் கவலையில்லை. வெளியில் மழை பெய்யத் தொடங்கியிருந்தது. தன் மேலும் ஒரு மழை பொழிந்து தன் மனச் சூட்டைத் தணித்தது போல இருந்தது சேதுவுக்கு. மழையில்லாமல் உலகம் வாழாதாம்.

உண்மைதான். ஆனால்

உலகத்தை வாழ வைக்கிறது மழை மட்டுமில்லை.

நேர்மையான சிந்தனை உடையவர்களும் நெஞ்சில் இருப்பதை நேர்படச் சொல்கிற துணிச்சலைக் கொண்டவர்களும் கூடத்தான்.



மனம் கெட்டுப்போய் எவ்வளவோ பாபம் செய்திருக்கிறோம். குழந்தையாக இருந்ததிலிருந்து ஈசுவர தியானம் செய்திருந்தால் இவ்வளவு நாள் எவ்வளவோ பாவம் போயிருக்கும். இப்பொழுதோ மேலேயும் பாவத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறோம். எத்தனை நாட்கள் ஈசுவர சரணாரவிந்த த்யானம் செய்கிறோமோ அவ்வளவு நாட்களும் நம்முடைய பிறவிப்பயனை நாம் அனுபவித்தவர்களாகிறோம். இந்த ஜன்மத்தை எடுத்ததற்குப் பலன் அதுதான்.


ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

தீவிரமான வைராக்கியம் ஒருவனுக்கு அவசியம் இருக்க வேண்டும். அது இல்லாமற் போனால் வாழ்க்கையில் பெரிதாக எதையுமே ஒருவன் சாதிக்க முடியாது. வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு அப்படி இப்படித் திரும்பாமல் நேராகத் தனது இலட்சியத்தில் சென்று பாய்கிறது. அதைப் போலவே தீவிர வைராக்கியம் ஒருவனை விரைவில் கடவுளின் சன்னிதிக்கு அழைத்துச் செல்கிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்

நெருப்பு விறகை அல்லது வைக்கோலைத் தின்பதைப் போல் பொறுமை நன்மைகளைத் தின்றுவிடும். பொறுமையும் குரோதமும் நோய் ஆகும்.

—நபிகள் நாயகம்



இந்த வாரக் கல்கி வாங்கிய கையோடு

கல்கி விடுமுறை மலர்-1982

கேட்டுப் பெறுங்கள்

320 பக்கங்கள் விலை ரூ. 6/-

முதல்தர எழுத்தாளர்கள் ஓவியர்கள், புகைப்பட நிபுணர்கள், கவிஞர்கள் ஆகியோரின் உல்லாசமும் பக்தி ரசமும் மிக்க நெஞ்சை அள்ளும்

- குறுநாவல்கள்
- பயணக்கட்டுரைகள்
- சிறுகதைகள்
- புகைப்படங்கள்
- கார்ட்டூன்கள்
- சினிமா பகுதி
- வண்ண ஓவியங்கள்

விடுமுறை மலர்
கல்கி 82

உள்ளூர் ஏஜெண்டிடம் கேட்கவும். தபாலில் பெற விரும்பினால் பதிவு தபால் செலவு ரூ 3 சேர்த்து உடனே அனுப்பவும்.

தாமதத்தைத் தவிர்த்தால் ஏமாற்றத்தைத் தவிர்க்கலாம்

மானேஜர் • கல்கி • சென்னை-600 032.



லஞ்சத்துடன் ஒரு பேட்டி!

தாளிப்பு: 'கழுகு'

ஆண்டவனுக்கு அடுத்தபடி அங்கிங் கெனுதபடி நீக்கமற நிறைந்திருப்பது லஞ்சம் என்று எல்லாரும் சொல்கிறார்களே தவிர, யாரும் லஞ்சத்துடன் பேசிப் பேட்டி எதுவும் எழுதியதில்லை. இவ்வளவு பிரபலமான திருவாளர் லஞ்சத்தை நானே சந்திக்கத் தீர்மானித்தேன்.

லஞ்சம் எங்கும் அபரிமிதமாக இருப்பதால் யாரும் அதைப் பேட்டி கண்டு எழுத முன்வரவில்லை போலும்.

ஒரு கோர்ட் வராந்தாவில் ''லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் ஒரு குற்றம்'' என்ற போர்டு இருந்த இடத்தில் மிஸ்டர் லஞ்சத்தைக் கண்டு பிடித்தேன்.

ரொம்பவும் எளிமையாக இருந்தார். பேட்டிக்கு முதலில் மறுத்தாலும், நூறு ரூபாய்த் தாளைப் போட்டு ஒரு கவரை இளித்துக் கொண்டே கொடுத்ததும் சர்வ லகுவாக ஒத்துக்கொண்டார். ஜன்ம ஜன்மமாகத் தெரிந்தவர் போல் நேசம், பாசம், பரிவு ஆகியவையுடன் பேசினார்.

''மிஸ்டர் லஞ்சம், ஏன் உங்களைச் சமூக விரோதி என்கிறார்கள்?''

''அப்படிச் சொல்வது ஒரு பாஷன். ஆனால் எல்லாருக்கும் நான் வேண்டியவன். நான் ஒருத்தன் இருக்கவேதான் பலருக்கும் வேலை கிடைத்திருக்கிறது. ரயில்வே ரிசர்வேஷன் கிடைத்திருக்கிறது. டெண்டர்கள் கிடைத்திருக்கின்றன. வருமான வரிச் சலுகை, சிமெண்ட் கோட்டா, 'கேஸ்' கனக்ஷன், இறக்குமதி லைசென்ஸ் இப்படி எத்தனை எத்தனையோ கிடைத்திருக்கின்றன. பலரது செழிப்புக்கு நான் வழி வகுத்திருக்கிறேன்.''

''ஊழல் உங்கள் உறவினர் தானே?''

''அவர் அப்படி ஒத்துக்கொள்ள மாட்டாரே. அவர் பெரிய வி. ஐ. பி. அவருக்கு ரொம்பப் பெரிய பெரிய இடங்களில் தொடர்பு இருப்பதால் நான் ரொம்ப அல்பமாகப் படுகிறேன். பத்தாயிரம் லஞ்சம் சேர்ந்தாலும் ஒரு ஊழலுக்குச் சமமாகாது என்று அவர் சொல்வார். போகட்டும். சாதாரண மக்களுக்குச் சேவை செய்வதே எங்களுக்குப் பெருமை; கௌரவம்.''

''முதல் முதலில் நீங்கள் எப்போது தோன்றினீர்கள்?''

''பல ஆயிரம் வருடங்கள் ஆகியிருக்கும். உங்களைப்போன்ற மேதைகள் தான் ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஔவையார்கூட 'நாலும் கலந்துனக்கு நான் தருவேன்; சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று விநாயகரிடம் பாடியிருக்கிறாரே, அதிலிருந்தே தெரியவில்லையா, லஞ்சம் அப்போதே இருந்திருக்கிறது என்று!''

''உங்களை எல்லோரும் இகழ்கிறார்களே?''

''யாரும் மனப்பூர்வமாக இகழ்வது கிடையாது. எல்லாருக்கும்தான் ஏதாவது ஒரு சமயத்தில் நான் உதவி யிருக்கிறேனே... இப்போது பாருங்கள், சினிமாவில், கதைகளில் ஆபாசம், செக்ஸ் அதிகமாகிவிட்டது என்று கத்துகிறார்கள். ஆனால் ஆதரவு தராமல் இருக்கிறார்களா? அப்படிப்பட்ட படம், கதை ஆகியவைகளுக்குத்தானே டிமாண்ட்?''

''ஆமாம்.... 'சம்திங்' என்கிறார்களே...''

''அதுவா அது காலேஜ் டிகிரி வாங்கின லஞ்சம்! இங்கிலீஷில் சொல்லிவிட்டால் மதிப்பாம்!''

''உங்களைப் பற்றித் தப்பு அபிப்பிராயங்கள் நிறைய இருக்கின்றன என்று நான் கருதுகிறேன்.''

''ஓ ஆர் ரைட்... இப்போது பாருங்கள். பத்திரிகைகளில் எழுதுகிறார்கள்.' 'லஞ்சம், தலைவிரித்தாடுகிறது என்று.' என் தலையைப் பாருங்கள். ஸ்டெப் கட்டிங் பண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் தலைவிரித்து ஆட முடியுமா?... அப்புறம் லஞ்சம் தாண்டவமாடுகிறது என்கிறார்கள். காலில் சலங்கையா கட்டிக்கொண்டிருக்கிறேன்?...வரேன் சார்...வேலை இருக்கு..ஜட்ஜ்மெண்ட் காப்பி ஒருத்தருக்கு வாங்கித் தரணும்...''

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543)

Assistant Editor: P.S. Mani Layout Artist: Nambi Editor: K. Rajendran

போர்ஹென்ஸ் ஃப்ளோரைடு ஈறுகளையும் பற்களையும் பாதுகாக்கிறது





சுவைமிக்கது



நுரை மிக்கது !

ஈறுகளுக்கு போர்ஹென்ஸ் பாதுகாப்பு



ஈறுகள் வலுவிழந்து மெத்தென்று இருந்தால் ஆரோக்கியமான பற்களகூட ஆட்டம் கண்டு விழுந்துவிடும். போர்ஹென்ஸில் உள்ள விசேட சேர்க்கைப் பொருள் (அஸ்ட்ரிஞ்ஜன்ட்) ஈறுகளை வலுப்படுத்தி ஈறு உபாதையை எதிர்க்க உதவுகிறது.

பற்களுக்கு ஃப்ளோரைடு பாதுகாப்பு



சிறுவர்களுடைய பற்களின் எனாமலை ஃப்ளோரைடு உறுதிப்படுத்துவதோடு பற்களில் குழி விழுவதையும் தடுக்கிறது. போர்ஹென்ஸிலுள்ள ஃப்ளோரைடு பெரியவர்களுடைய பற்களின் எனாமலில், பற்சொத்தைக்குக் காரணமான கிருமிகளை எதிர்க்கும் சக்தியை வலுப்படுத்துகிறது.

ஃப்ளோரைடு அடங்கிய

போர்ஹென்ஸ்

ஈறுகள் பற்கள் இரண்டையுமே பாதுகாக்கிறது



266 F-172 TAM

Regd. T.M: Geoffrey Manners & Co. Ltd



REGISTERED No. QL 40/82
Registered as a Newspaper in Sri Lanka